# தொடக்கக்கல்வி ஆசிரியப் பட்டயக் கல்வி

## DIPLOMA IN ELEMENTARY EDUCATION D.El.Ed.

பருவம் - 3

## தாள் 302
## உட்படுத்திய கல்வியும் பள்ளிக்கூட அமைப்புகளும்

கேரள அரசு
பொதுக் கல்வித்துறை

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
**2019**

**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
*Website* : www.scertkerala.gov.in, *e-mail* : scertkerala@gmail.com
Phone : 0471 - 2341883, Fax : 0471 - 2341869
Typesetting and Layout : SCERT

©
Department of Education
Government of Kerala

# முகவுரை

# உள்ளடக்கம்

## பருவம் – 3

### தாள்-302 உட்படுத்திய கல்வியும் பள்ளிக்கூட அமைப்புகளும்


அலகு 1 - உட்படுத்திய கல்வி - இன்றியமையாமையும் முக்கியத்துவமும்

அலகு 2 - உட்படுத்திய கல்வி: பாட ஏற்பாடு பரிமாற்றமும் சூழல்சார் மாற்றமும்

அலகு 3 - மாற்றுத்திறனாளிகளைப் பகுத்தறிதலும் மதிப்பீடு செய்தலும்: ஆரம்பச் சிந்தனைகள்

அலகு 4 - பள்ளிக்கூட ஒருங்கிணைப்பும் மேலாண்மையும்

அலகு 5 - பள்ளிக்கூடப் பின்துணை அமைப்புகள்

அலகு 6 - பெற்றோரியக் கல்வி

அலகு 7 - பாலினச் சமத்துவக் கல்வி

## அலகு - 1

# உட்படுத்திய கல்வி - இன்றியமையாமையும் முக்கியத்துவமும்

### முன்னுரை

கல்வித்துறையில் பிறமாநிலங்களைப் பொறுத்தவரையில் கேரளா மிக முன்வரிசையில் நிற்கின்றது. உலகளாவிய தரத்தில் மிகக் கவனம் பெற்ற கல்விக் கொள்கையையே நாம் பின்பற்றுகிறோம். மாற்றுத்திறனாளிக் குழந்தைகளின் கல்வி, புனர்வாழ்வு என்பனவற்றில் கேரளா குறிப்பிடத்தக்க முன்மாதிரியான செயல்பாடுகளையே நடைமுறையில் கொண்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளின் பொதுக் கல்வியும் புனர்வாழ்வும் மிகவும் அந்நியப்பட்டு நின்ற ஒரு பழைய காலகட்டம் உலகளாவிய நிலையிலேயே நிலைகொண்டிருந்தது. (Age of segregation). பின்னர் காலங்கள் கழிந்த பின்னரே புனர்வாழ்வுச் (Rehabilitation) செயல்பாடுகள் தொடங்கின. உலகளாவிய நிலையில் வடிவம் பெற்ற சிந்தனை அறிவுகளின் விளைவாக மாற்றுத் திறனாளிகளுக்கும் முறையான கல்வி அளிக்கவேண்டும் என்ற சிந்தனை எழுந்தது. அதன் பயனாகச் சிறப்புக் கல்வியும் (special education) சிறப்புப் பள்ளிக்கூடங்களும் (special schools) தொடங்கப்பட்டன. பொதுப் பள்ளிக்கூடங்களில் ஒருங்கிணைந்த கல்வியும் (Integrated Education for the Disabled Children - IEDC) இறுதியில் உட்படுத்திய கல்வியும் (Inclusive Education) செயல்படுத்தப்பட்டுள்ளன.

### முக்கியக் கருத்துகள்

- **உட்படுத்திய கல்வி - விதிமுறை**

சாதி - சமய - இன - பண்பாட்டுப் பொருளாதார - சமூக வேறுபாடின்றி எவ்வித பாகுபாடும் இல்லாமல் மாற்றுத்திறனாளிகளான குழந்தைகள் சமவயதினரான சாதாரண குழந்தைகளுடன் முக்கியமான, முழு அளவில் பெறுகின்ற கல்வியே உட்படுத்திய கல்வி (Inclusive Education).

- **உட்படுத்திய கல்வி - கருத்து**

1990 இல் உட்படுத்திய கல்வி தொடங்கப்பட்டது. சமவயதினரான சாதாரண மாணவர்களும் மாற்றுத்திறனாளிகளும் ஒரே வகுப்பறையில் சேர்ந்திருந்து கற்றலை மேற்கொள்ளும் போது அறிவு, நாட்டம், சிந்தனைகள், முனைப்பு என்பனவற்றில் மிக உயர்தரம் ஏற்படும். ஒவ்வொரு குழந்தையும் வேறுபட்டவர் ஆவர் (Unique). உட்படுத்திய கல்வியில் இந்த வேறுபாடு அங்கீகரிக்கப்படுகிறது.

> மாற்றுத்திறனாளிகளின் உயர்வுக்காக ஐக்கிய நாட்டுச் சபை (UNO) 2006 இல் நடத்திய கூட்டத்தின் அறிக்கையில் (ஆர்ட்டிக்கிள் - 24) உட்படுத்திய கல்வி குறித்து இவ்வாறு கூறப்படுகிறது.)
>
> "Children with disabilities are not excluded from free and compulsory primary education or from secondary education on the basis of disabilities and can access an inclusive, quality and free education on an equal basis with others in the communities in which they live."

உட்படுத்திய கல்வி என்பது வகுப்பறையில் ஒதுங்கி நிற்கும் ஒரு கருத்து அல்ல மாறாக, கல்விச் செயல்பாடுகளுடன் சமூகத்தளங்களில் அலை வீசும் ஒரு பண்பாடும் ஆகும். இப்பண்பாட்டை நிலை நிறுத்த வேண்டியது சமூகத்தின் கடமையாகும்.

- **உட்படுத்திய கல்வியின் மனிதத்துவத் தளம்**

பயன்மிக்கக் கல்வியை அனைவரும் பெறுதல் என்பது அரசியல் அமைப்பு அளிக்கின்ற உரிமையாகும். கல்வி வரலாற்றிலேயே குறிப்பாக, மாற்றுத் திறனாளிகளைப் பொறுத்தவரை புலனுணர்வுச் சாத்திரம் (பிரத்யய சாத்திரம்) சார்ந்த ஒரு மாற்றமே உட்படுத்திய கல்வி. அனைவருக்கும் கல்வி என்ற உலகக் கண்ணோட்டத்துடன் விளிம்புநிலை மக்களும் பொதுக் கல்வியொழுக்கில் இணைக்கப்பட்டனர் என்பது கல்வியின் மனிதத்துவத் தளத்தை உயர்த்திக் காட்டுகிறது.

காலங்காலமாக நடைமுறைப்படுத்திய சட்டங்கள், உலகமயச் சிந்தனைகள் என்பனவற்றின் கோட்பாட்டுச் செயல்பாடுகள் வாயிலாக அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி (Education for all) உறுதிப்படுத்தப்பட்டதால், மாற்றுத்திறனாளிக் குழந்தைகளையும் உட்படுத்தப்பட்டதன் வாயிலாகப் பொதுக் கல்வி செயல்படுத்தப்பட்டது.

| |
|---|
| UNICEF இன் 2003 ஆம் ஆண்டு கணக்கெடுப்பிற்கு ஏற்ப மிதமான (mild, moderate) உளச் சவால்களைச் சந்திக்கின்ற மாற்றுத்திறனாளிக் குழந்தைகளில் 70% பேருக்குப் பொதுப் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்க இயலும். தீவிரப் பிரச்சினை உள்ளவர்களுக்குச் சிறப்புப் பள்ளிக்கூடங்களே சாலச் சிறந்தன. |

- **இலக்குசார் கண்ணோட்டம்**

திறன்கள், பண்பாடு, சமூகப் பின்னணி, புத்திக்கூர்மை, பாலினம் என்பனவற்றில் வேறுபாடுகள் உள்ளன. எனினும் எவ்விதப் பாகுபாடுமின்றி இவர்களுக்குப் பொதுக் கல்வி கற்க வாய்ப்பு கிடைக்கிறது. கற்றல் செயல்பாடுகளில் முழுப்பங்களிப்பும் உறுதிப்படுத்தப்படுகிறது. சமநீதியும் சமவாய்ப்பும் சமபங்களிப்பும் மாற்றுத்திறனாளிகளுக்கும் கிடைக்கச் செய்தல் என்பதே உட்படுத்தப்பட்ட கல்வியின் இலக்குசார் கண்ணோட்டம்.

சமூகப் பண்பாட்டில் பின்தங்கிய நிலையில் உள்ளோர்
- சமூகப்புறக்கணிப்பை அனுபவிப்பவர்கள்
- பொருளாதாரத்தில் பின்தங்கியோர்
- விளிம்புநிலையில் உள்ளோர்
- பண்பாட்டு நிலையில் பின்தங்கியோர்

மாற்றுத்திறனாளிக் குழந்தைகள்
- உடல் குறைபாடு உள்ளோர்
- புத்திக் குறைபாடு உள்ளோர்
- உணர்வுசார் குறைபாடுள்ளோர்

மேதைமை மிக்கக் குழந்தைகள்
- மிகு அறிவுக்கூர்மை மிக்கவர்கள்
- படைப்புத்திறனை வெளிக்காட்டுபவர்கள்
- மேதைமை மிக்கோர்

- **உட்படுத்திய கல்வியின் மேன்மைகளும் குறைகளும்**

உட்படுத்திய கல்வி என்பது என்ன எவ்வாறு என நாம் அறிந்துகொண்டோம். மாற்றுத்திறனாளிக் குழந்தைகளைப் பொறுத்த வரையில் உட்படுத்திய கல்வி முறைக்கு ஏராளமான மேன்மைகள் உள்ளன. அவற்றில் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- அனைத்துப் பாகுபாடுகளும் விலகின.
- சமூகமயமாதல் நடைபெற இயன்றது
- மாற்றுத்திறனாளிக் குழந்தைகளின் நடவடிக்கைகளில் பாராட்டத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன.
- பல்வேறு பாடங்களின் கற்றல் அக்குழந்தையின் இயலாமைகளைக் கவனத்தில் கொண்டே ஏற்புடைமை சார்ந்து அமைகின்றன.
- தரம் மிக்கக் கல்வி குழந்தைகளின் உரிமை என்ற நிலையில் மாற்றுத்திறனாளிக்கும் அனுபவிக்க முடிகிறது.
- பள்ளிக்கூடச் சூழலில் உள்ள அனைத்துச் செயல்பாடுகளிலும் பங்குபெற மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கு வாய்ப்புகள் கிடைக்கின்றன.
- பள்ளிக்கூடச் செயல்பாடுகளில் சமூக ஈடுபாடுகள் இணைந்திருப்பதால் மாற்றுத்திறனாளிக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சி வேகமாக இயங்குகிறது.
- கற்றலிலும் வாழ்வில் வெற்றிபெறுவதிலும் மாற்றுத்திறனாளிக் குழந்தைகளிடம் தன்னம்பிக்கை வளர்கிறது.
-
-
-
- **குறைகள்**
- பள்ளிக்கூடங்களும் வகுப்பறைகளும் முழுமையாக மாற்றுத்திறனுக்கு ஏற்ப அமையவில்லை.
- மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்குப் பொருத்தமான கற்றல் செயல்பாடுகளைத் தயாராக்குவதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் உதவுகின்ற சிறப்புப் பயிற்சி அனைத்து ஆசிரியர்களுக்கும் அளிக்கவில்லை.
- வட்டாரம் சார்ந்து அரசின் நடவடிக்கைகள் உரிய அளவில் கிடைக்கவில்லை.
- மாற்றுத் திறனாளிக்கு உரிய பாட ஏற்பாடு (பொருத்தமான பாட ஏற்பாடு இல்லை) வடிவம் பெறவில்லை.
-
-
-
- **உட்படுத்துதலும் ஜனநாயகமும் – உட்படுத்திய கல்வியின் நோக்கம், சமூகவியல், உளவியல்**

உட்படுத்திய கல்வி ஜனநாயகம் சார்ந்து நடைபெற வேண்டுமெனில் அந்த வட்டாரத்தின் 5 – 14 வயதுக்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளையும் உட்படுத்த இயலவேண்டும். (மாற்றுத்திறனாளிகளுக்கு 18 வயது வரை) ஒவ்வொரு குழந்தையும் பலவகை சார்ந்தோர் ஆகவும் (diversity) தனிப்பட்டோர் ஆகவும் (Uniqueness) இருப்பர் என்பதைக் கவனத்தில் கொண்டும் அந்த வட்டாரத்தின் பண்பாட்டுத் தனித்துவத்தைக் கருத்தில் கொண்டும் கல்வியை நடைமுறைப்படுத்த வேண்டும்.

சுருக்கத்தில் முழுமையாக மாற்றுத்திறனாளி சார் சூழலை உருவாக்கிக் கொண்டு தரம் மிக்கதும் பாகுபாடில்லாததும் ஆன கல்வி எந்தப் பள்ளிக்கூடத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதோ அங்கேதான் உட்படுத்திய கல்வி எதார்த்தமாக நடைபெறுகின்றது.

சொந்தவீடு போன்று பள்ளிக்கூடத்தையும் வீட்டின் உறுப்பினர்களைப் போன்று பள்ளிக்கூடத்தில் உள்ளவர்களையும் காண்பதன் வாயிலாக மாற்றுத்திறன்சார் சூழல் உருவாக்கம் பெறுகின்றது. பொதுச் சமூகத்தின் தொடர்புகள் உள்ள இடத்தில் மாற்றுத்திறனாளிகளான மாணவர்களின் கல்வி நன்முறையில் நடைபெறும். இவ்வாறெனில் நாம் உட்பட்ட சமூகம் செய்கின்ற பொறுப்புணர்விற்க அப்பால் உலகமக்களுக்கு முன்மாதிரியாக இம் முயற்சி அமையும்.

**செயல்பாடு**

உட்படுத்திய கல்வியின் கருத்துக் கண்ணோட்டம், மனிதத்துவம் என்பன குறித்துள்ள பார்வை நூல்கள் வாயிலாக மேலும் பல தகவல்கள் சேகரித்து வகுப்பறையில் கலந்துரையாடல் நடத்தவும்.

**ஒப்படைப்பு**

மேலே கூறிய செயல்பாடு நிறைவுறும்போது உருப்பெற்று வரும் கருத்துகளை உட்படுத்தி, உட்படுத்திய கல்விக் கண்ணோட்டம், மனிதத்துவம், நோக்கம் என்பன பற்றி ஓர் ஒப்படைப்பு தயார் செய்யவும்.

உட்படுத்துதல் கல்வியின் கரு என்பது மாற்றுத்திறனாளிக் குழந்தைகள் அனைவரையும் அவர்களின் வயது, இயலாமைகள் என்பனவற்றிற்கு ஏற்ப கல்வி அளித்தல் என்பதாகும். இது நிறைவேறவேண்டுமெனில் மாற்றுத்திறனாளிகள் யாவர் என்றும் அவர்களின் வேறுபட்ட பிரிவினர் எவரெல்லாம் என்றும் அறிந்திருக்கவேண்டும். 1955 இன் PWD சட்டத்தில் 7 பிரிவுகள் உட்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் RPWD ஆக்ட் - 2016, மேலும் 14 பிரிவுகள் உட்படுத்தி மொத்தம் 21 ஆக விரிவாக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவு பற்றியும் தெளிவான அறிவு ஆசிரியர்களுக்கு இருக்கவேண்டும். ஒவ்வொரு குறைபாடு சார் பிரிவையும் உட்படுத்திக் கொண்டுள்ள கற்றல் சூழலைப் பள்ளிக்கூடங்களில் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக ஒரு முறையியலைத் தயாராக்க வேண்டும்.

## முக்கியக் கருத்துகள்

### மாற்றுத்திறனாளிகள்/தனிக் கவனத்திற்கு உரியோர்

உடலும் புத்தியும் உணர்வும் சார்ந்த ஏதேனும் குறைபாடோ இன்னலோ காரணம் சமவயதினர் போன்று அன்றாடச் செயல்பாடுகள் செய்ய இயலாதோர் உள்ளனர். இவர்களை மாற்றுத் திறனாளிகள் என அழைக்கலாம். அதாவது எலும்பு / தசை / நாடி தொடர்பான பிரச்சினைகளினாலோ இன்னல்களினாலோ அசைவுசார் செயல்பாடுகள் செய்வதற்கு இயலாதவர்களை உடல்சார் குறைபாடுள்ளோர் (physically challenged) என்று அழைக்கலாம். புத்திவளர்ச்சி குறைந்தவரும் (delayed intellectual development), புத்திசாலித்தனம் (IQ) சராசரியில் குறைந்தவர்களும் புத்தி இயலாமை உள்ளவர்களும் (intellectually challenged) என்று அறியப்படுகின்றனர்.

உணர்வுகளையும் சிந்தனைகளையும் கட்டுப்படுத்த இயலாதவர்களும் திடீரென்று அமைதி இழப்பவர்களும் ஆனால் உணர்வுகளுக்கு வேகத்தில் அடிமையாகின்றவர்களும் உணர்வுசார் பிரச்சினைகள் உள்ளோர் (emotionally) பிரிவில் உட்படுவர்.

## மாற்றுத்திறனாளிகளின் குறைபாடுகள்

i) அசைவுசார் பிரச்சினைகளால் அன்றாடக் காரியங்கள் சுயமாகச் செய்ய இயல்வதில்லை.

ii) புத்திசார் குறைபாடால் விவேகத்துடன் பழக இயல்வதில்லை. பின் விளைவுகளைப் புரிந்துகொள்ளாமல் செயல்படுவதால் விபத்துகளின் வாய்ப்பு கூடுகிறது.

iii) சமூகச் சட்டங்களைப் பின்பற்றிப் பழக இயலாதிருத்தல்

iv) உணர்வுகளைக் கட்டுப்படுத்த இயலாதிருத்தல் எனப் பல தனிப்பட்ட குணச்சிறப்பியல்பு களையும் மாற்றுத்திறனாளிகளிடம் காண இயலும். அதனாலேயே இப்பிரிவினரின் கல்வித் தேவைகள் நிறைவேற சிறப்பியல்சார்ந்த கற்றல் செயல்பாடுகளையும் கற்றல் சூழலையும் தயாராக்க வேண்டியுள்ளது.

ஆனால் மேலே கூறிய ஏதேனும் காரியத்தில் ஒருவருக்குத் திறன் குறைபாடு உண்டெனில் அவருக்குப் பிற ஏதேனும் காரியத்தில் தனித் தகுதிகளோ திறன்களோ காணப்படலாம். இத்தகைய வேறுபட்ட திறனுள்ளோர் என்ற நிலையில் மாற்றுத்திறனாளிகள் என அறியப்படுகின்றனர் (Differently abled).

மாற்றுத்திறனாளிகள் எவர் எனவும் சிறப்புத் தன்மை எது எனவும் நாம் கண்டோம் அல்லவா. அவர்களைச் சட்டபூர்வமாக வகைப்படுத்திய 21 பிரிவுகளை அறியலாம்.

## முக்கியக் கருத்து

### பல்வேறு குறைபாடுகள் / இயலாமைகள் (RPWD Act). அவற்றின் தனித்தன்மைகளைப் பகுத்தறிதல்

1955 இல் இந்திய நாடாளுமன்றம் நடைமுறைப்படுத்திய PWD ஆக்ட் (Persons with Disabilities Act - 1995) கீழே கொடுக்கப்பட்டுள்ள ஏழு பிரிவுகள் மாற்றுத்திறன் பிரிவில் உட்படுத்தப்பட்டுள்ளன.

1. **முழுகுருடு (Blindness)**

சிகிச்சையினாலோ கண்ணாடி அணிந்தோ பார்வை கிடைக்காத தன்மையே குருடு. பார்வை இயலாமையால் ஓட்டுதல், வாசித்தல், பயணித்தல் எனப் பல்வேறு வாழ்வின் அன்றாடச் செயல்களில் சிரமங்கள் அனுபவப்படுகின்றன.

2. **பார்வைக் குறைவு (low vision)**

குறைவான அளவில் மட்டுமே இப்பிரிவினருக்குப் பார்வை உள்ளது. ஸ்டெல்லன் அறிக்கைபடி இவர்களில் பார்வைக் கூர்மை (Visual acuity) 6/18 அல்லது 20/60 ஆக இருக்கும்.

3. **குணப்படுத்தக்கூடிய தொழுநோய் (Leprosy cured)**

சிகிச்சையைத் தொடர்ந்து முழுமையாக நோய் அகன்று குணமாகும். இத்தகையோர் இப்பிரிவில் உட்படுவர். கை – கால் விரல்கள் தேய்ந்து போவதால் விரல்களைப் பயன்படுத்திச் செய்யவேண்டிய அனைத்துச் செயல்பாடுகளும் இவர்களுக்குச் சிரமமாக இருக்கும்.

4. **அசைவு சார் குறைபாடு (Locomotor disability)**

எலும்பு – நாடி – தசை தொடர்பான சிரமங்கள் உடையோர் இப்பிரிவில் உட்படுவர். சுதந்திரமாக நடக்க இவர்களால் இயலாதது.

5. **கேள்விக் குறைவு (Hearing impairment)**

முழுமையாகவோ குறைவாகவோ செவித்திறன் பிரச்சினை உள்ளவர்களை இப்பிரிவில் உட்படுத்தலாம். கேட்பதன் வாயிலாகக் கிடைக்கும் தகவல்களை உள்வாங்க இயலாதிருப்பதால் மொழிக் கற்றல் சிரமம் உடையதாகின்றது.

6. **புத்திக் குறைவு (Intellectually challenged)**

புத்திவளர்ச்சி மாற்றத்தால் கருத்துப்பரிமாற்றம், சமூக ஈடுபாடுகள், மனமுதிர்ச்சி, உள்வாங்கும் திறன் என்பனவற்றில் வெளிப்படையான குறைபாடுகள் காணப்படும் நிலைமையையே புத்திக் குறைவு சுட்டுகின்றது. மாற்றத்தின் அளவுக்கு ஏற்ப மிதம் (mild and moderate) தீவிரம் (severe) அதி தீவிரம் (profound) என இப்பிரிவு வகைப்படுத்தப்பட்டுள்ளது. புத்தி அளவு (IQ) 70% இல் கீழாக இருக்கும்.

7. **மன நோய் (Mental Illness)**

மனநோயால் மனதின் சமநிலையில் மாற்றம் நிகழ்கிறது. சிகிச்சையால் குணமாகும் ஒரு நோயே இது.

மாற்றுத் திறனாளிகளின் உரிமைப் பாதுகாப்புச் சட்டம் 2016 (The Rights of Person With Disabilities Act 2016) இல் மேலே கூறிய 7 பிரிவுகளுக்கும் மேலாக 14 பிரிவுகளும் உட்படுத்தப்பட்டுள்ளன. அவை கீழே சேர்க்கப்பட்டுள்ளன.

1. **குள்ளத்தன்மை / டுவார்பிசம் (Dwarfism)**

உடலின் உயரக் குறைவே முக்கிய அறிகுறி. சராசரி உயரம் 4 அடியாகும். புத்திக் குறைவு இப்பிரிவினருக்கு இல்லை.

2. **தற்புனைவு ஆழ்வு / ஆட்டிசம் (Autism Spectrum Discorder - ASD)**

மூளையின் நியூரோன்களின் வளர்ச்சிக் குறைபாடின் ஒரு தன்மையே ஆட்டிசம். மூன்று வயதின் உள்ளாகவே அறிகுறிகள் வெளிப்படும். கனவுபோன்ற இயல்பே ஆட்டிசம். சொந்தம் உலகில் பயணிக்கும் தன்மை. உணர்வுக்கும் சிந்தனைகளுக்கும் இடமில்லை. ஆனால் திடீரென்று கோபம் வரும். ஒரே முறையிலான உடல் சைகைகள் செய்து கொண்டே இருப்பர். முகம் பார்த்துத் தேவைகள் சொல்வதில்லை. ஏதேனும் கேட்பதைச் சிலவேளைகளில் அப்படியே திருப்பிச் சொல்வர். இவற்றில் பல ஆட்டிசத்தின் அறிகுறிகள். மருந்து அளித்துக் குணப்படுத்த இயலாது. முன்னரே கண்டுபிடித்து பயிற்சி அளித்தால் ஓரெல்லை வரை அதன் தீவிரத்தைக் குறைக்கலாம். ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளில் சிலர் அசாதாரண பிற திறன்களை வெளிப்படுத்துவதுண்டு. (இசை, ஓவியம் என்பன)

3. **பெருமூளை வாதம் / செரிபிரல் பாள்சி (Cerebral Palsy)**

மூளைத் தாக்கத்தால் தசைகளுக்கும் எலும்புகளுக்கும் ஏற்படுகின்ற பலக் குறைவே அறிகுறி. அதனால் நிமிர்ந்து நிற்கவோ சுதந்திரமாக நடக்கவோ தசைகளைக் கட்டுப்படுத்தவோ இயலாது. பிறப்பால் நிகழ்வதே இது. மூளைக்கு ஏற்படுகின்ற சதைவோ பிற தகராறுகளினாலோ பிறந்த பின்னரும் இத்தன்மை உண்டாகலாம். சி.பி என்ற சுருக்கப் பெயரில் அறியப்படுகிறது.

4. **தசைச் சிதைவு நோய் / மஸ்குலர் டிஸ்ட்ரோபி (Muscular dystrophy)**

உடல் தசைகளின் பருமனும் வலுவும் குறைந்து உடல் அசைவுகளைக் கட்டுப்படுத்த இயலாத தன்மையே மஸ்குலர் டிஸ்ட்ரோபி. தசைகளில் விறைப்பும் கடினத்தன்மையும் உண்டாகும்.

தத்தித்தத்தி நடப்பது போலேயும் விரல் அமர்த்தி நடப்பது போலேயும் காணப்படுகின்றனர். அமர்ந்தால் எழவோ நிமிர்ந்து நிற்கவோ இயலாது. அடிக்கடி வீழ்ந்து விடுவர். மூச்சுத்தடை கூடுதலாக அனுபவப்படும். சிகிச்சையால் முழுமையாகத் தீர்வு காண இயலாது. உரிய பயிற்சியால் வேதனையின் தீவிரத்தைக் குறைக்கலாம்.

5. **ஆசிட் வீச்சால் ஏற்படும் இயலாமைகள் (Acid attact victims)**

முகமும் உடலும் ஆசிட் வீழ்ந்து பொள்ளல் ஏற்று விகாரமாகக் காட்சி அளிப்பதே இத்தன்மை. ஆசிட் வீச்சால் இது நிகழ்கிறது. கூடுதலும் பெண்களே இதன் இரைகள் ஆகின்றனர். வேதனை, தனிமைப்படல் என்பன அனுபவிக்கின்றனர்.

6. **பார்க்கின்சன்ஸ் நோய் (Parkinson's disease)**

முதியோரிடம் காணப்படும் ஒரு நோய் தன்மையே பார்க்கின்சன்ஸ். உடலின் பொதுச் சோர்வுத் தன்மையில் தொடங்கி எளிதான உடல் அசைவுகளைத் தடைப்படுத்துமாறு தலையும் கைகளும் நடுங்குதல், வெட்டுதல், தசைகளைக் கட்டுப்படுத்த இயலாதிருத்தல். நடுநிலையாக நிமிர்ந்து நிற்க இயலாதிருத்தல், குனிந்து நடத்தல் எனும் அறிகுறிகள் தென்படுகின்றன. இவை முறையே பெருகிக் கொண்டிருக்கும். சிகிச்சையால் இந்த நோய் தன்மையை முழுமையாகக் கட்டுப்படுத்த இயலாதெனினும் அறிகுறிகளின் தீவிரத்தைக் குறைக்க சிகிச்சையால் இயலும்.

7. **திசு பன்முகக் கடினமாதல் / மல்ட்டிபிள் ஸ்க்லிறோசிஸ் (Multiple sclerosis)**

மூளையிலும் முதுகெலும்பிலும் உள்ள நாடிகளில் தகராறு ஏற்படும் போது நிகழ்கின்ற தன்மையே மல்ட்டிபிள் ஸ்க்லிறோசிஸ். கை கால்களுக்குப் பலக் குறைவு, உழைச்சல், தசைகள் இறுகிப் பிடித்தல், பார்வை மங்குதல், பேசுவதற்கு இயலாமை, உணவு உண்ண இயலாமை, நிற்பதற்கு இயலாமை என்பன அறிகுறிகள் ஆகும். முன்னரே நடத்தும் சிகிச்சை நோயின் தீவிரவாதத்தைக் குறைக்கும்.

8. **இரத்த அழிவுச் சோகை / தலாசீமியா (Thalassemia)**

இரத்தத் தொடர்பான ஒரு மரபு சார் நோய் தன்மையே தலாசீமியா. சிவப்பு இரத்த அணுக்களின் தவறான அமைப்பால் ஹீமோகுளோபின் உருவாதல் தடைபடுகிறது. வறண்டுபோதல் பாதிக்கின்றது. வயிறும் மண்ணீரலும் (இரைப்பையில் உள்ள ஒரு சுரப்பி) நீர் கூடிப் பெரிதாகின்றன. நீண்டகால வாழ்வு நடைபெறாமல் போகும். இரத்தம் மாற்றுதல், அறுவை, மருந்து எனும் நடவடிக்கைகள் சிகிச்சை முறைகளாகும்.

9. **இரத்தம் உறையாமை / ஹீமோபீலீயா (Haemophilia)**

உடலின் தனிப்பட்ட புரோட்டின் குறைவின் காரணமாக இரத்தம் கட்டிப்பிடிக்க இயலாத தன்மையே ஹீமோபீலீயா. சிறு காயங்களுக்குக்கூட பெரும் இரத்தம் உடலிலிருந்து ஒழுகிப்போகும். மலம், சிறுநீர், மூக்கு, ஈறு என்பனவற்றின் வழியாக இரத்த இழப்பு அதிகமாகின்றது. இது மரபுசார்ந்த இரத்தம் தொடர்பான ஒரு நோய் தன்மையாகும். பெற்றோரிடமிருந்து பெறுகின்ற குரோமோசோம்களில் உள்ள தகராறால் முக்கியமாக ஹீமோபீலியா உண்டாகின்றது.

10. **அரிவாளணுச் சோகை (Sickle cell Disease)**

இரத்தத் தொடர்பானதும் மரபு சார்ந்தும் வருகின்ற நோயே அரிவாளணுச் சோகை நோய். சிவப்பு இரத்த அணுக்களின் தவறான அமைப்பே காரணம். உடல் உயிரணுக்களில் இரத்தம் வாயிலாக ஆக்சிஜன் கொண்டு செல்கின்ற ஹீமோகுளோபினுக்குத் தவறான அமைப்பு

வந்தவுடன் உடலின் மூச்சுக் காற்று கிடைத்தல் குறைகின்றது. வறண்டு போதல் அனுபவப்படுகிறது. மூச்சுக் காற்றை உடல் உயிரணுக்களில் கொண்டு செல்ல இயல்கின்ற தனிப்பட்ட வடிவ அமைப்புள்ள (டிஸ்கின் வடிவம்) இரத்த அணுக்களுக்குப் பதிலாக நீண்டு வளைந்த அரிவாள் வடிவிலான இரத்த அணுக்களுக்கு மூச்சுக் காற்றை உடல் உயிரணுக்களில் கொண்டு சேர்க்க இயலாது. இதுவே நோய் தன்மையின் காரணம். காலம் தாழ்த்தாமல் கண்டுபிடித்து சிகிச்சை செய்தால் குணப்படுத்தவோ தீவிரத்தைக் குறைக்கவோ இயலும். வாழ்வின் இறுதிவரை இத்தன்மை தொடரலாம்.

### 11. தீவிர நாடித் தகராறுகள் (Chronic Neurological disorders)

மூளை, முதுகெலும்பு என்பன இணைக்கின்ற நாடிகளுக்கு ஏற்படுகின்ற நோய் தன்மையே தீவிர நாடி நோய்கள். நாடி உயிரணுக்களுக்கு நிகழ்கின்ற நோயோ சிறு காயமோ கூட பல நோய்களுக்குக் காரணமாகின்றன.

உடல் ஒரு பக்கமாகவோ முழுமையாகவோ தளர்ந்து போகின்றது. தசைகளுக்குப் பலக் குறைவு காரணம் சுயமாகத் தசை அசைவு இயல்வதில்லை. புலன்களின் கூட்டுறவு நன்கு நடப்பதில்லை. காக்கா வலிப்பு, தலைவலி, வாசிக்க - எழுதச் சிரமப்படுதல் என்பனவே அறிகுறிகள். ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து சிகிச்சை அளித்தால் நோய் தீவிரமடையாமல் குணமாக்கலாம்.

### 12. மொழி - பேச்சுக் குறைபாடுகள் (Speech and Language Disability)

கருத்துப் பரிமாற்ற வழிமுறையான மொழியைத் தன்வயப்படுத்துவதில் சிரமம், தாமதித்துப் பேச்சு தொடங்குதல், ஒலித் தெளிவுடன் பேச இயலாமை இலக்கண விதிகள் பின்பற்றாத வாசிப்பும் எழுதுதலும் இலகுவாகப் பேசுவதில் சிரமம் என்பனவே அறிகுறிகள்.

### 13. குறிப்பிட்ட கற்றல் சார் குறைபாடு (Specific Learning Disabilities)

கற்றல் சார் குறைபாடு என்ற தன்மையைக் கற்றல் இடர்பாடுகள் (Learning disorders), கற்றல் வேறுபாடுகள் (learning differences) கற்றல் சிரமங்கள் (learning difficulties) எனத் தவறாகச் சொல்வதுண்டு. கற்றல் சார் குறைபாடு உள்ளோரின் நலனுக்காகச் செயல்படுகின்ற அமெரிக்காவின் 11 முக்கிய இயக்கங்களின் கூட்டுறவால் நாஷனல் ஜாயின்ட் கமிட்டி ஆப் லேனிங் டிஸ்எபிலிட்டீஸ் (NJCLD) 1998 இல் அங்கீகரிக்கப்பட்டதும் 2016 இல் புதுப்பித்ததும் ஆன விதிமுறை கீழே சேர்க்கப்பட்டுள்ளது.

மொழியைக் கேட்டுப் புரிதலிலும் சொல்லுதலிலும் வாசித்தலிலும் எழுதுதலிலும் கணக்கிடுதலிலும் உள்ள திறன்களைப் பெறுவதிலும் பயன்படுத்துவதிலும் காரணகாரியச் சிந்தனையிலும் வருகின்ற பெரும் இடர்பாடுகளின் வடிவில் அனுபவப்படுகின்ற வேறுபட்ட குறைபாடுகளே கற்றல் சார் குறைபாடு என்ற பொதுப் பெயரில் அனுபவப்படுகின்றது. ஆனால் இவர்களின் புத்தி அளவு சராசரியோ அதன் மேலோ இருக்கலாம். குறிப்பிட்ட கற்றல் சார் குறைபாடுகளை முக்கியமாக நான்காகப் பிரிக்கலாம். அவை

#### i) வாசிப்பு சார் குறைபாடு (Dyslexia or reading disorder)

- எழுத்துக்களின் பெயரும் ஒலியும் மாறிப்போதல்
- பொருள் உணர்வுடன் வாசிக்க இயலாதிருத்தல்
- சொற்களோ வரிகளோ விட்டுப்போதல்
- எழுத்து மாறிப்போதல்

- இல்லாத சொற்களைச் சேர்த்து வாசித்தல்
- தப்பித் தடவி வாசித்தல்

என்பன அறிகுறிகளாகும்.

**ii) எழுதுதல் குறைபாடு (Dyscalculia or writing disorder)**

எழுத்து வெளியீட்டுத் திறனை மொத்தத்தில் பாதிக்கின்றது. கையெழுத்து, கருத்துகள் உருவாக்கி எழுதுதல் என்பனவற்றில் சிரமங்கள் அனுபவப்படவோ எழுத்துக்கள் சொற்கள் என்பன விட்டுப்போகவோ கூட்டிச் சேர்க்கவோ செய்தல், எழுத்துக்கள் கண்ணாடியில் என்பதைப் போன்று திரிந்து காணுதல், எழுதுதலில் தெளிவும் ஒழுங்கும் இல்லாதிருத்தல், மெதுவாக எழுதுதல் என்பன அறிகுறிகளாகும்.

**iii) கணிதம் சார் குறைபாடு (Dyscalcuia or mathematical disorder)**

இலக்கங்களையும் எண்களையும் எழுதுவதிலும் கணக்கிடுவதிலும் சிரமங்கள் அனுபவப்படுகின்றன. கணிதப் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளுதல், விடைகளைக் கண்டுபிடித்தல், கணிதக் கோட்பாடுகளை நினைவுகூர்தல், நேரம், பணம் என்பன தொடர்பான கணக்குகள் செய்தல் ஆகிய திறன்களை எதிரிடையாகத் தாக்குகின்றன. எண் அறிவு, இடவிலை என்பனவற்றில் தெளிவின்மை, இலக்கங்கள் திரிந்துபோதல் (எ.டு 6 க்கு 9 என்றும் 5 க்கு 2 என்றும்) முன், பின், சிறிது, பெரிது என்பனவற்றில் கருத்துச் சிக்கல். இவை அனைத்தும் கணிதம் சார் குறைபாடின் அறிகுறிகளாகும்.

**iv) பேச்சு - மொழி உட்கிரகித்தல் சார் குறைபாடு (Speech and language disorder)**

ஒலிகளைப் பொருளார்ந்த சொற்களாக, மொழியாகப் பகுத்தறிந்து உட்கிரகித்தலில் திறனின்மையே இது. பேச்சு உட்பட்ட கருத்துப் பரிமாற்றத்திற்கு இடர் ஏற்படுகிறது. மொழி ஏற்பிலும் வெளியீட்டிலும் இடர்பாடு. உரிய சொற்கள் உச்சரிக்க இயலாமை. ஐம்புலன்கள் வாயிலாகத் தகவல்களை உள்வாங்கிப் புரிந்துகொள்ள இயலாமல் வருகிறது.

முன்னரே கண்டுபிடித்து உரிய கற்றல் பயிற்சிகள் வாயிலாக இக்குறைபாடின் தீவிரத்தைக் குறைக்கலாம்.

**14. பன்முகக் குறைபாடுகள் (Multiple disabilities)**

பெயர் போன்றே ஒன்றுக்கு மேற்பட்ட குறைபாடுகள். ஒன்றாக ஒருவரிடம் காணப்படுகின்ற தன்மையே இது. எடுத்துக்காட்டாக, கேள்விக்குறைவோ எலும்பு தொடர்பான சிரமங்களோ உண்டாதல். காணும் திறனின்மையும் கேட்கும் திறனின்மையும் ஒருவரிடம் ஒன்றாகத் தென்படலாம்.

**செயல்பாடு**

அருகாமையில் உள்ள பள்ளிக்கூடங்களைப் பார்வையிட்டதன் பின்னர் குழுக்களாகப் பிரிந்து பல்வேறு கற்றல் பிரச்சினைகள், அவற்றின் தனித்தன்மைகள் என்பன கலந்துரையாடுதல், அறிக்கை தயாராக்குதல், இணையம் பார்த்து குறைபாடுகளைக் கீழடக்கிப் புகழ்பெற்றோரைப் பற்றிய விளக்கம் தயார் செய்யவும்

மாற்றுத் திறனாளிகளின் கல்விச் சேவைகளைப் புரிந்துகொள்வதனுடன் அவர்களின் கல்வி வரலாறையும் அறிந்திருக்க வேண்டும். அவர்கள் கல்வி உரிமைகள் பெறுவதற்குச் செய்த முயற்சிகளின் நீண்ட வரலாறு உள்ளது. கி.மு காலகட்டத்திலிருந்து தொடங்கியதும் இருள் நிறைந்த

யுகம் வாயிலாகத் தாண்டிச் சென்று இன்று உட்படுத்திய கல்வியில் வந்து நிற்கும் போது சென்ற காலகட்டத்தை நோக்கி எட்டிப் பார்த்தல் பயனுள்ளதாக அமையும்.

**முக்கியக் கருத்துகள்**

மாற்றுத்திறனாளிகளின் கல்வி வரலாறு

புத்தி மந்தம் (புத்தி சார் சவால்) உள்ள குழந்தை பிறப்பது தெய்வக் கோபம் காரணத்தால் என்றும் சாத்தானின் (பேய்) அவதாரம் என்றும் சிந்தித்த ஒரு காலகட்டம் இருந்தது. இவர்களைக் காட்டில் புறக்கணித்துவிட்டுவிடுதலே பதிவு. அவர்களுக்கு வாழ உரிமை இல்லை என்று கருதிய ஒரு காலகட்டமாக இருந்தது. இச்சிந்தனை பின்னர் மாறியது. கொல்வதற்குப் பதிலாகத் தனித்து அமைந்துள்ள வீடுகளிலோ ஒளி நுழையாத அறைகளிலோ அடைத்து வைத்து உணவு அளிக்கும் முறை தொடர்ந்தது. இத்தகைய சூழலே அனைத்து நாடுகளிலும் காணப்பட்டது. மனித உரிமை இயக்கங்களின் தோற்றத்துடன் இம்முறைகளுக்கு மாற்றம் வந்தது. இவர்களுக்கும் வாழ உரிமை உண்டு என அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் பாரதத்தில் பண்டைய காலம் முதலே மாற்றுத் திறனாளிகளிடம் மென்மையான அணுகுமுறையே பின்பற்றப்பட்டது. உடலுறுப்புக் குறைபாடு வந்தவர்களுக்கு உரிய நிலையில் செயற்கை உறுப்பு பொருத்தியதன் எழுதப்பட்ட வரலாறு முதலில் பதிவு செய்யப்பட்டது ரிக் வேதத்தில் ஆகும். கி.மு 3500 – 1800 இடையில் விஷ்பல என்ற அரசி போரில் கால்கள் இழந்தாள் என்றும் இரும்பால் உருவாக்கிய செயற்கைக் கால்கள் பொருத்தி மீண்டும் போர் செய்தாள் என்றும் ரிக்வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கி.மு மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என நம்பப்படும் வடமொழி நூலே பஞ்சதந்திரக் கதைகள், விஷ்ணு சர்மா என்ற வடமொழிப் பண்டிதர் இதனை எழுதினார். சுதர்சன் என்ற அரசர் புத்திக் குறைவு உள்ள தன் மூன்று மகன்களுக்குக் கதைகள் வாயிலாக அறிவூட்டுதல் என்ற நோக்குடனே விஷ்ணுசர்மாவிடம் புத்தகம் எழுதுமாறு கூறினார். எந்த மாற்றுத் திறனாளிப் பிரிவைச் சார்ந்த குழந்தைக்கும் புரியும் விதம் எளிய நடையில் இந்நூல் படைக்கப்பட்டுள்ளது. அரபி, கிரேக்கம், இலத்தீன், ஆங்கிலம் என 50 க்கும் மேல் ஐரோப்பிய மொழிகளில் பஞ்சதந்திரம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை இப்புத்தகத்தின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துகிறது. மாற்றுத் திறனாளிகளுக்காகப் படைக்கப்பட்ட உலகின் முதல் புத்தகமே பஞ்சதந்திரம். இவர்களின் கல்விக்கும் உயர்வுக்கும் புனர்வாழ்வுக்கும் உரிய முக்கியத்துவம் இந்தியா அளித்துள்ளது. கோத்தாரி கமிஷன் (1964) அறிக்கையிலும் மாற்றுத்திறனாளிகளான குழந்தைகளுக்கும் இளைய தலைமுறையினருக்கும் வேண்டி 2005 இல் தோற்றுவித்த செயல்களிலும் 2006 இன் கொள்கை உருவாக்கத்திலும் உட்படுத்திய கல்வியைச் செயல்படுத்துதல் குறித்து ஆழமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1974 இல் தோன்றிய ஒருங்கிணைந்த கல்விச் செயல்பாடு (Integrated Education for the Disabled Children IEDC) இத்துறையின் ஒரு மைல் கல்லாகும்.

- தேசியக் கல்விக் கொள்கை (NPE), 1986
- தொடர் ஆசிரியப் பயிற்சிகள் (Continuous re-orientatin of pre-service and in-service teacher education programme)
- Project on Integrated Education for Disabled (PIED), 1986.
- Programme of Action (POA), 1992
- Revise IEDC scheme 1992 தொடங்கிய அனைத்தும் மாற்றுத் திறனாளிகளின் கல்வி வரலாற்றின் முக்கியச் செயல்களாகும்.

இக்கல்வி இலக்குகளை இவ்வாறு எளிதாகச் சுருக்கலாம்.

- குழந்தைகளின் வயது (Age appropriate) மனமுதிர்ச்சி என்பன சார்ந்த அறிவின் அடிப்படையில் பள்ளிக்கூடத்தில் நுழைவு அனுமதி அளிக்கவும்.
- பாகுபாடின்றி கல்வியை நிறைவு செய்ய இயலவேண்டும்.
- சமவயதினரான பிற குழந்தைகளுடன் சேர்ந்து முக்கியமான கல்வியைத் தரம் இழக்காது பெறச் செய்தல்
- உரியன வாயிலாக இயலாமைகளுக்குள் நின்று கொண்டே இயன்ற அளவில் அறிவைப் பெறுதல்
- வாழ்வின் வெற்றிக்கு உதவுமாறு புனர்வாழ்வு வாய்ப்புகளைத் தன்வயப்படுத்துதல்
- தன்னம்பிக்கையுடன் வாழ்க்கையைச் சந்திப்பதற்குத் தகுதி பெறுதல்
- சட்டம் கூறுகின்ற வசதிகளைப் பெறுவதற்குத் தகுதி பெறுதல் என்பன முக்கிய இலக்குகளாகும்.

**செயல்பாடு**

வருகை வல்லுனர்களின் உரையாடல் வாயிலாக மாற்றுத் திறனாளிகளின் கல்வி வரலாறு, இலக்குகள் என்பன புரிந்து கொண்டு கலந்துரையாடல் குறிப்பு தயாராக்கவும்.

**முக்கியக் கருத்துகள்**

எத்தகைய பள்ளிக்கூடங்கள் மாற்றுத் திறனாளிகளுக்குக் கல்வி அளிக்க வேண்டும்?

கல்விக்கு உரிய வயதினரான எந்தக் குழந்தையும் கற்க வேண்டியது பொதுப் பள்ளிக்கூடத்தில் ஆகும். ஆனால் இயலாமைகளின் அளவுக்கு ஏற்ப இது வேறுபடலாம். எடுத்துக்காட்டாக, உளச் சவால்களைச் சந்திக்கும் குழந்தைகள் அவற்றின் தீவிரத்துக்கு ஏற்ப mild, moderate, severe, Prefound என வகைப்படுத்தப்பட்டுள்ளனர். இதில் முதல் இரு பிரிவினரை உட்படுத்திய கல்வி அணுகுமுறை வாயிலாகப் பொதுப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்க வேண்டும். இறுதிப் பிரிவினருக்குச் சிறப்புப் பள்ளிக்கூடங்களே (Special school) உரியன. இவர்களுக்கு அன்றாட வாழ்க்கைத் திறன்கள் (Life skills) பெற தனிப்பயிற்சி அளிக்க வேண்டும். அதனாலேயே சிறப்புப் பள்ளிக்கூடங்களில் சேர்க்க வேண்டும் எனக் கூறப்படுகிறது. ஆனால் உட்படுத்திய கல்விக்குப் பயன்படும் விதத்தில் திறன்கள் பெற்ற குழந்தையைச் சிறப்புப் பள்ளிக்கூடத்திலிருந்து பொதுப் பள்ளிக்கூடத்தில் மாற்ற வேண்டும்.

**முக்கியக் கருத்துகள்**

பொதுப் பள்ளிக்கூடங்களும் சிறப்புப் பள்ளிக்கூடங்களும்

நம் அரசியல் அமைப்பு உறுதிப்படுத்தும் கல்வி உரிமைச் சட்டம் (Right to Education Act - RTE), மாற்றுத் திறனாளிகளின் உரிமைப் பாதுகாப்புச் சட்டம் (RPWD Act) என்பனவற்றின் கருத்தாழத்தை உட்கொண்டுள்ள கல்வியை 6 முதல் 18 வயது வரையுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் தரம் குறையாது இலவசமாக அளிக்கவேண்டியது அரசின் கடமையாகும். சிறப்புத் திறன்களைக் கவனத்தில் கொண்டு பாகுபாடின்றி சமவயதினருடன் கல்வி கற்க வேண்டுமெனில் அது பொதுப் பள்ளிக்கூடத்தில் மட்டுமே நடைபெறும். உட்படுத்திய கல்வியைக் கொள்கையாக ஏற்றுக்

கொள்ளப்பட்டமையால் அதனைப் பொதுப் பள்ளிக்கூடத்தில் மட்டுமே அளிக்க இயலும். ஒரே பாட ஏற்பாடு, ஒரே பாடப்புத்தகம், ஒரே கற்றல் சூழல், ஒரே இலக்கு என இவை அனைத்தும் உட்பட்டனவே பொதுப் பள்ளிக்கூடங்கள்.

தனிப்பட்ட இயலாமைகள் உள்ள குழந்தைகளுக்காகச் சிறப்புத் தன்மைகளோடு தயாராக்கிய பள்ளிக்கூடங்களே சிறப்புப் பள்ளிக்கூடங்கள். எடுத்துக்காட்டாக காணுதல், கேட்டல், புத்தி என்பன சார்ந்த குறைபாடுகள் உள்ளவர்களுக்காகச் சிறப்புப் பள்ளிக்கூடங்கள் உள்ளன. குறைபாடின் அளவு தீவிரமாக உள்ளவர்களுக்காக (severe & prefound) மட்டுமே இவை செயல்படுகின்றன. தீவிரமான புத்திசார் குறைபாடு உள்ள குழந்தைகளுக்குச் செய்யும் உதவிகளுக்குப் பொதுத் தன்மை காணப்படும். அடிப்படை வாழ்க்கைத் திறன்கள் பெறுதல் என்பதே முக்கிய இலக்கு. சிறப்புப் பள்ளிக்கூடம் அதற்காக வடிவமைக்கப்பட்டதும் ஆசிரியர்களுக்குத் தனிப்பயிற்சி அளிக்கப்பட்டதும் ஆகும்.

இந்தியாவில் முதலில் 1887 இல் அமிர்தசரசில் சிறப்புப் பள்ளிக்கூடம் நிறுவப்பட்டது. பார்வைக் குறைவு உள்ளவர்களுக்காக ஆனி ஷார்ப் (Anne sharpe) நிறுவனம் தொடங்கியது. சுதந்தரத்திற்குப் பின்னர் இந்தியாவில் 115 சிறப்புப் பள்ளிக்கூடங்கள் பார்வைக் குறைவு உள்ளவர்களுக்காகவும் 70 பள்ளிக்கூடங்கள் கேட்டல் - பேசுதல் குறைவு உள்ளவர்களுக்காகவும் 27 பள்ளிக்கூடங்கள் உளம் சார் சவால்களைச் சந்திக்கின்றவர்களுக்காகவும் அரசால் தொடங்கப்பட்டன. (Goel & Rao-2008).

சிறப்புப் பள்ளிக்கூடப் பயிற்சியின் பயனாக ஒரு குழந்தை உட்படுத்திய கல்வி கற்பதற்குத் தகுதி பெற்றால் பொதுப் பள்ளிக்கூடத்தில் அக்குழந்தையை மாற்ற வேண்டும். சிறப்புப் பள்ளிக்கூடத்தில் கற்கின்ற குழந்தைகளுக்குச் சமூக மயத் தொடர்பு குறைவாக இருக்கும் என்ற குறைபாடு உண்டு.

**செயல்பாடு**

மிக அருகாமையில் உள்ள ஒரு சிறப்புப் பள்ளிக்கூடத்தைப் பார்வையிட்டு அங்கு அளிக்கப்படும் சிறப்புப் பயிற்சிகள், சிறப்புத் தயாரெடுப்புகள் என்பன பற்றி அறிந்து கருத்தரங்க அறிக்கை தயாராக்கி வெளியிடவும்.

**முக்கியக் கருத்து**

சிறப்புக் கல்வி (Special Education)

குறைபாடின் தீவிரம், அளவு என்பனவற்றிற்கு ஏற்ப ஒவ்வொரு குழந்தைக்கும் அக்குழந்தையின் சிறப்புக் கல்வித் தேவைகளுக்கு ஏற்ப அளிக்கப்படும் கல்வியே சிறப்புக் கல்வி. இது பலவகைகளில் நடைபெறுகிறது. அவற்றுள் சில கீழே சேர்க்கப்பட்டுள்ளன.

a) ரசிடன்சியல் பள்ளிக்கூடம்

24 மணிநேரமும் வீட்டிலிருந்து மாறி வசிக்கவும் பயிற்சி அளிக்கவும் தயாராக்கியுள்ள நிறுவனங்களே ரசிடன்சியல் பள்ளிக்கூடங்கள். இங்கே கல்வியை விடப் பாதுகாப்பும் வாழ்க்கைத் திறன் பயிற்சியுமே நடக்கின்றன.

b) வீடுசார் கல்வி

நீண்டகாலம் சிகிச்சை தேவைப்படுவதோ தீவிர அசைவுப் பிரச்சினை உள்ளதினாலோ பள்ளிக்கூடம் போக இயலாத மாற்றுத் திறனாளிகளுக்கு வீட்டில் வைத்து கல்வி அளிக்கும் முறையே இது. வள ஆசிரியரோ பிற வல்லுனர்களோ வீட்டில் சென்று பயிற்சி அளிப்பர்.

c) சிறப்புப் பகல் நேரப் பள்ளிக் கூடம்

ஒரே வகையிலான குறைபாடுகள் உள்ள மாற்றுத்திறனாளிக் குழந்தை களுக்குப் பாதுகாப்பும் பயிற்சியும் பகல் நேரம் மட்டும் அளிக்கின்ற நிறுவனம். நிறுவனத்தின் வாகனத் தில் குழந்தையைப் பள்ளிக்கூடத் திலும் பின்னர் வீட்டிலும் கொண்டு விடுகின்றனர்.

d) பொதுப் பள்ளிக்கூடத்தின் சிறப்புசார் வகுப்பறையில் கற்றல்




e) பயணிக்கின்ற ஆசிரியையின் சேவை (Itinerant teacher)

1979 இல் இவலின் டெனோ (Evelyn Deno) சிறப்புக் கல்வி பற்றித் தயாராக்கிய வரைபட அமைப்பைப் பார்க்கவும்.

## முக்கியக் கருத்து

ஒருங்கிணைந்த கல்வி (Integrated Education for the Disabled Children - IEDC)

உட்படுத்திய கல்வியின் தொடக்கம் 1990 இல் எனினும் அதை நோக்கிச் செலுத்திய முக்கிய ஒரு மைல் கல்லே ஒருங்கிணைந்த கல்வி. 1974 இல் IEDC திட்டம் இந்தியாவில் தொடங்கப்பட்டது. இதற்கு ஏற்ப மாற்றுத்திறனாளிக் குழந்தைகளை அருகாமையில் உள்ள பள்ளிக்கூடங்களில் சேர்த்தல் என்பதே முதல் நடவடிக்கை. பொதுப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து கொண்டுள்ள சிறப்புக் கல்வியே குழந்தைகளுக்கு அளிக்க வேண்டும். மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்காகத் தனியாகத் தயாராக்கப்பட்ட வள வகுப்பறையில் தனிப்பட்ட முறையில் கற்பித்தல் என்ற முறையே ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாற்றுத் திறனாளிக் குழந்தைகளின் முக்கியக் கல்வி அந்நியமாகி நின்ற கட்டத்தில் தோன்றிய திட்டம் என்ற நிலையில் IEDC பொதுவாக வரவேற்கப்பட்டது. ஆனால் பொது வகுப்பறையிலிருந்து மாற்றப்பட்ட குழந்தை தனிமைப்படல் ஒரு குறைவாகவே தொடர்கிறது.



### முக்கியக் கருத்து

### உரிமைசார் கல்வி

ஒரு குடிமகனின் உரிமையே கல்வி கற்றல். அது அரசியல் அமைப்பு அளிக்கின்ற கல்வி உரிமைச் சட்டம் 2009 (Right to Education) படி இலவசமும் தரம் மிக்கதும் ஆன கல்வியை 6 வயதுக்கும் 14 வயதுக்கும் இடையில் உள்ள அனைவருக்கும் அளிக்க அரசுக்குக் கடமை உண்டு. மாற்றுத் திறனாளிக் குழந்தைகளின் வயது வரம்பில் 5 வயது சலுகையும் அனுமதிக்கப்பட்டுள்ளது. வயதுக்கு ஏற்ப வகுப்பறையில் சேர்ந்து கற்பதற்கு உரிய சுதந்திரம் மாற்றுத் திறனாளிகளுக்குச் (RPWD) சட்டம் அளிக்கின்றது. இந்த உரிமைகள் அனைத்தையுமே கவனத்தில் கொண்டே உட்படுத்திய கல்வி வடிவமைக்கப்பட்டுள்ளது.

**செயல்பாடு**

- இன்றைய வகுப்பறை உரிமைசார் கல்வியில் எந்த அளவில் உட்படுத்தப்பட்டுள்ளது என்று அருகாமையில் உள்ள ஒரு பொதுப்பள்ளிக்கூடத்தைப் பார்வையிட்டு ஒரு கண்ணோட்டத்தை உருவாக்கவும்.
- உட்படுத்திய கல்வியின் பல்வேறு முறைகளும் அவற்றின் இன்றியமையாமையும் என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கம் / சிறப்புப் பேச்சு நடத்துவதற்கு உரிய குறிப்பு தயாராக்கவும்.

மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் குறித்தும் உரிமைப் பாதுகாப்பு குறித்தும் தேசிய அளவிலும் உலக அளவிலும் ஏராளமான நடவடிக்கைகளும் சட்டங்களும் அல்லாமல் சட்டப் போராட்டங்களும் நடந்தன. 1989 இல் ஐக்கிய நாட்டுச் சபையின் உலகப் பொதுக்கூட்டமே அதில் முக்கியமானது. (UNCRPD - 1989). அனைத்துப் பாகுபாடுகளுக்கும் எதிராகவும் சுதந்திரத்திற்காக நிலை கொள்ளவும் சட்ட உருவாக்கம் நடத்தவும் உறுப்பு நாடுகளோடு வேண்டுகோள் எழுப்பிய தீர்மானமே அன்று ஐக்கிய நாட்டுச் சபை ஏற்றுக்கொண்டது.

**முக்கியக் கருத்து**

உரிமைப் பாதுகாப்புச் செயல்பாடுகள் உலக அளவில்

அமெரிக்காவில் 1960 இல் அன்றைய ஜனாதிபதி கென்னடி மாற்றுத்திறனாளிகளுக்கும் கல்வி கற்க உரிமை உண்டு என்றும் அதற்கு ஏற்ப கல்வி வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் வெளியிட்டார். அதற்காக விழிப்புணர்வுச் செயல்பாடுகள் நடைபெற்றன.

1975 இல் பிறப்பித்த Education for all Handicapped Children Act மாற்றுத் திறனாளிகளின் கல்விக்குப் பெரும் மாற்றம் விளைவித்தது. இதைத் தொடர்ந்து மிதக் குறைபாடு உள்ளவரை (mild and moderate) அருகாமையில் உள்ள பள்ளிக்கூடங்களில் சேர்த்து கற்பிக்கும் முயற்சி நடந்தது.

## ADA

1990 இல் 'The Americans with Disabilities Act (ADA)' பிறப்பிக்கப்பட்டது. இதற்கு ஏற்ப மாற்றுத்திறனுடன் தொடர்புள்ள அனைத்துப் பாகுபாடுகளையும் விலக்கி கற்றலிலும் தொழில் செய்வதிலும் சமவாய்ப்புகள் கிடைக்கின்றன என உறுதிப்படுத்தப்பட்டது.

பிரிட்டன், நோர்வே நாடுகள் (Norway, Sweeden, Finland, Denmark and Iceland), ஆஸ்திரேலியா எனும் நாடுகளிலும் பொதுவான நடவடிக்கைகள் மாற்றுத் திறனாளிகளின் கல்விக்கும் தொழிலுக்கும் வேண்டி நடத்தப்பட்டுள்ளன.

## IDEA

1975 இன் Education for All Handicapped Act திருத்தம் செய்து Individuals with Disabilities Education Act - IDEA க்கு 1990 இல் வடிவம் அளிக்கப்பட்டது. இந்தச் சட்டம் 2004 இல் திருத்தி அமைக்கப்பட்டது. தனிநபர் கல்வித் திட்டம் (Individualised Education Plan - IEP) என்ற சட்டபூர்வமான கருத்து வெளியிடப்பட்டது. IDEA சார்ந்தாகும். இதற்கு ஏற்ப மாற்றுத் திறனாளிகளான மாணவர்களுக்கு வேண்டிய தேவைகளைக் கண்டுபிடித்து கற்றல் செயல்பாடுகளை அருகாமையில் உள்ள பள்ளிக்கூடத்திலேயே கிடைக்கச் செய்யவேண்டும் என்பது சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- UN standard rules on the Equalisation of Opportunities for Persons with Disabilities (1993)
- UNESCO-Salamanca Statement (1994)
- Biwako Millenium Framework (2003),
- UNCPDD (2006)
- உலகளாவிய மாற்றுத் திறன் பத்தாண்டுகளின் 1983 – 1992 இன் வெளியீடு என்பன உலகளாவிய செயல்பாடுகள் ஆகும்.

- **Salamanca Statement (1994)**

  மாற்றுத்திறனாளிகளான அனைவருக்கும் சமநீதியும் சமவாய்ப்பும் சமப்பங்களிப்பும் கல்வித் துறையிலும் இருக்க வேண்டும் என மேலே கண்ட அனைத்துச் சட்டங்களும் ஒன்று போல் எதிரொலிக்கின்றன. 1994 இன் ஸாலமான்கா கூட்டத்தில் எடுத்த தீர்மானத்திற்கு ஏற்ப உட்படுத்திய கல்விக்கு மிகப் பெரிய முக்கியத்துவம் உண்டானது. கல்வி அனைவர்க்கும் என்ற உலகமயக் கொள்கையும் இத்துடன் நிறைவேறுகிறது.

- **UNCRPD (United Nation Convention on the Rights of Person with Disabilities)**

  1989 இல் இக்கூட்டம் நடந்தது. மாற்றுத் திறனாளிகள் அனுபவிக்கின்ற அனைத்துப் பாகுபாடுகளுக்கும் எதிராகச் சட்டம் இயற்ற உறுப்பு நாடுகளிடம் அறிவுறுத்தும் வெளியீடு இக்கூட்டத்தில் தான் நடந்தேறியது.

**செயல்பாடு**

மாற்றுத்திறனாளிகளின் உரிமைப் பாதுகாப்பிற்காக உலக அளவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எவை எனக் கலந்துரையாடி அறிக்கை தயாரிக்கவும்.

### முக்கியக் கருத்துகள்

தேசிய அளவில் உள்ள உரிமைப் பாதுகாப்புச் சட்டங்களும் ஆக்டுகளும் புரிந்துகொண்டனர்.

மாற்றுத் திறனாளிகளின் உரிமைப் பாதுகாப்பிற்காக உலக அளவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுடன் இந்தியாவிலும் சில முக்கிய நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. அவற்றில் சில கீழே சேர்க்கப்பட்டுள்ளன. உறுப்புக் குறைபாடு உள்ளோரின் கல்விக்கும் புனர்வாழ்வுக்கும் உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் பல தகவல்களை இந்த அலகில் உள்ள மாற்றுத் திறனாளிகளின் கல்வி வரலாறு என்ற பகுதியில் தரப்பட்டுள்ளமையைக் கவனிக்கவும்.

PWD ஆக்ட் 1995, மென்டல் ஹெல்த் ஆக்ட் 1987, நாஷனல் டிரஸ்ட் ஆக்ட் 1999, ஆர்.டி.இ.ஆக்ட்

2009, RPWD ஆக்ட் 2016 என்பனவற்றில் மாற்றுத்திறனாளிகளின் பல்வேறு உரிமைகள் குறித்தும் அவற்றைப் பாதுகாப்பதைக் குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

## முக்கியக் கருத்து

### மென்டல் ஹெல்த் ஆக்ட் - 1987

உளநோய் பாதித்தவர்களின் சிகிச்சைக்கும் பாதுகாப்பிற்குமாக 1987 மே 22 அன்று நடைமுறையில் வந்த சட்டம் இது. அதுவரை 1912 இன் Indian Lunacy ஆக்ட் நடைமுறையில் இருந்தது. மென்டல் ஹெல்த் ஆக்ட் 2017 ஏப்ரல் 7 அன்று திருத்தி எழுதிய மென்டல் ஹெல்த் கெயர் ஆக்ட் (Mental Health Care Act - 2017) நாடாளுமன்றம் நிறைவேற்றியது. இதற்கு ஏற்ப உளநோய் பாதித்தவர்களின் சிகிச்சை, தொடர்பாதுகாப்பு, அவர்களின் உரிமைப் பாதுகாப்பு, சொத்துப் பாதுகாப்பு என அனைத்திலும் உறுதி அளிக்கின்றது.

### நாஷனல் டிரஸ்ட் ஆக்ட் - 1999

ஆட்டிசம், செரிபிரல் பாள்சி, புத்திசார் குறைபாடு, பன்முகக் குறைபாடு (Multiple Disabities - MD) எனும் பிரிவில் உட்படுவோரின் நலனுக்காக 1999 டிசம்பர் 30 அன்று நாஷனல் டிரஸ்ட் ஆக்ட்டை நாடாளுமன்றம் நிறைவேற்றியது.

### ஆர்.டி.இ ஆக்ட் - 2009

Right To Education Act - (RTE Act) 2009 இல் நடைமுறையில் வந்தது. 6 – 14 வயதின் இடையில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் தரம்மிக்க இலவசக் கல்வி உரிமை இச் சட்டம் வாயிலாக அளிக்கப்பட்டது. எந்த ஒரு பள்ளிக்கூடத்திலும் 25% இருக்கை பின்தங்கியோருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிக் குழந்தைகளின் கல்வியை உறுதிப்படுத்துவதற்காக அவர்களின் வயது வரம்பு 18 ஆக உயர்த்தப்பட்டது.

### R.C.I Act - 1992 (Rehabilitation Council of India Act - 1992)

மாற்றுத் திறனாளிகளின் புனர்வாழ்வை இலக்காக்கி 1986 இல் பதிவு செய்யப்பட்ட ஒரு கழகம் டெல்லியில் வடிவம் கொண்டதுடன் 1992 இல் ஆர்.சி.ஐ என்ற நிலையில் உயர்ந்து, ஆர்.சி.ஐ ஆக்ட் நடைமுறையில் வந்தது. 2000 இல் இந்தச் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டது. முக்கியக் கருத்துகள் கீழே உள்ளன.

- மாற்றுத் திறனாளிகளின் பராமரிப்புக்கும் புனர்வாழ்வுக்கும் செயல்படும் நிறுவனங்களைக் கட்டுப்படுத்துதல், உரிய வழிமுறைகளை அளித்தல்
- மாற்றுத்திறனாளிகளைப் பராமரிக்கும் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளித்தல்
- அத்தகைய நிறுவனங்களிலிருந்து படித்து முடித்த புரொபஷனலுகளுக்கு அனுமதி அளித்தல்
- அங்கீகரிக்கப்பட்ட புரொபஷனலுகளின் புனர்வாழ்வுப் பதிவேட்டைப் பாதுகாத்தல் என்பன.

**முக்கியக் கருத்து** : *பி. டபிள்யூ டி ஆக்ட் - 1995*

Person with Disabilities (Equal opportunities protection of Rights and full participation) Act 1995 மாற்றுத் திறனாளிகளின் சமவாய்ப்பிற்கும் உரிமைப் பாதுகாப்பிற்கும் முழுப் பங்களிப்பு அளிக்கின்ற இது 1995 இன் ஆக்ட் என அறியப்படுகிறது. இந்தியாவின் மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக அரசு தரப்பில் நடந்த புரட்சிகரமான மாற்றமே பி. டபிள்யூ. டி ஆக்ட் வாயிலாக

நிகழ்ந்தது. ஏழு வகையிலான குறைபாடுகளே இந்தச் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. மேலும் பல விளக்கங்கள் பற்றி முன்னர் கலந்துரையாடியதை நினைவுகூர்வீர்கள் அல்லவா.

**முக்கியக் கருத்து** : *RPWD ஆக்ட் - 2016*

மாற்றுத் திறனாளிகளின் உரிமைப் பாதுகாப்புச் சட்டம் 2016 (The Rights of Person with Disabilities Act - 2016) 1995 இன் PWD சட்டத்துக்குப் பதிலாக 2016 டிசம்பரில் நாடாளுமன்றம் நிறைவேற்றிய சட்டமே RPWD ஆக்ட். இதில் உட்பட்ட 21 வகை இயலாமைகளைப் பற்றி முன்னர் கூறியதைக் கவனிப்பீர்கள் அல்லவா.

**செயல்பாடு**

மாற்றுத் திறனாளிகளின் உரிமைப் பாதுகாப்பு பற்றிய முக்கிய உலக அளவிலான பங்களிப்புகள் பற்றிக் கலந்துரையாடி அறிக்கை தயாரிக்கவும்.

**செயல்பாடு**

மென்டல் ஹெல்த் ஆக்ட் முதல் RPWD ஆக்ட் வரையிலான சட்டங்களைக் குறித்து வல்லுனர் உரையாடல் நடத்துவதற்கு உரிய குறிப்பு தயாராக்கவும்.

மாற்றுத்திறனாளிகளின் கல்வி, உடல் நலம், பாதுகாப்பு, புனர்வாழ்வு எனும் துறைகளில் பங்கு கொள்ளவும் பிரச்சினைத் தீர்வுக்குப் பயன்படும் வழிமுறைகளை அளிக்கவும் பயிற்சி உட்பட்ட ஏராளமான சேவைசார் செயல்பாடுகள் நடத்துவதற்குப் பல நிறுவனங்கள் அரசு தரப்பில் செயல்படுகின்றன.

**முக்கியக் கருத்து** *தேசிய அளவிலான நிறுவனங்கள்*

i) NIVH - National Institute of Visually Handicapped: பார்வைக் குறைவு உடையோருக்காக உத்தராகண்டின் டெராடூனில் செயல்படுகிறது. நடுவண் அரசின் சமூக நீதித் துறை கீழ் 1982 இல் நிறுவப்பட்ட தேசிய சுதந்திர ஆட்சி நிறுவனமாகும் NIVH.

ii) AYJNIHH (Ali Yavar Jung National Institute of Hearing Handicapped): கேட்டல் குறைவு உடையோருக்காகப் பயிற்சிகள், புனர்வாழ்வு, நிபுணர்களுக்கு உரிய பயிற்சிகள் எனும் இலக்குகள் நோக்கி மும்பையில் செயல்படுகின்ற நிறுவனமே AYJNIHH. 1983 ஆகஸ்ட் 9 அன்று மும்பையில் நிறுவப்பட்டது. தொடர்ந்து கல்கத்தா, நியூடெல்லி, செகந்திராபாத், புவனேஸ்வர் எனும் இடங்களில் ரீஜினல் – இன்ஸ்ட்டிட்யூட் நிறுவப்பட்டு செயல்படுகின்றன.

iii) NIOH (National Institute for Orthopaedically Handicapped - Locomotor Disability) மத்திய சமூக நீதித் துறையின் கீழ் 1978 இல் கல்கத்தாவில் நிறுவப்பட்ட சுயாட்சி நிறுவனமே NIOH. அசைவு சார் குறைபாடுகள் உள்ளவர்களுக்காகப் பயிற்சிகள், தெராப்பிகள், புனர்வாழ்வு எனும் துறைகளில் பங்கு பெற்று செயல்படுகிறது.

iv) SVNIRTAR (Swami Vivekanand National Institute of Rehabilitation, Training And Research) மத்திய சமூக நீதி வகுப்பின் கீழ் சுயாட்சி அதிகாரம் உள்ள நிறுவனமே SVNIRTAR. 1975 இல் ஒடீஷாவின் கட்டக்கில் நிறுவப்பட்டது. பிசியோதெராப்பி ஆக்குபேஷன் தெராப்பி, செயற்கை உறுப்பு உருவாக்கம் எனும் துறைகளில் செயல்படுகிறது.

v) NIMH (National Institute of Mental Health) அமெரிக்காவின் Health & Human Service Department இன் கீழ் புகழ் பெற்ற ஒரு நிறுவனமே NIMH மனநலக் குறைபாடுகளைத் தடைவதுடன் தீர்வு காண்பதும் இதன் இலக்காகும்.

vi) RCI (Rehabilitation Council of India) 1992 இல் நிறுவப்பட்டது. (முன்னர் விளக்கப்பட்டிருப்பதைப் பார்க்கவும்)

vii) AIISH (All India Institute of Speech & Hearing) மத்திய உடல்நல, குடும்ப நலத்துறையின் கீழ் 1966 இல் மைசூரின் மானசகங்கோத்ரியில் நிறுவப்பட்ட சுயாட்சி நிறுவனமே AIISH. நிபுணர்களுக்கு உரிய பயிற்சிகள், மனநலம்சார் சவால்கள், குறைபாடுகள் எனும் இடர்பாடுகள் அனுபவிக்கிறவர்களுக்காக மருத்துவச் சேவைகளும் (கிளினிக்கல் சேவைகள்) பெற்றோர்களுக்கும் பொது மக்களுக்கும் விழிப்புணர்வு வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. குறிப்பிட்ட துறைகளில் நிபுணர்களை உருவாக்குவதுடன் புரொபஷனல் பயிற்சித் தொடர்களையும் AIISH நடத்துகின்றது.

viii) NIMHANS (National Institute Mental Health & Neuro Sciences)

1847 இல் மனநோய் சிகிச்சைமையம் என்ற நிலையில் (Bangalore Lunatic Asylum) பெங்களூரில் ஆரம்பிக்கப்பட்டது. 1974 டிசம்பர் 27க்கு இந்த நிறுவனத்தை ஒரு சுயாட்சி நிறுவனமாக அறிவித்து NIMHANS என ஆக்கப்பட்டது. 1994 நவம்பர் 14 ஆம் தேதி நிகர்நிலைப் பல்கலைக்கழகப் பதவி கிடைத்தது. 2012 இல் தேசியத் தரம் மிக்க நிறுவனமாக நாடாளுமன்றம் சட்டம் நிறைவேற்றியது. காக்கா வலிப்பு நோயின் சிகிச்சை, புத்திசார் குறைபாடு உடையோருக்கான பராமரிப்பு, சிறப்புப் பயிற்சிகள், ஆராய்ச்சிகள் என்பன NIMHANS இன் சேவைகள்.

**செயல்பாடு**

மாற்றுத்திறனாளிகளின் உயர்வுக்காகத் தேசிய அளவில் உள்ள நிறுவனங்கள் பற்றிய ஏராளமான தகவல்களைச் சேகரிக்கவும். ஒவ்வொரு நிறுவனத்தின் தன்விவரங்கள் தயாராக்கவும்.

தேசிய அளவில் உள்ள நிறுவனங்கள் போன்று மாநில அளவில் அரசின் பல்வேறு துறைகள் மாற்றுத்திறனாளிகளின் கல்வி, நலம், பயிற்சி, புனர்வாழ்வு எனும் துறைகளில் சேவைகள் அளிக்கின்றன. உடல் நலம், கல்வி, சமூகநீதி, தன்னாட்சி நிறுவனங்கள் எனும் துறைகளின் கீழ் இந்நிறுவனங்கள் செயல்படுகின்றன. ஒவ்வொரு துறையும் வெவ்வேறு நிலையில் சேவைகள் அளிக்கின்றன. உதவித்தொகைகள், கருவி விநியோகம், தேர்வுச் சலுகைகள், இட ஒதுக்கீடுகள், மருத்துவச் சேவைகள் என ஏராளமான உதவிகள் உள்ளன.

**செயல்பாடு** : கல்வி நிறுவனங்கள், தன்னாட்சி நிறுவனங்கள், உடல்நலம், சமூக நீதி எனும் துறைகளில் பணியாற்றுபவர்களைக் கண்டுபிடித்து அறிக்கை தயாராக்கவும். நிறுவனங்களைப் பார்வையிட்டு பார்வையாளர் குறிப்பு தயாரிக்கவும்.

## அலகு - 2

# உட்படுத்திய கல்வி : பாடஏற்பாடு பரிமாற்றமும் சூழல்சார் மாற்றமும்

மாற்றுத்திறனாளிகளுக்குத் தனியான பாட ஏற்பாடு இல்லை. ஆனால் பாடஏற்பாடு பரிமாற்றத்தில் வேறுபாடுகள் உள்ளன. மாற்றுத்திறனாளிகளின் குறைபாடுகளைக் கருத்தில் கொண்டு பொருந்துகின்ற முறையில் செயல்பாடுகளை வடிவமைத்து பாடஏற்பாடு பரிமாற்றம் நடைபெறுகிறது. ஆனால் உட்படுத்திய கல்வி முறையில் பொது ஆசிரியரே பயன்மிக்க முறையில் பரிமாற்றம் செய்ய வேண்டும். கற்றல் செயல்பாடுகளில் பல்வேறானதும் வேறுபாடுகள் உள்ளனவும் குறைபாடுகளுக்கு ஏற்பனவும் கற்றல் உத்திகளை உருவாக்கி வகுப்பறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். இதற்காக ஆசிரியை கூடுதலான தயார் நிலைகளை வள ஆசிரியையுடன் சேர்ந்து நடத்த வேண்டும்.

| **முக்கியக் கருத்து** : *மாற்றுத் திறனாளிகளுக்குப் பாட ஏற்பாடு பரிமாற்றம்* |
|---|

இவர்களுக்கு வகுப்பறைச் செயல்பாட்டில் எவ்வாறு பௌதிக வசதிகளை ஒவ்வொரு மாற்றுத்திறனாளிக்கும் பொருந்தும் முறையில் தயார்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக இருக்கை வசதி பார்வைத்திறன், செவித்திறன் பிரச்சினை உடையோருக்கு வகுப்பறையின் முன் வரிசையில் கரும்பலகையின் அருகிலாக இருக்கை வசதிகளை ஒழுங்குபடுத்தலாம். சாதாரண பெஞ்சில் உட்கார இயலாதவர்களும் அசைவுசார் பிரச்சினை உள்ள பிற குழந்தைகளுக்கும் பொருந்துகின்ற நாற்காலிகளே அவசியம்.

பார்வைக் குறைவு உள்ளவர்களுக்குப் பெரிய எழுத்துக்களில் (Large Print) அச்சடித்த வாசிப்புக் கருவிகளை அளிக்கவேண்டும். கற்றல் உத்திகளிலும் பொருந்துமாறு வடிவமைக்கப்பட்ட கற்றல் கருவிகளைப் பயன்படுத்தவேண்டும். ஐம்புலன்களைப் பயன்மிக்க முறையில் உபயோகிக்க இயலுமாறு கற்றல் உத்தி அணுகுமுறை அமைய வேண்டும்.

| **முக்கியக் கருத்து** : *இவர்களுக்கு யாரால் உதவி புரிய இயலும்* |
|---|

### பொது ஆசிரியர்

பாட ஏற்பாடு பரிமாற்றம் செய்பவர் பொது ஆசிரியர். ஒவ்வொரு மாற்றுத் திறனாளிக் குழந்தையும் வேறுபட்ட, சிறப்பு உதவிகள் அவசியப்படுவதால் தனிநபர் கல்விச் செயல்பாடுகள் (unique) தயாராக்க அவர்களுக்கு உதவிகள் தேவைப்படும். வள ஆசிரியர் மற்றும் (IEP) பள்ளிக்கூட அறிவுரையாளரினுடையவும் உதவியுடன் மட்டுமே அவருக்கு இந்தக் கடமையை நிறைவேற்ற இயலும்.

### வள ஆசிரியர்

மாற்றுத் திறனாளிகளைப் பராமரிக்கவும் கற்பிக்கவும் தனிப்பயிற்சி பெற்றவரே வள ஆசிரியர். ஒவ்வொரு குழந்தையினுடையவும் அவசிய தேவையை உணர்ந்து அவர்களுக்குப் பொருந்துகின்ற கல்விச் செயல்பாடுகளைத் தயாராக்குவதற்குப் பொது ஆசிரியருடன் உதவி ஆசிரியரும் ஒரே நேரத்தில் வகுப்பறையில் இருப்பர் (Team Teaching). மேலும் தீர்வுணர்வு ஏற்படுத்தவும் மேலும் பல கல்விச் செயல்பாடுகள் அவசியமாகும் போது சாதாரண வகுப்பு நேரம் தவிர மேலும் உதவி ஆசிரியருக்கு உதவி வகுப்பறையில் வைத்து வகுப்பு நடத்த வேண்டிவரும்.

**சமசங்கங்கள்**

சக மாணவர்களான பிற குழந்தைகளின் உதவியையும் சேவைகளையும் மாற்றுத் திறனாளிக் குழந்தைகள் பெறச் செய்யலாம். தனியாகவோ குழுவாகவோ இந்த உதவி கிடைக்கச் செய்யலாம்.

## பெற்றோர்

மாற்றுத் திறனாளிகளின் நாட்டங்கள், சிறப்புத் திறன்கள், பழக்கவழக்கங்கள், இயலாமைகள் என்பன நன்கு அறிகின்ற பெற்றோர்களுக்கும் கற்றல் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதில் பொது ஆசிரியருக்கு உதவி புரியலாம். பெற்றோர்களுக்கும் பள்ளிக்கூடத்துக்கும் இடையில் உள்ள கருத்துப் பரிமாற்றமும் கூட்டுறவுணர்வும் மேம்பட்ட பயனை விளைவிக்கும்.

மாற்றுத் திறனாளிகளின் கல்விக்கும் புனர்வாழ்வுக்கும் மேம்பட்ட சேவை அளிக்க இயல்கின்ற ஒரு முகமையே பெற்றோர் சங்கம். ஏராளமான சங்கங்கள் இவ்வாறு செயல்படுகின்றன (APAHI (Association of Parents of Hearning Impaired), NAB (National Association for the Blind) என்பன எடுத்துக்காட்டுகள் ஆகும். கல்வி - புனர்வாழ்வு காரியங்களில் இன்று கிடைக்கப் பெறுகின்ற பல சலுகைகளும் உரிமைகளும் பெறுவதற்குப் பெற்றோர் சங்கத்திற்கு இயன்றுள்ளது.




**செயல்பாடு**

பள்ளிக்கூட அனுபவங்களின் அடிப்படையில் வகுப்பறைச் செயல்பாடுகளில் மாற்றுத்திறனாளிகள் சந்திக்கின்ற பிரச்சினைகள் எவை எனவும் அவற்றிற்கு அறிவுறுத்துகின்ற தீர்வு வழிமுறைகள் எவை என்றும் குழுவாகக் கலந்துரையாடவும். குறிப்புகள் தயாராக்கவும்.

**செயல்பாடு**

பள்ளிக்கூடங்களில் வள அறையைப் பார்வையிட்டு மாற்றுத் திறனாளிகளின் கற்றல் காரியங்களில் ஒரோ முகமைக்கும் எவ்வகையில் உதவலாம் என்றும் வள அறையில் உள்ள அமைப்புகள் எவ்வகைகளில் பயன்பாடு மிக்கன என்றும் நேர்காணல் வாயிலாகக் கண்டுபிடித்து குழுக்கலந்துரையாடல் நடத்தவும். ஒருங்கிணைத்து அறிக்கை தயாராக்கவும்.

சூழல்சார்புச் செயல்பாடுகள் (Adaptive measures) இல்லாமல் உட்படுத்திய கல்வியை நடைமுறைப்படுத்த இயலாது. அனைவரும் வேறுபட்டவர்கள். கற்றல் முறையிலும் வேறுபாடுகள் உள்ளன. அந்த நிலையில் மாற்றுத் திறனாளிகளின் இயலாமைகளைக் கவனத்தில் கொண்டுள்ள சூழல்சார் செயல்பாடுகளே அவசியம்.

## முக்கியக் கருத்துகள்

சூழல்சார்பு எங்கெல்லாம்

சூழல்சார்பு அவசியமான துறைகள் கீழே உள்ளன.




## பௌதிக வசதிகள்

உட்படுத்திய கல்வி அணுகுமுறையில் முதலில் அவசியம் பள்ளிக்கூடம் **மாற்றுத்திறனாளி நட்புப் பள்ளிக்கூடம்** என்ற நிலையில் உயர்வதாகும்.

- சரிவுப் பாதை (Ramp) தண்டவாளம் (Rail) நிறுவுதல்
- ஒவ்வொரு கட்டிடத்திலும் / பலமாடிக் கட்டிடத்திலும் ஒவ்வொரு மாடியிலும் சூழல் சார்புக் கழிப்பறை (Adapted Toilet) இருக்கவேண்டும். சுய அசைவுசார் பிரச்சினை உள்ளவர்களுக்குத் தனியாக ஏற்படுத்திய சக்கரநாற்காலி தேவைப்படும். ஒரு கட்டிடத்திலிருந்து அடுத்தக் கட்டிடத்தில் போக இயலுமாறு சரிவுப் பாதைகளோ தண்டவாளங்களோ நிறுவ வேண்டும். வகுப்பறைகளுக்கு நல்ல காற்றும் வெளிச்சமும் கிடைக்க வேண்டும்.

## பாட ஏற்பாடு

ஒரே பாட ஏற்பாடன்று அனைவருக்கும் உரியது. சூழல் சார்புடைய பாடஏற்பாடு நடைமுறையில் இல்லை. ஆனால் ஒவ்வொரு மாற்றுத்திறனாளியின் குறைபாடின் அளவுக்கு ஏற்ப பாடவரிசையில் தரக் குறியீடு தீர்மானிக்கலாம். அனைவரும் அனைத்தும் படிக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்துவதில்லை. புத்திசார் குறைபாடு உள்ள ஒரு குழந்தைக்கு ஆழமான கோட்பாடுகளைத் தன்வயப்படுத்த இயலாது அல்லவா.

கற்றல் கருவிகளைத் தேர்வு செய்வதிலும் கல்விச் செயல்பாடுகளைத் தயார்படுத்தும் போதும் ஒவ்வொரு குழந்தைக்கும் பொருந்தும் முறையில் சூழல் சார்ந்து அமைத்தல் வேண்டும். பார்வைக் குறைவு உள்ள குழந்தைக்காகப் பெரிய எழுத்துக்கள் உள்ள புத்தகத்தைப் பயன்படுத்துதல் கற்றல் கருவிகளின் சூழல் சார்ந்த அமைப்பாகும். பிரெய்லி, பதிவு செய்யப்பட்ட புத்தகம், ஒலிநாடா. கணினி, கணக்கிடுக் கருவி, சோதனைப் பட்டியல், நேரம் அளித்தல், பிற தகவல்நுட்பக் கருவிகளின் பயன்பாடு என்பன சூழல்சார் கருவிகள் ஆகும்.

மதிப்பீடு செய்தலிலும் இதற்கு ஏற்ப மாற்றங்கள் இருக்கவேண்டும். இப்பிரிவிலும் சூழல்சார் மாற்றம் அவசியமாகும்.

**செயல்பாடு**

மாணவர்கள் நான்கு குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு குழுவும் இனி சொல்கின்ற துறைகளில் ஒன்றினைப் பற்றி அதன் சூழல்சார் அமைப்பு பற்றிய வாய்ப்பு எவ்வாறு எந்த அளவில் எனக் கலந்துரையாடவும். கலந்துரையாடிய குறிப்புகளை ஒவ்வொரு குழுவும் பொதுவாக வெளியிடட்டும். அறிக்கை தயாராக்கவும்.

1. பௌதிக வசதிகள்
2. பாடஏற்பாடும் பாடப்புத்தகங்களும்
3. கற்றல் கருவிகளும் கற்றல் செயல்பாடுகளும்
4. மதிப்பீடு செய்தல்

## முக்கியக் கருத்து

சூழல் சார்ந்த கற்பித்தல் கையேடு தயாரிக்கும் போது கவனிக்க வேண்டியன யாவை?

எந்த ஒரு கற்பித்தல் செயல்பாட்டிலும் இன்றியமையாத காரணியே கற்பித்தல் கையேடு. பரிமாற்றம் செய்ய வேண்டியதன் முக்கியக் கருத்துகள், கற்பித்தல் உத்திகள், அவசியமான கருவிகள், நேர ஒழுங்கமைப்பு, கற்றல் - கற்பித்தல் செயல்பாடுகள், மதிப்பீடு செய்தலின் செயல்பாடுகள் என்பன உட்பட்டதே கற்பித்தல் கையேடு.

ஆனால் சூழல்சார் கற்பித்தல் குறிப்பேடு என்பது மாற்றுத் திறனாளியான ஒவ்வொரு குழந்தைக்கும் மிகப் பொருந்தும் முறையில் இயலாமைகளைத் தாண்டிச் சென்று கற்க இயலும் விதத்தில் மேலே கூறிய காரணிகளில் பொருந்துகின்ற மாற்றங்கள் செய்து தயாராக்கப்படுகிறது. கற்றல் செயல்பாடுகளில் குழந்தைக்கு உள்ள பலம் - பலவீனங்கள் (Strength & Weakness), ஆர்வங்கள், கல்வித் தரத்தின் அளவு என்பன புரிந்து கொண்டாலே சூழல்சார் குறிப்பேட்டைத் தயாராக்க இயலும். கற்றல் கற்பித்தல் உத்திகளை உருவாக்குவதிலும் கற்றல் கருவிகளை வடிவமைப்பதிலும் இந்த முன்னுரிமைகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு தயாராக்கிய சூழல்சார் ஆசிரியர் குறிப்பேட்டைப் பயன்படுத்திக் கற்றல் செயல்பாடுகளை நடைமுறைப்படத்துகின்ற கட்டமே மிக முக்கியமானது. ஒவ்வொரு குழந்தையினுடையவும் கற்றல் விரைவும் கற்றல் முறையும் வேறுபட்டிருப்பதால் அதைக் கருத்தில் கொண்டே கற்றல் செயல்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும். இச்செயலின் ஒவ்வொரு கட்டத்திலும் மதிப்பீடு செய்தலும் நடைபெற வேண்டும். மதிப்பீடு செய்தலின் அடிப்படையில் அவசியமான தீர்வுசார்ந்த கற்பித்தல் செயல்பாடுகளையும் உருவாக்கி நடைமுறைப்படுத்த இதனை வகுப்பறையில் வைத்தோ சனிக்கிழமை உட்பட்ட தினங்களிலோ நடத்தலாம்.



**செயல்பாடு**

கற்பித்தல் குறிப்பேடும் சூழல்சார் கற்பித்தல் குறிப்பேடும் எவ்வாறு வேறுபடுகின்றன என்றும் அதனை நடைமுறைப்படுத்துவதில் கவனிக்க வேண்டியன எவை என்றும் குழுக் கலந்துரையாடல் வாயிலாகக் கண்டுபிடித்து வெளியிடவும்.

வெளியீட்டின் போது ஒரு வள ஆசிரியரின் சேவையை உறுதிப்படுத்த வேண்டும் - பொதுக் கலந்துரையாடல் - தொகுத்தல்

ஒவ்வொரு மாற்றுத்திறனாளிக் குழந்தையும் வேறுபட்டு இருப்பதால் அக்குழந்தையின் சிறப்புசார் கல்வித் தேவைகளைப் பெறுவதற்கு உதவும் விதத்தில் தனிநபராகவே கற்றல் செயல்பாடுகளைத் தயாராக்க வேண்டியுள்ளது. தனிநபர், குடும்ப - சமூகச் சூழல்களையும் உடல் நலம் - கல்வித் தன்மையையும், இயலாமைகளின் அளவையும் நன்கு அலசி ஆராய்ந்து குழந்தைகளுக்குப் பொருந்தும் விதத்தில் தயாராக்குகின்ற தனிநபர் கல்விச் செயல்பாடே ஐ.இ.பி (Individulised Education Plan) R.T.E ஆக்ட் RPWD ஆக்ட் என்பனவற்றின் அடிப்படையில் IEP க்குப் பெரிய பங்குண்டு.

### முக்கியக் கருத்து

ஐ.இ.பி தயாராக்குதல் எவ்வாறு? கவனிக்கவேண்டிய காரியங்கள் எவை?

ஐ.இ.பி தயாராக்கும் போது ஏராளமான காரியங்கள் கவனிக்க வேண்டியுள்ளன. விளக்கமான மதிப்பீட்டின் (Detailed assement) அடிப்படையில் மட்டுமே ஐ.இ.பி தயாராக்க இயலும். இதற்கு இரு பகுதிகள் உள்ளன. ஒன்றில் குழந்தையின் சுய - குடும்ப - சமூக - உடல்நல - நாட்டம் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் சேகரிக்க வேண்டும். இரண்டில் குழந்தையின் அறிவுத்தரத்தின் நிலை எந்த அளவில் (current level) உள்ளது என்றும் சிறப்புசார் தேவைகள் எவை எனவும் (மேன்மைகளும் இயலாமைகளும்) ஆர்வங்கள் எவை எனவும் விளக்கமாகக் கண்டுபிடிக்கவேண்டும். இத்தகவல்களின் அடிப்படையில் ஓராண்டிற்குள் அடையவேண்டிய இலக்கு (Annual goal) தீர்மானிக்கப்படுகிறது. இந்த இலக்கை அடைய துணைபுரியும் விதத்தில் துணை இலக்குகள் (short term objective) எவை எனத் தீர்மானிக்க வேண்டும். இதன் அடிப்படையில் விளக்கமாகத் தயாராக்குகின்ற IEP க்கு ஏற்ப கற்பித்தல் குறிப்பேடு தயாராக்க வேண்டும். இயலாமைகளைக் கவனத்தில் கொண்டு பாடப்பொருளை வடிவமைத்து உரிய கற்றல் கருவிகளின் துணையுடன் ஆசிரியை கற்பித்தல் செயல்பாட்டை மேற்கொள்ள வேண்டும். இவை அனைத்தும் உட்கொண்டதாகக் கற்பித்தல் குறிப்பேடு அமைய வேண்டும்.

ஒவ்வொரு நாளும் அளிக்கின்ற செயல்பாடுகளுடன் குழந்தையிடம் காணப்படும் எதிர்வினையாடலுக்கு ஏற்ப கற்பித்தல் குறிப்பேட்டில், வள ஆசிரியர், பள்ளிக்கூட அறிவுரை வழங்குபவர், பெற்றோர் என்போர் அடங்குகின்ற குழு சேர்ந்திருந்து IEP தயாராக்க வேண்டும். பொறுப்பு பொது ஆசிரியருக்கு உரியது.

**செயல்பாடு**

உட்படுத்தப்பட்ட கல்வியை முன்மாதிரியாக நடத்துகின்ற பள்ளிக்கூடத்தைப் பார்வையிட்டு IEP தயாராக்கும் முறையினைப் புரிந்துகொள்ளவும்? IEP இன் மாதிரியை அறிமுகப்படுத்திக் கொள்ளவும்.

கற்றல் கற்பித்தல் செயல் வலுப்படுமாறு தகவல் தொழில் நுட்பங்களின் உதவியைப் பயன்மிக்க முறையில் உபயோகப்படுத்தவேண்டும். குறிப்பாக மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கு மிகப் பயன்மிக்கது. ஒரு கருவியோ, ஒரு பொருளோ ஓர் அமைப்போ ஆகலாம் இத்தகவல் தொழில் நுட்ப உதவி (Assistive Technology).

மாற்றுத் திறனாளிக் குழந்தைகளின் கற்றல் இயலாமைகளைத் தாண்டிச் செல்வதற்குத் தகவல் தொழில் நுட்ப வாய்ப்புகளைப் பயன்படுத்த இயலும். இவற்றின் பயன்பாடு மாணவரிடம் ஆர்வத்தையும் தன்னம்பிக்கையையும் ஊட்டுவதுடன் கற்றலும் பயன்மிக்கதாக அமையும்.

## முக்கியத்துவம்

ஒவ்வொரு மாற்றுத்திறனாளிக் குழந்தையினுடையவும் இயலாமையின் இயல்புக்கு ஏற்பவே அதற்கு உரிய கருவியைத் தேர்வு செய்யவேண்டும். அத்துடன் மாணவரை மையப்படுத்தியதும் சூழல்களுக்கு ஏற்பனவும் இலக்கில் வேரூன்றியதும் ஆனதகவல் தொழில்நுட்ப உதவி அமைப்பினைத் தேர்வு செய்வதிலும் பயன்படுத்துவதிலும் மிகக் கவனம் தேவையாகும். இவ்வாறு தேர்வு செய்யும் அமைப்புகள் குழந்தையின் கற்றலில் பயன்மிக்க மாற்றத்தையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும்.

### எத்தகைய அமைப்புகள் கிடைக்கின்றன? எவர்களுக்கு உதவி செய்கின்றன?

**பார்வைசார் குறைபாடு உள்ளவர்களுக்கும்** தொலைபேசி, டிஜிட்டல், ஒலி, பதிவுநாடா, குறுந்தகடு CD என்பன வாயிலாகக் குழந்தை அறியவேண்டிய காரியங்களைப் பதிவு செய்து தேவைக்கு ஏற்ப கேட்க முடியும். Voice recognition software, Text to speech software, Braille translation software என்பனவும் பார்வைத்திறன் சார் குறைபாடு உள்ளவர்களுக்கு உதவி புரிகின்றன.

### செவித்திறன் சார் குறைபாடு உள்ளவர்களுக்கு

Chat pack desktop, Link-it array microphone system, Tactaid எனும் மென்பொருள்கள் உள்ளன (sy:http:\\slide player.com\slide\5040851/).

**ஆட்டிசம்** பாதித்தவர்களுக்கு டிஜிட்டல் நிழற்படக் கருவி, picture making software என்பன பயன்தருவன. அசைவுசார் குறைபாடு உடையவர்களுக்கு voice recognitation software, Text ot speech software, switches, Altered keyboards, modified mouse என்பன பயன்படுத்தலாம்.

### தகவல் பரிமாற்றத்தொழில் நுட்பம் (ஐ.சி.டி) பாட ஏற்பாடு பரிமாற்றத்தில்

பாடஏற்பாடு பரிமாற்றம் பயன்மிக்கதாக அமைய தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பத்தை உபயோகிப்பது உண்டு. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஐ.சி.டி வாய்ப்புகளை இதற்காகப் பயன்படுத்தலாம்.

- இணையதளம்
- உயர்ரக வகுப்பறைகளின் பயன்மிக்கப் பயன்பாடு
- எல்.சி.டி புரொஜக்டரின் உபயோகம் / டி.எல்.பி புரொஜக்டர் பயன்பாடு
- மின் கற்றல் பொருட்கள்
- மின்வாசிப்பு மென்பொருட்கள்
- பல்லூடக வாய்ப்புகள்
- கணினி / அலைபேசி / கையடக்கக் கணினி (Tab)
- பல்வேறு கல்வி மென்தளங்கள் (Gio Gebra, word prediction, etc)

மாற்றுத்திறனாளிக் குழந்தைகளின் கற்றல் இயலாமைகளுக்கு ஏற்ப கற்றல் செயல்பாடுகளைத் தயாராக்கும்போது தொழில்நுட்பத்தின் உபயோகம் வாயிலாக உரிய சூழல்சார் மாற்றங்களை நடைமுறைப்படுத்தலாம்.

எடுத்துக்காட்டாக, கணிதச் செயல்கள் செய்வதற்குப் பிரச்சினை உள்ளவர்கள் கணிப்பானின் உதவி, எழுதப் பிரச்சினை உள்ளவர்களுக்கு விசைப்பலகை உதவி, மென்பொருளின் உபயோகம் என ஒவ்வொரு குழந்தையினுடையவும் கற்றல் இயலாமைக்கு ஏற்ப தேர்வு செய்து கற்றலைப் பயன்மிக்கதாக ஆக்கலாம்.

**பார்வை நூல்கள்**

## அலகு - 3

# மாற்றுத்திறனாளிகளைப் பகுத்தறிதலும் மதிப்பீடு செய்தலும் : ஆரம்பச் சிந்தனைகள்

தரம் மிக்கக் கல்வி அனைவருக்கும் என்பதே நம் இலக்கு. விளிம்புநிலை மனிதர்களில் ஒரு பெரும் பிரிவினர் உடல் - உள்ளம் - சமூகம் என அனைத்தின் சவால்களையும் சந்திக்கின்றனர். சிறப்பு உதவி அவசியமான குழந்தைகளுக்குச் சமவயதினர் கற்கும் பொதுப் பள்ளிக்கூடத்தில் அவர்களுடனேயே கல்வி பெறும் சூழல் உட்படுத்திய கல்வி (Inclusive Education) என்ற திட்டம் அளிக்கின்றது. இத்தகைய குழந்தைகளைப் பகுத்தறிவதுடன் அவர்களுக்குக் கல்வி உதவி அளித்து மதிப்பீடு செய்வதற்கும் உரிய அடிப்படைச் சிந்தனைகளை ஆசிரியர்கள் பெறவேண்டியுள்ளது.

### முக்கியக் கருத்துகள்

- மாற்றுத் திறன் - இயலாமைக்கு உரிய காரணங்கள்
- மாற்றுத்திறன் - முன்னரே பகுத்தறிய வேண்டியதன் அவசியம்
- மாற்றுத்திறன் - பகுத்தறிதலும் மதிப்பீடு செய்தலும்
- பல்வேறு வகை மாற்றுத் திறன்கள்

### நாம் ஒரு பிரச்சினையைச் சோதித்துப் பார்க்கலாம்.

ராதா என்ற பெண் குழந்தை பிறரைப் போன்றே தனக்கும் பள்ளிக்கூடம் செல்லவேண்டும் என்ற ஆசையை மனதினுள் மறைத்திருந்தாள். அவளின் இரு கால்களும் பிறப்பிலேயே தளர்ந்துவிட்டன. அவள் குடும்பம் செய்வதறியாது திகைத்து நின்ற வேளையில் ஆசிரியை வாசந்தி அவள் வீட்டிற்குச் சென்றிருந்தார். இந்தச் சந்திப்பு அந்த வீட்டுக்கு ஆறுதல் அளித்தது. ஆசிரியையின் உதவியுடன் வீட்டின் அருகாமையில் உள்ள பள்ளிக்கூடத்தில் ராதாவைச் சேர்க்க முயற்சிகள் நடந்தன. ஒன்பது வயது ஆனமையால் பள்ளிக்கூடத்தில் சேர்தல் இயலாது எனத் தலைமை ஆசிரியர் கட்டாயமாகக் கூறினார். ஆனால் அவர் கூற்று நிலைநிற்கவில்லை. இன்று அவள் பொதுப் பள்ளிக்கூடத்தில் பிற குழந்தைகளுடன் மகிழ்ச்சியாகப் படிக்கிறாள்.

இங்கே இந்தக் குழந்தை எதிரிடும் இயலாமை என்ன? தீவிரமான உடல் அசைவுசார் குறைபாடால் குழந்தைக்குப் பள்ளிக்கூடம் செல்ல இயலவில்லை. பெற்றோரும் இதில் செயலற்றவர்கள் ஆயினர். ஆனால் இச்சூழலை ஆசிரியை பகுத்தறிந்து அதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டபோது தலைமை ஆசிரியரிடமிருந்து எதிரான நடவடிக்கைகளே உண்டாயின. இதனைத் தாண்டிச் செல்ல ஆசிரியைக்கு அறிவுறுத்த இயன்றது உட்படுத்திய கல்வி பற்றி அவருக்கு அறிவு இருந்ததனால் ஆகும். இவ்வாறு குழந்தைகள் சந்திக்கின்ற இயலாமைகளைச் சரியான நேரத்தில் கண்டுபிடிப்பதுடன் அவர்களுக்கு உட்படுத்திய கல்வி கிடைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை ஆசிரியர்கள் மேற்கொள்ளவும் வேண்டும்.

பல்வேறு வகை மாற்றுத்திறன் உள்ள குழந்தைகள் உள்ளனர் என இதற்குள் நாம் புரிந்துகொண்டோம். மாற்றுத்திறனுக்கு உரிய பொதுக் காரணங்கள் எவை என நாம் சோதித்துப் பார்க்கலாம்.

### மாற்றுத்திறன் : பொதுக்காரணிகள்

மாற்றுத்திறனின் பொதுக் காரணங்களை இரண்டாக வகைப்படுத்தலாம்

1. பிறப்பால் உள்ளன.
2. பெறப்படுவன

### பிறப்பால் உள்ளதன் காரணங்கள்

- ஜீன்சார் குறைபாடுகள்
- பெற்றோரின் இரத்தப் பிரிவுகளின் பொருத்தமின்மைகள்
- இரத்த உறவினர் இடையே உள்ள திருமணம்
- அம்மாவின் உடலில் உள்ள ஹார்மோன் தகராறுகள்
- பிள்ளைப் பேறு நீண்டு போதல் / பிரசவ நேரத்தில் ஏற்படும் மிகு பதட்டம்
- பிறக்கும் நேரத்தில் குழந்தைக்கு ஏற்பட்ட காயம், மூச்சுத் திணறல் என்பன
- 
- 
- 

### பெறப்படுவதன் காரணங்கள்

- இளம்பிள்ளைவாதம் (போலியோ), காசநோய், தொழுநோய் எனும் நோயணுக்கள் பரவச் செய்யும் நோய்
- பக்கவாதம் போன்று மூளையிலும் நாடி அமைப்பிலும் உண்டாகும் நோய்கள்
- காயங்கள், விபத்துகள், வீழ்தல், ஒடிதல் என்பன வாயிலாக உறுப்புக் குறைபாடுகள்
- போதைப் பொருட்களின் உபயோகத்தால் உண்டாகின்ற உடல் - உள்ளம் சார் பலவீனங்கள்
- 
- 

**செயல்பாடு**

ராதா என்ற பெண் குழந்தை உட்பட்ட மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்குக் கல்வியின் முக்கிய ஒழுக்கில் இணைய உட்படுத்தப்பட்ட கல்வி வாயிலாக இயலும். பிற எத்தகைய பயன்கள் இத்திட்டம் வாயிலாக நிறைவேறும்? கண்டுபிடிக்கவும்.

**நட்புசார் சொற்பயன்பாடுகள்**

மாற்றுத்திறனாளிகளைக் குறிப்பிட நாம் பயன்படுத்தும் பல சொற்களும் குழந்தைசார் நட்பார்ந்தன அல்ல. ஊனமுற்றோர், அங்கஹீனர், மந்தபுத்தி, குருடன், செவிடன் என்பன எடுத்துக்காட்டுகள். பொதுவான சில நாட்டுப்புறச் சொற்களையும் நடைமுறையில் கேட்பதுண்டு. இவை குழந்தைகளிடம் அந்நிய உணர்வையும் புறக்கணிப்பையுமே தோற்றுவிக்கின்றன. குழந்தைகளைச் சுட்டிப் பேசும்போது ஆசிரியர்களும் மேலே உள்ள சொற்களைப் பயன்படுத்தக் கூடாது. இதற்குப் பதிலாக மாற்றுத் திறனாளிகள் (differently abled) என்ற சொல் இப்போது பயன்பாட்டில் உள்ளது.

மாற்றுத்திறன் என்றால் என்ன என்றும் இது உள்ளவர்களுக்குத் திறன் குறைபாடல்ல மாறாக மரபுசார் பாவனைகளிலிருந்து வேறுபட்ட திறன்கள் உள்ளன என்றும் நீங்கள் புரிந்துகொண்டீர்கள். இத்தகையோருக்கு எத்தகைய முன்னுரிமைகள் அளிக்கவேண்டும் எனப் பார்க்கலாம்.

புறக்கணிப்போ உரியதல்லாத கவனிப்போ அல்ல இவர்களுக்குத் தேவை. குழந்தையின் திறன்களையும் இயலாமைகளையும் புரிந்துகொண்டு, திறன்களைப் பயன்படுத்தி இயலாமைகளைக் கீழடக்குவதற்குத் துணைபுரியும் ஈடுபாடுகளே அளிக்க வேண்டும்.

பல்வேறு திறன்குறைபாடுகள் எவை எனப் பார்க்கலாம்.

- புத்திசார் குறைபாடு (Mental Retardation - MR)
- பார்வைக் குறைவு (Visually Impairment - VI)
- செவித்திறன் குறைவு (Hearing Impairment - HI)
- கற்றல் இயலாமை (Learning Disability - LD)
- ஆட்டிசம் (Autism)
- செரிபிரல் பாள்சி (Cerebral Palsy - CP)
- கவனக்குறைவும் மிகு அசைவுகளும் (Attention Deficit Hyperactive Disorder - ADHD)

## புத்திசார் குறைபாடுள்ள குழந்தைகளைப் பகுத்தறிதல்

கருத்துப் பரிமாற்றம், அன்றாடக் காரியங்களைச் சுயமாகச் செய்தல், சமூகத்துடன் இணைந்த உடல்நலப் பராமரிப்பு, கற்றல் செயல்கள், பாதுகாப்புணர்வு எனப் புத்தி உபயோகிக்க வேண்டிய எல்லாத் துறைகளிலும் இவர் பின்னடைந்து நிற்பர்.

வகுப்பறையில் புத்திசார் குறைபாடுகள் உள்ள குழந்தைகளைக் கீழ்க்காணும் அறிகுறிகளையும் குறிப்புகளையும் அடியொற்றிக் கண்டுபிடிக்கலாம்.

- வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களில் (Mile Stones of Development) (அமர்தல், நடத்தல் பேசுதல்) காலதாமதம் ஏற்படுதல்
- முகத்தில் காணும் இயல்பற்ற தன்மை
- சுயமாக உணவு உண்ணாதிருத்தல்
- அறிவுறுத்துவதற்கு ஏற்ப செயல்படுவதில் இடர்பாடுகளை வெளிக்காட்டுதல்
- வாயிலிருந்து விடாது உமிழ்நீர் ஒழுகுதல்
- திடீரெனக் கோபப்படுவதுடன் உணர்வுகளைக் கட்டுப்படுத்த இயலாதிருத்தல்

### செயல்பாடு

மேலே கூறிய அறிகுறிகளைப் பயன்படுத்தி, புத்திசார் குறைபாடு உடையவர்களைப் பகுத்தறிய சோதனைப் பட்டியல் தயாரிக்கவும். குழந்தைகளின் புத்திசார் குறைபாட்டைக் கண்டுபிடிக்க இன்று அறிவியல் சார்ந்த ஏராளமான வழிமுறைகள் உள்ளன. குழந்தைகளை நுணுக்கமாக உற்றுப்பார்த்தால் மிகச் சிறு வயதிலேயே சில குறிப்புகள் கிடைக்கலாம். உங்களுக்கும் அத்தகைய அனுபவங்கள் ஏற்படலாம் அல்லவா. குழுக் கலந்துரையாடல் வாயிலாக புத்திசார் குறைபாடு தொடர்பான குறிப்புகளைப் பகுத்தறிய முயற்சி செய்யவும்.

## பார்வைக் குறைபாடு

பயணச் சுதந்திரம், உற்றுப் பார்க்கும் திறன், சமூகச் செயல்பாடுகள், சுயவாழ்க்கை வழிமுறை காணுதல் என்பனவற்றிற்குப் பார்வை குறைபாடு தடையாகின்றது.

கீழே கூறப்பட்டுள்ள அறிகுறிகள் உள்ள குழந்தைகளிடம் பார்வைக் குறைவு ஏற்பட வாய்ப்புகள் கூடுதல்

- இடையிடையே கண் சிவத்தல்

- தொடர்ந்து கண் திருமுதல்
- கண்ணிலிருந்து தொடர்ச்சியாக நீர் ஒழுகுதல்
- முன்னால் உள்ள பொருட்களையோ ஆட்களையோ தட்டித் தட்டி நடப்பது
- தையல், படம் வரைதல் எனக் கூடுதல் கவனம் தேவைப்படும் பணிகள் செய்யும் போது தலைவலி ஏற்படுதல்
- கண்ணின் அருகில் வைத்துப் புத்தகம் வாசித்தல்
- நிறங்களைப் பகுத்தறிய இடர்படுதல்
- தூரப் பொருட்களைப் பகுத்தறிய இயலாதிருத்தல்
-
-

**பார்வைக் குறைவு உள்ள குழந்தைகளுக்கு ஆசிரியர் எவ்வாறு உதவி புரிய இயலும் எனப் பார்ப்போம்.**

- பலகையில் எழுதுவதைக் காண இயலும் விதத்தில் குழந்தையை முன்னால் அமரச் செய்யவேண்டும். பலகையில் பெரிதாக எழுதுவதுடன் எழுதும் காரியங்களை உரத்தக் குரலில் வாசிக்கவும் வேண்டும்.
- ஸ்கெட்ச் பேனாவால் எழுத அனுமதித்தல்
- வகுப்பறையில் போதுமான வெளிச்சம் உண்டு என உறுதிப்படுத்துதல்
- ஆனால் முழுப் பார்வையற்றவர்களோடுள்ள அணுகுமுறை கீழ்க்காணும் முறையில் அமைய வேண்டும்.
- கற்றல் செயல்பாடுகளில் பிற குழந்தைகளுடன் பங்கு பெறுதல்
- குழந்தையைப் பெயர் சொல்லி அழைக்க கவனித்தல்
- அவர்களின் குறைபாடுகளைச் சுட்டியுள்ள வேடிக்கைப் பேச்சு, கேலி என்பன தவிர்த்தல்
- தனிக் கற்றல் கருவிகளைப் பயன்படுத்துதல்
- தன்னம்பிக்கை வளரச் செய்தல், ஊக்கம் அளித்தல்
- பிரெயிலி (Braille) லிபியின் துணையைத் தேடுதல்
- வள ஆசிரியரின் துணையுடன் கற்றல் செயல்பாடுகளைத் தயாராக்குதல்
- தொட்டும் கேட்டும் சுவைத்தும் முகர்ந்தும் அறிய வாய்ப்பு உண்டாக்குதல் (Multi Sensory experiences)
- பாடப்பகுதிகளை ஒலிப் பேழையில் கேட்பித்தல்
- ஒருவரின் பார்வைத் திறனைத் தெளிவாகவும் நுணுக்கமாகவும் அளந்து திட்டப்படுத்த ஏராளமான வழிமுறைகளும் கருவிகளும் இன்று உள்ளன. அதில் மிக முக்கியமானது ஸ்னெல்லன் அட்டவணை

## ஸ்னெல்லன் அட்டவணை

எந்த ஒருவருக்கும் தூரப்பார்வை எவ்வளவு எனப் புரிந்துகொள்ளக்கூடிய ஓர் அமைப்பே ஸ்னெல்லன் அட்டவணை.

இது நல்ல வெளிச்சம் உள்ள அறையில் நிறுவப்பட்டிருக்கும் தூரப்பார்வையை சோதித்துப் பார்க்க குழந்தையை எதிர்த் திசையில் 6 மீட்டர் தூரத்தில் நிறுத்திய பின்னர் மேலிருந்து கீழ் நோக்கி ஒவ்வொரு வரியாக வாசிக்குமாறு கூறப்படுகிறது. வாசிக்கும் போது ஒரு கண்மூடப்படுகிறது. இவ்வாறு ஒரு குழந்தை ஸ்னெல்லன் அட்டவணையின் முதல் வரியை மட்டும் வாசித்தால் குழந்தையின் பார்வை 6/60 என்றும் இருவரிகள் வாசித்தால் 6/36 என்றும் மூன்று வரிகள் 6/24 என்றும் நான்கு வரிகள் 6/18, ஐந்து வரிகள் 6/12, ஆறு வரிகள் 6/9, ஏழு வரிகள் 6/6 என்றும் பார்வைத் திறனைப் புரிந்துகொள்ளலாம்.

இவை ஒவ்வொன்றையும் புரிந்துகொண்டால் மட்டுமே ஒரு குழந்தையின் காட்சி எவ்வளவு எனத் திட்டப்படுத்த இயலும்.

**ஸ்னெல்லன் அட்டவணை**

| | | | | |
|---|---|---|---|---|
| த | ய | க | உ | வ |
| ந | வ | எ | ஈ | ங |
| ங | க | ந | ம | உ |
| ம | எ | வ | ங | ந |
| ய | க | எ | ங | த |
| ந | ம | ஈ | உ | ங |
| த | எ | உ | ம | க |
| உ | ந | ய | வ | த |

## கேள்வித்திறன் குறைபாடு

ரம்யா என்ற ஒன்றரை வயதுக் குழந்தை வீட்டின் அருகாமையில் வெடி வெடிக்கும் போது எந்த முகபாவனையும் இல்லாமல் இருந்தாள். இது சுட்டுவது யாதெனில் ரம்யாவுக்கு வெளி ஒலிகள் கேட்கும் திறன் இல்லை என்பதாகும். இவ்வாறு கேள்வித் திறன் குறைபாடு உடையவர்களை நுட்பச் சோதனைகள் வாயிலாகப் பகுத்தறிய இயலும். இதைத் தவிர கேள்வித் திறன் குறைபாடுடையோரைக் கீழ்க் காணும் அறிகுறிகள் வைத்தும் பகுத்தறிய இயலும்.

- கவனமின்றி இருத்தல்
- பிறர் வினாக்களுக்குப் பதில் கூறாதிருத்தல்

- ஒலி கேட்கும் திசையில் காதைச் சாய்த்துப் பிடித்தல்
- பேசும் நபரின் உதடின் அசைவை (Lip movement) அதிகமாகக் கவனித்தல்

**வகுப்பறையில் கேள்வித்திறன் குறைபாடு உடையவர்களை எவ்வாறு பகுத்தறியலாம்?**

- ஆசிரியரின் அறிவுரைகளைப் பின்பற்றாது கவனமின்றி இருத்தல்
- வினாக்களுக்குப் பதில்கூறாதிருத்தல்
- குழுச் செயல்பாடுகளிலிருந்து விலகி நிற்றல்
- 

தீவிரமாகக் கேள்வித்திறன் இயலாமை உள்ள குழந்தையை மதிப்பீடு செய்து அவசியமான வழிகாட்டுதல்களை அளிக்க ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும். கேள்வித்திறன் குறைவு உண்டு என அறிந்தவுடன் மருத்துவ உதவி பெற பெற்றோர்களை அறிவுறுத்த வேண்டும்.

**கேள்வித்திறன் குறைபாடு உள்ள குழந்தைகளிடம் ஆசிரியரின் அணுகுமுறை**

- குழந்தையை முன்பெஞ்சில் அமரச் செய்தல்
- ஒலித் தொல்லைகளிலிருந்து விலகி வகுப்பறை அமைதல்
- குழந்தையின் முகம் பார்த்துப் பேசுதல்
- கேட்டல் கருவி செயல்படுகிறது என உறுதிப்படுத்துதல்
- பிறபுலன்களை இயன்ற அளவில் பயன்படுத்துமாறு கற்றல் கருவிகளைக் கையாள்வதற்கு வாய்ப்பு அளித்தல்
- குழந்தைகளுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் அவசியமான வேளைகளில் அறிவுரை வழங்குதல்

### ஆடியோகிராம்

கேள்வித்திறன் குறைபாடுகளை அளந்து திட்டப்படுத்தும் சோதனையே ஆடியோகிராம். சிகிச்சையின் முதல் கட்டம் இது. பிற பல சோதனைகளும் கேள்வி இடர்பாடுகளைக் கண்டுபிடிக்க உதவுகின்றன. திடீரென உண்டாகும் குறைபாடைக் கண்டுபிடிக்க சி.டி.ஸ்கான் வாயிலாக இயலும். 140 - 180 டிசிபல் (db) வரையுள்ள ஒலியை வெளிப்படுத்துதல் நிகழுமெனில் செவிப்பறை உடைய வாய்ப்பு உள்ளது. என்டோஸ்கோபி வாயிலாகச் செவிப்பறையில் உடைவு உண்டா எனக் கண்டுபிடிக்கலாம். மிகச் சாதாரணமான ஒரு கேள்வித்திறன் சோதனையே இது. பியர்டோன் ஆடியோகிராம் சுமார் 15 நிமிடங்கள் நேரமெடுத்து இந்தச் சோதனையை நடத்த நோயாளிகளின் ஒத்துழைப்பும் தேவையாகும். அதனால் நான்கு வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகளிடமும் புத்திக்குறைபாடு உடையவர்களிடமும் இச்சோதனையை நடத்த இயலாது. ஆட்டோ அக்வஸ்ட்டிக் எமிஷன் என்ற சோதனையை நடத்தலாம். இந்தச் சோதனையைப் பிறந்த குழந்தைகளிடம் செய்வதன் வாயிலாகக் குழந்தைகளின் கேள்வித்திறன் குறைபாட்டைக் கண்டுபிடிக்கவும் சிகிச்சை அளிக்கவும் இயலும். பெரும்பாலும் கேள்வித் திறன் குறைபாடுகளை அறுவைச் சிகிச்சையிலோ கேட்கும் கருவி (Hearing Aid) கோக்லியார் இம்ப்ளான்ட் என்பன வழியோ தீர்வு காண இயலும். கோக்லியார் இம்ப்ளான்ட் இன்றைய காலத்தின் நம்பிக்கையே. நரம்பினைப் பாதிக்கின்ற கேள்வித்திறன் குறைபாடு தீயக் கனவாக இருந்த காலம் கோக்லியார் இன்ப்ளான்ட் வருகையுடன் மறைந்துவிட்டது.

## உலகக் கேள்வித்தினம்

எல்லா ஆண்டிலும் மார்ச் 3 னை உலக ஆரோக்கிய அமைப்பு உலகக் கேள்வித் தினமாகக் கொண்டாடுகின்றது. உலகமெங்கும் ஏறக்குறைய 46 கோடி மனிதர்களுக்குக் கேள்வித் திறன் குறைபாடு உண்டு. அதில் பெருவாரியோர் இந்தியா போன்ற வளர்ச்சி நாடுகளில் உள்ளனர். உலக ஆரோக்கிய அமைப்பின் 2019 இல் உலக கேள்வித் தினச் செய்தி உங்களின் கேள்வித் திறனைச் சோதித்துப் பாருங்கள் என்பதாகும்.

## குழந்தைகளின் கேள்விக் குறைபாடு

மழலைகளின் 65% கேள்விக் குறைபாட்டையும் சமூக, உடல் நலச் செயல்கள் வாயிலாகத் தடை செய்ய இயலும் என உலக ஆரோக்கிய அமைப்புக் கணக்குகள் சொல்கின்றன. கேள்வி இயலாமைகள் மழலைகளின் கற்றலைப் பின்தள்ளுவதுடன் குணநல மாற்றங்களையும் (குணம் சார் குறைபாடு) உண்டாக்கும். செவிட்டுத் தன்மைக்கு நான்கு வயதின் முன்னரே சிகிச்சை அளித்தால் மட்டுமே குழந்தைகளுக்குப் பேசும் திறன் கிடைக்கும்.

### கற்றல் குறைபாடு (learning Disability)

சராசரியோ அதில் கூடுதலோ புத்திச் சக்தி இருந்தும் கற்றலில் ஒரு துறையிலோ ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளிலோ சமவயதினரைவிடப் பின்னோக்கி நிற்கின்ற தன்மையே இது.

கற்றல் குறைபாடு முக்கியமாக நான்கு வகைகளில் உள்ளன எனக் காணலாம். சாதாரணமாக

1. வாசித்தல் குறைபாடு (Dyslexia)
2. எழுதுதல் குறைபாடு (Dysgraphia)
3. கணக்கிடுதல் குறைபாடு (Dyscalculia)
4. பேச்சுமொழி உட்கிரகித்தலில் குறைபாடு (Speech Language disorder) ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், டப்ளுயு. சியேற்றஸ் எனும் மேதைகள் கற்றல் குறைபாடுகளைத் தாண்டிச் சென்றவர்கள்

### குழந்தைகளின் கற்றல் குறைபாட்டைத் தாண்டிச் செல்ல ஆசிரியர் கவனிக்க வேண்டியன

- கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளின் தனிநபர் வேறுபாட்டைக் கவனிக்கவும்
- குழந்தைகள் பிரச்சினைகளைச் சொல்வதற்கு உரிய சூழலை ஏற்படுத்த வேண்டும்
- ஆசிரியர்கள் பொறுமை சாலிகளாகவும் விட்டுக் கொடுக்கும் பண்புள்ளவர்களாக இருக்க வேண்டும்
- இயலாமைகள் உள்ள குழந்தைகளின் தன்னம்பிக்கையை பாதிக்கும் அணுகுமுறைகளைப் பின்பற்றக் கூடாது.
- மொழிச் சோதனைக்கூடங்களில் உதவி அளிக்க வேண்டும். அதற்கும் மேலாக மனதளவில் வலி ஏற்படாதவாறு ஒழுங்கான பயிற்சிகள் வாயிலாக இயலாமைகளைத் தாண்டிச் செல்ல ஆசிரியர்கள் அவர்களுக்குக் கைத்தாங்கியாகவும் (Scaffolding) செயல்பட வேண்டும்.

### கற்றல் குறைபாட்டுக் குழந்தைகளைப் பகுத்தறிய :

- உங்கள் குழந்தை எல்லா நாட்களும் செய்ய வேண்டிய சிறுசிறு காரியங்களில் இயன்ற அளவில் கவனம் செலுத்துவது உண்டா?
- எவரின் கட்டாயமும் இல்லாமல் சுயமாக அனைத்தையும் செய்கிறதா?

- நினைவு குறைதல். அதாவது சிறிது நேரத்தின் முன்னர் சொன்னவற்றைக்கூட நினைவு கூர இயலாத நிலை காணப்படுகிறதா?
- சுயத் தரத்திற்கு ஏற்ப செயல்பட இயலாத நிலை தோன்றுகிறதா?
- ஐந்தாம் வகுப்பு வந்த பின்னரும் எழுதவும் வாசிக்கவும் இடர்படுவதுடன் எழுதுவதில் ஏராளமான எழுத்துப் பிழைகள் வருவதும் எழுதுகின்றனவற்றில் பலவும் மாறிப் போகும் நிலை ஏற்பட்டுள்ளதா?
- ஆசிரியர்கள் தருகின்ற அறிவுரைகளைப் பின்பற்றுவதிலும் பாடப்பகுதிகளைச் சுயமாகப் புரிந்து கொள்வதிலும் இடர்படும் நிலை ஏற்பட்டுள்ளதா?
- பொறுமையுடன் செய்யவேண்டிய சுயக்காரியங்களுக்குக் கூட இயன்ற அளவில் முக்கியத்துவம் அளித்து செய்யாமல் இருக்கின்றார்களா?
- நேர உணர்வுடன் செயல்பட இயலாத நிலை ஏற்படுகிறதா?

ஆட்டிசம் (Autism) கருத்துப் பரிமாற்றம் (communication) சமூகமயமாதல் (Socialisation) கற்பனை (imagination) எனும் துறைகளில் சமவயதினரிலிருந்து மிக வேறுபாடு ஆட்டிசக் குழந்தைகளிடம் தென்படும்.

பெற்றோரும் குடும்ப உறுப்பினர்களும் தன் சுற்றிலும் உள்ளவர்களுடன் பழகுவதிலும் ஆட்டிசக் குழந்தைகளுக்கு இயலாமைகள் உள்ளன. அதைப்போன்று சுயத் தேவைகளை அம்மாவிடம் கூட அறிவிக்காதிருத்தல், காரியங்களைக் கற்பனையில் காண இயலாமை என்பனவும் இப்பிரிவு சார்ந்த குழந்தைகளிடம் உள்ளன.

- அன்றாடப் பழக்கவழக்கங்களையும் செயல்பாடுகளையும் மாற்றமின்றி அறிந்த முறையில் மட்டும் செய்தல்
- பயணத்தில் பதிவுப்பாதை அன்றி மற்றொரு பாதை வழியாகப் போகும் போது எதிர்ப்பை வெளிக்காட்டுதல்
- விளையாட்டுகளில் சுயக்கற்பனையைப் பயன்படுத்தாதிருத்தல்
- பிறருடன் விளையாட்டுகளிலோ செயல்பாடுகளிலோ ஈடுபடாதிருத்தல்
- கூட்டுறவு மனப்பான்மையை வெளிக்காட்டாதிருத்தல்
- வினவும் வினாக்களை அப்படியே திருப்பிச் சொல்லுதல்
- முகம் நோக்கித் தேவைகளைக் கூறாதிருத்தல்
-
-
- இத்தகைய இயலாமைகள் உள்ள குழந்தைகளுக்கு அவசியமான தீர்வு வழிமுறைகளை அறிவுறுத்த வேண்டும். இக்குழந்தைகள் சில குறிப்பிட்ட துறைகளில் அசாதாரண திறன்களை வெளிப்படுத்தலாம். இத்தகைய திறன்களைப் பகுத்தறிந்து அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

**செயல்பாடு**

உங்களின் அருகாமையில் உள்ள ஆட்டிச மையத்தைப் பார்வையிட்டு ஆட்டிசம் பற்றிய மேலும் பல தகவல்களைச் சேகரிப்பதுடன் அவர்களுக்கு அளிக்கின்ற சேவைகள் எவை எனக் கண்டுபிடித்து குறிப்பு தயாராக்கவும்.

## சுகம்ய பாரத் அப்யான் (Assessible India Campaign)

உடல்சார் குறைபாடுகள்ளவர்களுக்குப் பொது இடங்களில் பயணிக்கும் சுதந்திரத்தைக் கூட்டுதல் என்ற இலக்குடன் நடுவண் அரசு நடைமுறைப்படுத்திய பிரச்சாரச் செயல்பாடே சுகம்ய பாரத் அப்யான் 2015 டிசம்பர் 3 உலக மாற்றுத்திறனாளி தினத்தில் மத்திய அமைச்சர் அருண்ஜெய்ட்லி இப்பிரச்சாரச் செயல்பாட்டைத் தொடங்கி வைத்தார். உடலுறுப்புக் குறைபாடுள்ளோரின் பாதுகாப்பிற்காக உள்ள சட்டத்தின் (Person with Disabilities Equal opportunities, Protectin of rights and Full Participation Act, 1995) 44, 45, 46 வகுப்புகளுக்கு ஏற்ப சாலைகள், கட்டிடங்கள் எனப் பொது இடங்களில் உடலுறுப்புக் குறைபாடுள்ளோர் எவ்விதப் பாகுபாடும் இல்லாமல் நன்கு பயணிக்க அடிப்படை வசதிகள் செய்ய வேண்டும். அதற்காக

1. பொதுக் கட்டிடங்களில் சரிவுப்பாதை இருக்க வேண்டும்.
2. சக்கர நாற்காலி பயன்படுத்துகின்றவர்களின் வசதிக்கு ஏற்ப கழிப்பறைகள் அமைந்திருக்க வேண்டும்
3. உயர்த்திகளில் (Lift) பிரெய்லி எழுத்திலோ வடிவத்திலோ விதிமுறைகள் எழுதியிருக்க வேண்டும்.
4. மருத்துவமனைகளிலும் பொது ஆரோக்கிய மையங்களிலும் புனர்வாழ்வு மையங்களிலும் சரிவுப் பாதைகள் இருக்க வேண்டும்.

மத்திய சமூக நீதி மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் உள்ள மாற்றுத் திறனாளிகளின் மேம்பாட்டிற்காக உள்ள வகுப்பே - DEPWD (Department of Persons with Disabilities) நாடெங்கும் இப்பிரச்சாரச் செயல்பாடுகளுக்குச் சுக்கான் பிடிக்கின்றது. உடலுறுப்புக் குறைபாடுள்ளோர் நன்கு பயணிக்க இடர்பாடுகள் உள்ள கட்டிடங்களையும் இடங்களையும் குறித்து அதிகாரிகளை அறிவிப்பதற்கு இந்த அலுவலகம் மொபைல் ஆப் வெளியிடவும் திட்டமிட்டுள்ளது. குழுத்தகவல்கள் வாயிலாகவும் Assessible Media Portal வழியாகவும் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுதல் என்பதே இதன் இலக்கு.

## மாற்றுத்திறனாளிகளில் அபூர்வ ஆளுமைகள்

### இரஜீன்றர் சிங் ரஹேலு (Rajindar Singh Rahelu)

பஞ்சாபின் ஜலந்தரில் உள்ள இந்தப் பளுதூக்கு வீரர் 2004 இன் ஏதன்ஸ் பாராலிம்பிக்ஸ் ஒலிம்பிக்சில் வெங்கலம் பெற்றார். 56 கி.கிராம் பிரிவில் இவ்வெற்றியைப் பெற்றார். 2006 இல் நாடு அர்ஜீனா விருது அளித்து அவரை ஆதரித்தது.

### மாலதி கிருஷ்ண மூர்த்தி ஹோலா (Malathy Krishnamurthy Holla)

ஐந்து பாராலிம்பிக்ஸ் ஒலிம்பிக்ஸ்களில் இந்தியாவிற்காக விளையாடியவர். இரு கால்கள் தளர்ந்து சக்கரநாற்காலியின் துணையுடன் பயணிக்கும் இந்த விளையாட்டு வீராங்கனை (அத்லெட்) நாட்டுக்காகப் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பெற்ற வெற்றிகள் 300 க்கு மேற்பட்ட தங்க மெடல்கள். குண்டு எறிதல் (ஷாட்புட்) தட்டு எறிதல் (டிஸ்க்ஸ்த்ரோ) என்பன முக்கிய விளையாட்டுகள். 1996 இல் அர்ஜுனா அவார்டும் 2001 இல் பத்மஸ்ரீ விருதும் கிடைத்தன.

### செரிபிரல் பாள்சி (Cerebral Palsy)

மூளையில் ஏற்படும் பிரச்சினைகள், பார்வைக் குறைபாடு, கேள்விக் குறைபாடு, கற்றலில் பின்தங்கிய நிலை, மொழிசார் பின்தங்கிய நிலை, வாயில் நீரொழுகுதல், உணவு உண்ண இடர்படுதல் எனும் அறிகுறிகளில் ஏதேனும் செரிபிரல்பாள்சி உள்ளவர்களிடம் காணப்படும். திடமானதோ நெகிழ்வானதோ ஆன தசைகளே இத்தகையோரிடம் காணப்படும்.

### இயலாமைகள்

- அமர்தல், நிற்றல், படிகள் ஏறுதல், ஓடுதல் எனும் செயல்பாடுகள் செய்ய வயதுக்கு ஏற்ப திறனில்லாதிருத்தல்
- உடலுறுப்புகளின் அமைப்பு சமவயதினரிலிருந்து வேறுபட்டிருக்கும்
- நடுங்கும் முறையிலோ பலம் பிடித்த முறையிலோ நடப்பார்கள்
- உடலை நிமிர்த்தி நிற்க இடர்படுதல்
- விரல்களைச் சமச்சீரின்றி அசைதல்

### கவனித்தல் சார் குறைபாடு (Attention Deficit)

கவனமின்மை, ஒரே நேரத்தில் பல்வேறு காரியங்களில் மூழ்குதல், பதட்டப்படுதல் என்பன இத்தகைய குழந்தைகளிடம் காணப்படும் முக்கியப் பிரச்சினைகள். அதைப் போன்று கீழ்க்காணும் அறிகுறிகளையும் காணமுடியும்.

- கற்றல் செயல்பாடுகளிலும் விளையாட்டுகளிலும் கவனத்தை நிலைநிறுத்த இடர்படுதல்
- அறிவுரைகளுக்கு ஏற்ப செயல்பட இயலாதிருத்தல்
- வீட்டுப் பாடம், வகுப்பறைச் செயல்பாடுகள், வீட்டு வேலைகள் என்பனவற்றை முழுமைப்படுத்த இடர்படுதல்
- பிறருடன் பேசும் போது கவனம் சிதறுதல்
- அன்றாடம் செய்யும் வேலைகள்கூட மறந்து போதல்
- இத்தகைய குழந்தைகள் வகுப்பில் உள்ளனரெனில் அவர்களுக்கு அவசியமான உதவிகள் அளித்தும் குறைபாடுகளைத் தாண்டிச் செல்வதற்கு உரிய செயல்பாடுகள் அளித்தும் அவர்களைச் சரியாக்க வேண்டும். படபடத்து வருதல் என்பதற்கும் அப்பால் பிறரின் செயல்பாடுகளைத் தடைசெய்தல், வாய்ப்பு காத்து நிற்கும் பொறுமையின்மை, காரணமின்றி இருக்கையிலிருந்து எழுந்து நிற்றல் எனும் அறிகுறிகளும் வெளிக்காட்டுபவர்கள் உள்ளனர். இத்தகைய அறிகுறிகள் காண்பிக்கின்ற குழந்தைகள் ADHD (Attention Deficit Hyperactivity Disorder) குழுவில் உட்படுவர். ஆனால் கவனித்தல்சார் குறைபாடு உடையவர்கள் ADHD பிரிவில் உட்படுபவர்கள் அல்ல. இப்பிரிவினரின் இயலாமைகளைப் பகுத்தறிந்து அவற்றைத் தாண்டிச் செல்வதற்கு உள்ள மருத்துவ உதவியும் தீர்வுச் செயல்பாடுகளும் அளிக்கவேண்டும்.

**செயல்பாடு**

பல்வேறு குறைபாடுகளைப் பார்வையிடல் வாயிலாகவும் கலந்துரையாடல் வாயிலாகவும் கண்டுபிடித்து வகுப்பில் வெளியிடவும். இத்தகைய குறைபாடுகளை முன்னரே பகுத்தறிவதன் அவசியம் பற்றிக் கலந்துரையாடி அவற்றைத் தொகுப்பதுடன் அதற்காகக் கலந்துரையாடல் குறிப்புகள் தயாராக்கவும் வேண்டும். மாற்றுத் திறனாளிகளின் செயல்பாடுகளுடன் தொடர்புடைய ஒலி - ஒளிக் காட்சிகளும் (வீடியோ) ஆவணப்படங்களும் (டாகுமென்டரி) காண்பதற்கு உரிய வாய்ப்புகளையும் பயன்படுத்தவேண்டும்.

**மாற்றுத்திறனை முன்னரே பகுத்தறிவதன் அவசியம் (Early identification of differently abled)**

மாற்றுத்திறன்கள் உள்ள குழந்தைகளை முன்னரே பகுத்தறிவதன் வாயிலாகச் சரியான பயிற்சி அளிக்கவும். மருத்துவ நிபுணரின் அறிவுரை பெறவும் அவற்றின்வழியே குழந்தைகளின் இயலாமைகளின் கடினத்தன்மையைக் குறைக்கவும் சிலவற்றை அகற்றவும் இயல்கிறது. பெற்றோர்களுக்கும் குடும்ப உறுப்பினர்களுக்குமே இத்தகைய குழந்தைகளை முதலில் அறிந்துகொள்ள இயலும்.

இதற்காக மழலைகளின் வளர்ச்சியை நுணுக்கமாக உற்றுநோக்கி இயல்பற்ற தன்மை கண்டால் மருத்துவ நிபுணரின் சேவையைப் பெறச் செய்ய வேண்டும். இயலாமைகளைக் கண்டுபிடித்து முன்னுரிமையையும் மருத்துவரின் சேவையையும் பெறச் செய்வதுடன் அவர்களின் பல்வேறு திறன்களைப் பகுத்தறிந்து அவற்றை ஊக்குவிக்கவும் வேண்டும்.

**செயல்பாடுகள்**

- மாற்றுத்திறன்களை முன்னரே பகுத்தறிவதன் அவசியத்தை உட்படுத்தி பெற்றோர்களுக்கு உரிய விழிப்புணர்வுச் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய பரிந்துரைகளைத் தயாராக்கவும்.
- பல்வேறு குறைபாடுகளைப் பகுத்தறிய முறையான சோதனைப் பட்டியல்கள் தயாராக்கவும்.
- அருகாமையில் உள்ள ‘Early Intervention Centre ஐப் பார்வையிடவும். (அதன் முன்னோடியாக நிறுவனத்திலிருந்து திரட்டிய தகவல்களுடன் தொடர்புள்ள வினாத் தொகுப்பை வகுப்பறையில் பொதுவாகக் கலந்துரையாடி வடிவமைக்க வேண்டும்) பார்வையிட்டதன் பின்னர் தகவல்களைத் தொகுத்து அறிக்கை தயாராக்கவும்.

## *References*


1. Theories of Inclusive Education – Peter Clough and Jenny Corbett by Sage Publications.
2. Inclusive Education by Ashima Das, Shankar Das and Ruth kattumuri – concept publishing Company pvt.Ltd.
3. Curriculum and Instruction of Inclusive Education Edited by M.T.V Nagarjuna – Common wealth Publication
4. The Dyscalculia Assessment by Jane E Merson and Partriea Babtle by Continuum Interna tional Publishing Group.

## அலகு - 4

# பள்ளிக்கூட ஒருங்கிணைப்பும் மேலாண்மையும்

## முன்னுரை

எத்தகைய கல்வியும் கல்விச் செயல்பாடுகளும் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு வலுவான கல்வி அமைப்பு தேவை. கல்வி அமைப்பு என்பது முக்கியமாக நிர்வாகப் பிரிவும் கல்விப் பிரிவும் உட்பட்டதாகும். கேரளாவின் கல்வித்துறையில் ஆற்றல்மிக்க அமைப்பு நடைமுறையில் உள்ளது. கேரளாவின் கல்வித்துறை மேம்பாட்டிற்கு இத்தகைய அமைப்புகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. எதிர்கால ஆசிரியர்கள் என்ற நிலையில், நம் கல்வியுடன் தொடர்புடைய நிர்வாகம் - கல்வி அமைப்புகள் பற்றிய அறிவும் கண்ணோட்டமும் ஆசிரிய மாணவர்களுக்கு அவசியமாகும். அவற்றுடன் தொடர்புள்ள ஒவ்வொரு பிரிவினுடையவும் பொறுப்புகளையும் செயல்பாடுகளையும் நாம் அறிந்திருக்க வேண்டும். மட்டுமல்ல வகுப்பறை மேலாண்மை, பள்ளிக்கூட மேலாண்மை என்பன பற்றிய அறிவும் திறன்களும் பெறவேண்டியதும் மிக முக்கியம். மேலே கூறியனவற்றுடன் தொடர்புள்ள விளக்கங்களே பள்ளிக்கூட ஒருங்கிணைப்பும் மேலாண்மையும் என்ற இந்த அலகில் கலந்துரையாடப்படுகிறது.

## முக்கியக் கருத்துகள்

- பொதுக் கல்வி இயக்குனர் (டி.பி.ஐ) கல்வித் துணை இயக்குனர் (டி.பி.இ) மாவட்டக் கல்வி அதிகாரி (டி..இ.ஓ) துணைமாவட்ட அதிகாரி (எ.இ.ஓ) தலைமை ஆசிரியை / தலைமை ஆசிரியர் ஆகியோரின் அதிகார எல்லைகளும் பொறுப்புகளும்
- ஆசிரியர்களின் முக்கியப் பொறுப்புகள்
- பள்ளிக்கூடத்தில் தயாராக்கிப் பராமரிக்க வேண்டிய முக்கியப் பதிவேடுகள்
- தலைமை ஆசிரியரின் வகுப்பறை பள்ளிக்கூடக் கண்காணிப்பு
- பி.டி.ஏ, பள்ளிக்கூட நிர்வாகக் குழு, வகுப்பறை பி.டி.ஏ என்பனவற்றின் அமைப்பும் செயல்பாடுகளும்
- SCERT, SIEMAT, SIET, KITE, DIET (Distric Institute of Education and Training). BRC, CRC என்பனவற்றின் பொறுப்புகள்; செயல்பாடுகள்
- IASE, CTE என்பனவற்றின் பொறுப்புகளும் செயல்பாடுகளும்

## பள்ளிக்கூடத்துடன் தொடர்புள்ள பல்வகை மேலாண்மைகள்

- நிறுவன மேலாண்மை
- வகுப்பறை மேலாண்மை
- நேர மேலாண்மை
- மனிதவள மேம்பாட்டு மேலாண்மை

நம் நாட்டில் கல்வி அரசியல் அமைப்பின் பொதுப் பட்டியலில் உட்படுகிறது. மாநிலத்திற்கும் நடுவண் அரசுக்கும் ஒரேபோல் கல்விப் பொறுப்பு உள்ளது என இதனால் குறிப்பிடப்படுகிறது. கல்விக்காக அமைச்சரவையில் கல்வி அமைச்சர் உள்ளார். பொதுக்கல்வித் துறையின் ஆட்சி நிர்வாகக் காரியங்களைக் கையாள்கின்றவர் அமைச்சரின் அடுத்தப்பொறுப்பில் உள்ள பொதுக் கல்விச் செயலாளர் ஆகும். மழலையர் பள்ளி முதல் பத்தாம் வகுப்பு வரை பொதுக் கல்வித் துறையின் தலைவர் பொதுக்கல்வி இயக்குனர் ஆகும் (டி.பி.ஐ - டயரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்)

மாநிலத்தின் ஒவ்வொரு வருவாய் மாவட்டத்துக்கும் ஒரு மாவட்ட அளவிலான பொதுக் கல்வி அதிகாரி உண்டு. இந்த அதிகாரி கல்வித்துணை இயக்குனர் (டி.டி.இ - டெபுட்டி டயரக்டர் ஆப் எஜீகேஷன்) என அறியப்படுகிறார். ஒவ்வொரு வருவாய் மாவட்டமும் நிர்வாக வசதிக்காகக் கல்வி மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கல்வி மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் மாவட்டக் கல்வி அதிகாரி (டி.இ.ஒ - டிஸ்ட்ரிக்ட் எஜீகேஷனல் ஆபீசர்) ஆகும். கல்வி மாவட்டம் பல்வேறு கல்வித்துறை மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு கல்வி மாவட்டத்தில் இரண்டோ அதில் கூடுதலோ கல்வித் துணை மாவட்டங்கள் உள்ளன. துணை மாவட்டத் தலைவர் துணைமாவட்டக் கல்வி அதிகாரி (எ.இ.ஒ - அசிஸ்டன்ட் எஜீகேஷனல் ஆபீசர்) ஆவார். கல்வி மாவட்ட - துணை மாவட்ட அமைப்புகளின் கீழே பள்ளிக்கூடங்கள் செயல்படுகின்றன. பள்ளிக்கூடத் தலைவர் தலைமை ஆசிரியர்.

கல்வித் துறை அமைச்சர்

பொதுக் கல்விச் செயலாளர்

பொதுக் கல்வி இயக்குனர்

கல்வித் துணை இயக்குனர்கள்

மாவட்டக் கல்வி அதிகாரிகள்

துணைமாவட்டக் கல்வி அதிகாரிகள்

தலைமை ஆசிரியர் /தலைமை ஆசிரியை

கேரளாவில் மொத்தம் 41 கல்வி மாவட்டங்களும் 163 துணை மாவட்டங்களும் உள்ளன. ஒரு துணைமாவட்டத்தின் அனைத்துத் தொடக்கநிலைப் பள்ளிக்கூடங்களின் நிர்வாகப் பொறுப்பு எ.இ.ஒக்கு உரியது. கல்வி மாவட்டத்தின் அனைத்து உயர்நிலைப் பள்ளிக்கூடங்களின் பொறுப்பு டி.இ.ஒக்கு உரியது. வருவாய் மாவட்டங்களின் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலகங்களின், துணை மாவட்டக் கல்வி அலுவலகங்களின் தொடக்கநிலை, உயர்நிலைப் பள்ளிக்கூடங்களினுடையவும் டி.டி.ஐ களினுடையவும் நிர்வாகப் பொறுப்பு டி.டி.இக்கு உரியது.

ஒரு வருவாய் மாவட்ட ஆசிரியர்களின் நியமனம் - பதவி உயர்வு - இடமாற்றம் என்பனவற்றின் அதிகாரி டி.டி.இ ஆகும்.

## டி.டி.இ யின் பிற முக்கியப் பொறுப்புகள்

- மாவட்டத்தின் கல்வித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- மாவட்டக் கலைவிழாக்கள், அறிவியல், கணிதவியல், சமூகவியல், ஐ.டி, பணி அனுபவம், உடற்பயிற்சி - விளையாட்டுகள் என்பன ஒருங்கிணைத்தல்
- பள்ளிக்கூடங்களின் கல்விக் கண்காணிப்பு
- துணைமாவட்ட, கல்வி மாவட்ட அலுவலகங்களின் மேற்பார்வை

- எ.இ.ஒ, டி.இ.ஒ பிற கல்வி அதிகாரிகள் ஆகியோரின் கூட்டங்களை உரிய நேரத்தில் ஒருங்கிணைத்தல்
- ஆசிரியப் பயிற்சிகளின் மாவட்டப் பொறுப்பை நிர்வாகம் செய்தல்
- D.El.Ed, PPTTC பிரிவுகளின் நுழைவு நிகழ்வு, நியமனம், மேற்பார்வை என்பன
- 
- 

## டி.இ.ஒ - முக்கியப் பொறுப்புகள்

- கல்வி மாவட்ட உயர்நிலைப் பள்ளிக்கூடங்களைச் சந்திக்கச் செல்வதுடன் கல்வியும் நிர்வாகமும் சார்ந்த மேற்பார்வை
- கல்விக் கண்காணிப்பு - குழுக் கண்காணிப்பு
- கல்வி மாவட்டக் கலை விழாக்களையும் பொருட்காட்சிகளையும் ஒருங்கிணைத்தல்
- தொடக்கநிலைத் தலைமை ஆசிரியர்களை ஒருங்கிணைத்துக் கல்வித்துறையின் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துதல்
- 
- 

## எ.இ.ஒ - முக்கியப் பொறுப்புகள்

- கல்வித்துணை மாவட்டத்தின் தொடக்கநிலைப் பள்ளிக்கூடங்களைச் சந்திப்பதுடன் கல்வி, நிர்வாகம் சார்ந்த மேற்பார்வை
- கல்விக் குழுக் கண்காணிப்பு
- துணை மாவட்ட விழாக்களை ஒருங்கிணைத்தல்
- தொடக்கநிலைத் தலைமை ஆசிரியர்களை ஒருங்கிணைத்துக் கல்வித்துறையின் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துதல்

*கேரளாவின் பொதுக் கல்வித் துறையின் செயல்பாடுகள் குறித்தும் கல்வித்துறை அமைச்சர், பொதுக் கல்விச் செயலாளர், டி.பி.ஐ, டி.டி.இ, டி.இ.ஒ, எ.இ.ஒ என்போரின் பொறுப்புகள் பற்றியும் மேலும் பலவற்றைக் குறித்தும் உங்கள் வகுப்பில் கலந்துரையாடலாம் அல்லவா. கேரளக் கல்விச் சட்டத்தைச் (கே.இ.ஆர்) சோதித்துப் பார்த்து தகவல்திரட்டல் நடத்தவும். கிடைக்கின்ற தகவல்களை உங்கள் நாட்குறிப்பேட்டில் குறித்துவைக்க முயற்சி செய்யவும். பொதுக் கல்வித்துறையின் அதிகார வரிசையுடன் தொடர்புள்ள விளக்கப்படத்தை (chart) ஆசிரியர்களின் உதவியுடன் தயாராக்கவும்.*

## கல்வி நிர்வாக அமைப்பு - பல்வேறு நிலைகளின் செயல்பாடுகள்

நீங்கள் பல பள்ளிக்கூடங்களில் படித்திருப்பீர்கள். அங்கே நீங்கள் கண்ட / கலந்து கொண்ட முக்கியச் செயல்பாடுகள் எவை? பட்டியல் தயாராக்கவும். பயன்பாட்டுடன் செயல்படுகின்ற ஒரு பள்ளிக்கூடத்தின் பல்வேறு காரணிகள் (நபர்கள், பௌதிகச் சூழல்கள், அமைப்புகள், கூட்டங்கள், சமூகத் தொடர்புகள் என்பன) கண்டுபிடித்து வகுப்பறையில் பொதுவாக வெளியிடவும்.

ஒவ்வொன்றின் முக்கியத்துவம் குறித்துக் கலந்துரையாடவும்.

- தலைமை ஆசிரியை / தலைமை ஆசிரியர்
- ஆசிரியர்கள்
- பி.டி.ஏ (Parent Teacher Association)
- பள்ளிக்கூட மேலாண்மைக் குழு (School Management Committee)
- வகுப்பறை பி.டி.ஏ (CPTA)
- மதர் பி.டி.ஏ (MPTA)
- விழாக்கள்
- மத்திய உணவுத் திட்டம்
- தேர்வுகள்
- உயிரியப் பல்வகைமை பூங்கா
- பல்வேறு சோதனைக்கூடங்கள்
- விளையாட்டிடம்
- 
- 

## தலைமை ஆசிரியர்களின் பொறுப்புகள்

பள்ளிக்கூட நிர்வாகம், கல்விசார் காரியங்களுக்குத் தலைமை தாங்கி நடத்துபவர் தலைமை ஆசிரியர் ஆகும். சக ஆசிரியர்களையும் பிறரையும் ஊக்குவிப்பதுடன் அவர்களின் கூட்டுறவை உறுதிப்படுத்தவும் அவரால் இயலவேண்டும். தலைமை ஆசிரியரின் முக்கியப் பொறுப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.






ஆசிரியர்களின் பொறுப்புகளில் சில மேலே கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் பலவற்றைக் கலந்துரையாடிக் கண்டுபிடித்து நாட்குறிப்பேட்டில் எழுதவும்.

### ஆசிரியர்கள் தயாராக்கிப் பாதுகாக்க வேண்டிய பதிவேடுகள்

ஆசிரியர்கள் தயாராக்கிப் பாதுகாக்க வேண்டிய முக்கியப் பதிவேடுகளில் சில கீழே தரப்பட்டுள்ளன.

- குழந்தைகளின் வருகைப்பதிவேடு
- குழந்தைகளின் கற்றல் மேம்பாட்டுப் பதிவேடு
- கற்பித்தல் குறிப்பேடு
- பல்வேறு கற்றல் கருவிகளின் தொகுப்பு
- மதிப்பீடு செய்ததன் பதிவுகள்
- CPTA யுடன் தொடர்புடைய பதிவுகள்
- 
- 

### பள்ளிக்கூடத்தில் தயாராக்கிப் பாதுகாக்க வேண்டிய பதிவேடுகள்

மாணவர்களின் கல்விக் காலத்தின் முழு விவரங்களையும் பாதுகாக்கும் மையமே பள்ளிக்கூடம். பள்ளிக்கூட ஆசிரியர்களின் சேவைக் கால விவரங்களும் பள்ளிக்கூடத்தில் காணப்படும். பள்ளிக்கூடத்திலிருந்து கற்றலை நடுவில் நிறுத்திப் போகின்ற குழந்தைக்குப் பின்னர் எப்போதாவது

நுழைவுப் பதிவேட்டிலிருந்து அவசியமான தகவல்கள் அறியவேண்டும் என இருக்கட்டும். பள்ளிக்கூடம் சென்றால் நுழைவுப் பதிவேட்டிலிருந்து அவசியமான தகவல்கள் கிடைக்கும். சில பள்ளிக்கூடங்கள் குழந்தைகளின் கற்றல் தரத்தையும் குணச்சிறப்பியல்புகளையும் பதிவு செய்கின்ற அனக் டாட் ரிகார்டுகளும் பாதுகாப்பதுண்டு. பள்ளிக்கூடத்தில் பாதுகாக்கின்ற முக்கியப் பதிவேடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

- ஆசிரியர்களின் வருகைப் பதிவேடு
- கால அட்டவணை
- லோக் புத்தகம்
- தொகுப்புப் பதிவேடு
- தேர்வுப் பலனைப் பதிவு செய்யும் பதிவேடு
- நுழைவுப் பதிவேடு
- விடுதலிச் சான்றிதழ் பதிவேடு
- கட்டணப் பதிவேடு
- கற்பித்தல் கையேடு
- கல்விசார் பெருந்திட்டம்
- அறிக்கைப் புத்தகம்
- சோதனை நாட்குறிப்பேடு
- இருப்புப் பதிவேடுகள்
- பார்வையாளர் நாட்குறிப்பேடு
- தேக்கநிலைப் பதிவேடு
- பொருளாதாரப் பதிவேடு
-
-

**தலைமை ஆசிரியர்களின் வகுப்பறைக் கண்காணிப்பும் பள்ளிக்கூடக் கண்காணிப்பும்**

ஒரு பள்ளிக்கூடத்தின் கல்விக் காரியங்களுக்குத் தலைமைப் பொறுப்பேற்கும் நபரே தலைமை ஆசிரியர். சக ஆசிரியர்களைப் போன்று வகுப்பு எடுக்க வேண்டிய பொறுப்பும் தலைமை ஆசிரியருக்கு உண்டு. வாரத்தில் ஒரு தடவையாவது தலைமை ஆசிரியரினுடையவும் எஸ்.ஆர்.ஜி நடத்துனரினுடையவும் தலைமையில் எஸ்.ஆர்.ஜி கூட்டம் நடைபெற வேண்டும். ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு பாடப்பிரிவு சார்ந்து ஒருவாரம் நடத்த வேண்டிய கற்றல் செயல்பாடுகள் தொடர்பாக அந்தக் கூட்டத்தில் கலந்துரையாடவேண்டும். குழுக் கலந்துரையாடல் வாயிலாக வடிவமைக்கின்ற கற்றல் உத்திகளையே வகுப்பறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். அத்துடன் தொடர்புடைய கற்பித்தல் குறிப்பேட்டை ஒவ்வொரு ஆசிரியரும் தயாராக்கித் தலைமை ஆசிரியரைக் காண்பிக்க வேண்டும். வகுப்புகள் பயன்பாடுடையதாக அமையவேண்டுமெனில் வகுப்பறைக் கண்காணிப்பை வலுப்படுத்த வேண்டும்.

பயன் மிக்க ஒரு பள்ளிக்கூடம் என்ற கருத்தை நடைமுறைப்படுத்த தலைமை ஆசிரியர் தலைமைப் பொறுப்பேற்க வேண்டும். சக ஆசிரியர்களையும் எஸ்.எம்.சி, பி.டி.ஏ, எஸ்.எஸ்.ஜி (School supporting groug) என்பனவற்றின் துணையுடன் கற்றல் செயல்பாடுகளை மேம்படுத்த முயற்சி செய்ய

வேண்டும். பள்ளிக்கூடத்திற்கு அவசியமான அனைத்துப் பௌதிக வசதிகளையும் நடைமுறைப்படுத்த வேண்டும். பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் உதவியுடன் பிற மக்கள் பிரதிநிதிகளின் உதவியையும் இணைத்து அவற்றிற்கு உரிய நிதி உதவியைப் பெற வேண்டும். கல்வியாண்டு தொடங்கும் முன்னரே பள்ளிக்கூட மேம்பாட்டுத் திட்டத்தையும் கல்விசார் பெருந் திட்டத்தையும் தயாராக்க வேண்டும். கல்விசார் பெருந்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தலைமை ஆசிரியருக்கு உரியது. அது பயன்மிக்கப் பள்ளிக்கூடக் கண்காணிப்பு வாயிலாகவே நிறைவேறும்.

## பள்ளிக்கூட மேலாண்மைக் குழு (எஸ்.எம்.சி) பெற்றோர் – ஆசிரியர் சங்கம் (பி.டி.ஏ) வகுப்பு பி.டி.ஏ என்பனவற்றின் அமைப்பும் செயல்பாடுகளும்

2009 இன் கல்வி உரிமைச் சட்டத்தை அடியொற்றிப் பள்ளிக்கூடங்களில் செயல்படத் தொடங்கிய அமைப்புகளே பள்ளிக்கூட மேலாண்மைக் குழுக்கள் (எஸ்.எம்.சி), 750 குழந்தைகளில் குறைவுள்ள பள்ளிக்கூடங்களில் நடத்துனர், துணை நடத்துனர் தவிர 20 பேர் இருக்க வேண்டும். எஸ்.எம்.சி இன் மொத்த உறுப்பினர்களில் 75% பேரைப் பெற்றோர் / பொறுப்பாளர்களிலிருந்து எடுக்க வேண்டும். எஸ்.சி / எஸ். டி மாணவர்களின் பெற்றோரும் பலவீன – தனிக்கவனம் தேவைப்படும் மாணவர்களின் பெற்றோரும் கட்டாயமாக இருக்க வேண்டும். மீதியான 25% உறுப்பினர்களில் பள்ளிக்கூடம் நிலைகொள்கின்ற இடத்தின் பஞ்சாயத்து வட்டாரத்தொகுதி உறுப்பினர்/நகராட்சிக் கவுன்சிலர், பள்ளிக்கூட ஆசிரியப் பிரதிநிதிகளில் ஒருவர், பெற்றோர்கள் தீர்மானிக்கின்ற இடத்தில் உள்ள கல்வியியலாளர்கள், பள்ளிக்கூட லீடர் என்போரும் இருக்க வேண்டும். எஸ்.எம்.சி – இன் மொத்த உறுப்பினர்களில் 50% மகளிர் இடம்பெற்றிருக்க வேண்டும். தலைவர், துணைத்தலைவர் என்போர் பெற்றோர்களின் பிரதிநிதிகள் ஆவர். தலைமை ஆசிரியர் முன் உறுப்பினரும் நடத்துனரும் ஆகும். மேல்நிலைப் பள்ளிக்கூடமெனில் முதல்வர் நடத்துனரும் தலைமை ஆசிரியர் துணை நடத்துனரும் ஆவர். மேம்பட்ட அறிவுரைக்காக 3 சிறப்பு விருந்தினர்களும் எஸ்.எம்.சி-இல் இடம்பெற்றிருப்பர். ஆனால் இவர்களுக்கு வாக்குரிமை இல்லை. கூட்டத்துக்கு உரிய உறுப்பினர் எண்ணிக்கையை நிறைக்கவும் இவர்களால் இயலாது. இரு மாதங்களுக்கு ஒரு முறையாவது கூட்டம் கூட்டியிருக்க வேண்டும்.

## எஸ்.எம்.சி இன் பொறுப்புகள்

- பள்ளிக்கூடச் செயல்பாடுகளின் கண்காணிப்பு
- பள்ளிக்கூட மேம்பாட்டுத் திட்டம் (SDP) தயாராக்குவதுடன் அதை நடைமுறைப்படுத்த பரிந்துரைகள் அளித்தல்
- அரசு, பஞ்சாயத்து, பிற முகமைகள் தரும் நிதி உதவிகளைப் பரிமாற்றம் செய்வதற்கு உரிய மேற்பார்வை வகித்தல்
- கல்வி உரிமைச் சட்டத்தைப் (RTE) பற்றி வட்டார சமூகத்தில் விழிப்புணர்வு அளித்தல்
- ஆசிரியர்கள் நேரம் தவறாமையைக் கடைபிடிக்கின்றனர் என்றும் பெற்றோருடன் சந்திப்புகள் நிகழ்கின்றன என்றும் குழந்தைகளின் வருகை, கற்றல் திறன், கற்றல் முன்னேற்றம், பிற தகவல்கள் என அனைத்தும் பெற்றோருக்குத் தெரிவிக்கப்படுகின்றன என்று உறுதிப்படுத்துதல்
- மக்கள் தொகை கணக்கெடுப்பு, பேரிடர் உதவிச் செயல்பாடுகள், தேர்தல் பணி என்பன தவிர கல்வி சாராத பணிகளுக்கு ஆசிரியர்களைப் பயன்படுத்தவில்லை என உறுதிப்படுத்துதல்
- நிபுணர்களின் உதவியுடன் குழந்தைகளின் வருகைக் குறைவு, கற்றல் முன்னேற்றம் என்பன கண்காணித்தல்

- சுயாட்சி நிறுவனங்கள் தயாராக்கிய ஆசிரியர் வங்கியிலிருந்து ஓராண்டுக்குக் குறைவான காலி வேலையிடங்களில் ஆசிரியர்களை நியமித்தல்
- மாணவர்கள் கற்றலை விட்டுப் போதலைத் தடை செய்தல் - 15 நாட்கள் தொடர்ந்து பள்ளிக்கூடம் வராத குழந்தைகள் மீண்டும் வருவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- குழந்தைகள் சந்திக்கும் வன்முறைகள், நுழைவு அனுமதி அளிக்காதிருத்தல், உதவிகளை உரிய நேரங்களில் அளிக்காதிருத்தல் என்பனவற்றைச் சுயாட்சி நிறுவனங்களுக்கும் அரசுக்கும் தெரிவித்தல்
- தனிக் கவனம் தேவைப்படும் மாணவர்கள், கற்றலில் பின்தங்கிய மாணவர்கள் என்போருக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுவதை உறுதிப்படுத்துதல்
- மதிய உணவுத் திட்டக் கண்காணிப்பு
- பள்ளிக்கூடத்திற்குக் கிடைக்கின்ற நிதிஉதவிகள் தொடர்பான வரவு - செலவுக் கணக்கு. ஆண்டுக் கணக்கு என்பன தயாராக்குதல்

## PTA இன் அமைப்பும் செயல்பாடுகளும்

ஆசிரியர்களும் பெற்றோர்களும் உட்படும் குழுவே பெற்றோர் - ஆசிரியர் சங்கம் (Parent Teacher Assocation - P.T.A) PTA தலைவர், துணைத் தலைவர் பதவிகளில் பெற்றோர்கள் செயல்படுகின்றனர். சங்கத்தின் நடத்துனர் / செயலாளர் தலைமை ஆசிரியர் ஆவார். கல்வியாண்டின் முதல் பொதுக் கூட்டத்தை ஜூன் 15 முன்னரே கூடவேண்டும். ஆண்டுக்கு 3 தடவையாவது பொதுக்குழு கூடவேண்டும். செயற்குழு மாதத்தில் ஒரு தடவை கூடவேண்டும். பள்ளிக்கூடத்தின் முழு வளர்ச்சிக்குச் செயல்படும் சங்கமே இது.

## முக்கியச் செயல்பாடுகள்

- பள்ளிக்கூட மேம்பாட்டுத் திட்டம் வடிவமைத்தலும் நடத்துதலும் கண்காணித்தலும்
- வளம்சார் விவரணையாக்கம் நடத்திக் கிடைக்கின்ற வட்டார வளங்களைக் கண்டுபிடித்தல்
- பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு வகுப்புகளை ஒருங்கிணைத்தல்
- எல்.எஸ்.ஜி (Local Self Government), எஸ்.எஸ்.கே (Samagra Shiksha Kerala) என்பனவற்றினுடையவும் பிற வருவாய் உறைவிடங்களிலிருந்தும் உள்ள நிதித் தொகையைப் பயன்மிக்க முறையில் பரிமாற்றம் செய்தல், வரவு - செலவுக் கணக்கைப் பாதுகாத்தல்
- குழந்தைகளின் கற்றல் பின்தங்கிய நிலையின் காரணங்களைக் கண்டுபிடித்து தீர்வுச் செயல்பாடுகளை வட்டாரப் பங்களிப்புடன் தயாராக்கி அவற்றை நடைமுறைப்படுத்துவதுடன் மேற்பார்வை வகித்தல்
- மதிய உணவுத் திட்டத்தை ஊட்டச்சத்து மிக்கதாக ஆக்குவதற்கும் மேம்பட்ட முறையில் ஒருங்கிணைக்கவும் உரிய செயல்பாடுகள்
- பல்வேறு சோதனைக் கூடங்கள், நூல்நிலையம், பிற பௌதிக வசதிகள் என்பன மேம்படுத்துவதற்கு உரிய செயல்பாடுகள்.
-
-

## வகுப்பறை பி.டி.ஏ - அமைப்பும் செயல்பாடுகளும்

வகுப்பின் கல்வி – பௌதிக வசதிகளைச் செய்வதில் நுணுக்கமாகச் செயல்படும் குழுவே வகுப்பறை பி.டி.ஏ. பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு வகுப்புப் பிரிவிலும் படிக்கின்ற குழந்தைகளின் பெற்றோர்களும் வகுப்பு ஆசிரியரும் தலைமை ஆசிரியரும் சேர்ந்ததே வகுப்பறை பி.டி.ஏ. மாதத்தில் ஒரு வகுப்பறை பி.டி.ஏ கூட்டம் கூட்ட வேண்டும். மேலே குறிப்பிட்ட கூட்டங்களின் முக்கிய இலக்கு குழந்தைகளின் கல்வி மேம்பாடாக இருக்கவேண்டும். வகுப்பறை பி.டி.ஏ கூடும் தேதியும் நேரமும் மிக முன்னரே பெற்றோர்களை அறிவிக்க வேண்டும்.

### செயல்பாடுகள்

- மாதத்தில் ஒரு தடவையாவது வகுப்பறை பி.டி.ஏ கூட்டம் கூட்ட வேண்டும். குழந்தைகளின் கற்றல் வளர்ச்சியை மதிப்பீடு செய்து மேன்மைகளையும் குறைபாடுகளையும் கலந்துரையாடுதல்
- பொது வெளியீட்டின் பின்னர் ஒவ்வொரு குழந்தையின் பிரச்சினைகள், கற்றல் வளர்ச்சி என்பனவற்றைக் கலந்துரையாடலுக்கு உட்படுத்துதல்
- கற்றல் செயல்பாட்டின் பிரிவாக வடிவமைக்கப்பட்ட படைப்புகளைக் காண்பதுடன் மதிப்பீடு செய்யவும் பெற்றோருக்கு வாய்ப்பு அளித்தல்
- அடுத்த மாதம் வகுப்பறையில் நடத்தப்போகும் செயல்பாடுகளின் வரைவினை வகுப்பறை பி.டி.ஏ இல் கலந்துரையாடுதல்
- பெற்றோர்களுக்கு எந்தெந்தக் காரியங்களில் எவ்வாறெல்லாம் குழந்தைக்கு உதவமுடியும் என்று பெற்றோர்களைப் புரியவைத்தல்
- பெற்றோர்களின் உதவி அவசியமான நிகழ்வுகளில் அவர்களின் உதவியை நாடுதல்
- பாட ஏற்பாடு பற்றிப் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு வகுப்புகளை ஒருங்கிணைத்தல்
- 
- 

வகுப்பறை பி.டி.ஏ இல் கலந்துரையாட வேண்டியன யாவை? பெற்றோர்களின் எத்தகைய உதவிகள் தேவைப்படும்? குழுவில் கலந்துரையாடித் தெரிந்து கொள்ளுங்கள். கிடைக்கும் தகவல்களை உங்கள் நாட்குறிப்பேட்டில் பதிவு செய்தல். அத்துடன் ஒரு சி.பி.டி.ஏ கூட்டத்தைப் பயன்மிக்கதாக ஒருங்கிணைப்பதற்குச் செய்ய வேண்டிய முன் தயாரெடுப்புகள் யாவை? எனக் கண்டுபிடிக்கவும் வேண்டும்.

> வகுப்பறை பி.டி.ஏ யுடன் தொடர்புடைய மேலும் பல காரியங்கள் அலகு - ஆறில் சேர்க்கப்பட்டுள்ளன.

KER, RTE ஆக்ட் என்பனவற்றில் உள்ள பள்ளிக்கூட நிர்வாக அமைப்புடன் தொடர்புள்ள காரியங்களைப் பார்வையிடல் வாயிலாகக் கண்டுபிடித்து குறிப்பு தயாராக்கவும். பள்ளிக்கூடச் செயல்பாடுகள், தலைமை ஆசிரியர்களின் பொறுப்புகள், அவர்கள் தயாராக்க வேண்டிய முக்கியப் பதிவேடுகள் என்பனவற்றை ஒரு தலைமை ஆசிரியையுடன் நேர்காணல் நடத்தி அறிக்கை தயாராக்கவும்.

## ■ SCERT, SIEMAT, SIET, KITE, DIET, BRC, CRC, IASE, CTE என்பனவற்றின் பொறுப்புகளும் செயல்பாடுகளும்

நம் மாநிலக் கல்வி அமைப்பை உயிரோட்டத்துடன் நிலை நிறுத்தவும் வளப்படுத்தவும் இந்த

முகமைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. இத்தகைய முகமைகள் / நிறுவனங்கள் தொடர்பான சுருக்க விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (State Council of Educational Reserche and Training - SCERT)**

மாநிலப் பள்ளிக்கூடக் கல்விக்குக் கல்வித் தலைமை அளிக்கின்ற தன்னாட்சி நிறுவனமே எஸ்.சி.இ.ஆர்.டி 1994 இல் தொடங்கப்பட்டது. பொதுக் கல்வித்துறை அமைச்சர் தலைவராகவும் பொதுக் கல்வித் துறைச் செயலர் துணைத் தலைவராகவும் உள்ள ஆட்சிக்குழு எஸ்.சி.இ.ஆர்.டி – யின் செயல்பாடுகளுக்கு மேற்பார்வை வகிக்கின்றது. ஆறு பிரிவுகள் எஸ்.சி.இ.ஆர்.டி க்கு உள்ளது. பாடஏற்பாடும் மதிப்பீடு செய்தலும், ஆசிரியக் கல்வி, கல்வித் தகவல் தொழில் நுட்பம், கலை விளையாட்டு/தொழில்சார் கல்வி, முறை சாராக் கல்வி, கல்வி ஆராய்ச்சி, ஆவணப்படுத்துதல் என்பன.

கல்வித் துறையின் கீழ் உள்ள பள்ளிக்கூடங்களின் பாட ஏற்பாடும் பாடப்புத்தகங்களும் தயாராக்குதல் என்பதே எஸ்.சி.இ.ஆர்.டி யின் முக்கியப் பொறுப்பு. பிற பொறுப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உள்ள கையேடுகள் தயாராக்குதல்
- ஆசிரியர்களின் பயிற்சிக் கூட்டங்களின் core SRG, SRG போன்றவற்றை ஒருங்கிணைத்தல்
- கல்வி ஆராய்ச்சிகளுக்குத் தலைமை அளித்தல்
- பல்வேறு தேர்வுகளின் (எஸ்.எஸ்.எல்.சி, கே.டெட், LSS, USS etc) என்பனவற்றின் பாடத்திட்டம் தயாராக்குதல்
- பல்வேறு நிலை சார் கல்விக் கருத்தரங்கங்கள் ஒருங்கிணைத்தல்
- நவீன கற்றல் உத்திகள், கற்றல் கருவிகள் எனும் முயற்சிகளில் ஈடுபடுதல்
- பொதுக் கல்வித் துறையுடன் தொடர்புள்ள ஆய்வுகள் நடத்துதல்
- 
- 

## State Institute of Educational Management and Training (SIEMAT)

2005 ஜூலை 21 அன்று நிறுவப்பட்டது. கல்வி நிர்வாகத்துடன் தொடர்புள்ள பயிற்சிகளையும் ஆராய்ச்சிகளையும் ஆய்வுப் பார்வைகளையும் மேற்கொள்ளுதல் என்பதே SIEMAT இன் முக்கிய இலக்கு.

### பிற செயல்பாடுகள்

- தொடக்க நிலைப் பள்ளிக்கூடங்கள், உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள், மேல்நிலைப் பள்ளிக்கூடங்களின் தலைவர்களுக்கு உள்ள (தலைமை ஆசிரியர் / முதல்வர்) பயிற்சிக்கூட்டங்களை ஒருங்கிணைத்தல்
- கல்வி அதிகாரிகளுக்கு உள்ள (கல்வித் துணை இயக்குனர், டயட் முதல்வர், மாவட்டக் கல்வி அதிகாரி, துணை மாவட்டக் கல்வி அதிகாரி) ஆக்கமூட்டும் கூட்டங்கள் ஒருங்கிணைத்தல்
- கல்வி அலுவலகங்களின் அலுவலகர்களுக்கு உரிய நிர்வாகப் பயிற்சி அளித்தல்
- பொதுக் கல்வித்துறையில் மாநிலத்தர மதிப்பாய்வு, திட்டமிடுதலின் கூட்டம் என்பன ஒருங்கிணைத்தல்

- பள்ளிக்கூட மேலாண்மை தொடர்பான கருத்தரங்கங்கள் நடத்துதல்
- கல்வி மேலாண்மை தொடர்பான ஆராய்ச்சிகள் நடத்துதல்
- புத்தகங்கள், இதழ்கள், கையடக்கக் குறிப்புகள் திட்டம் - மேலாண்மை - ஆட்சி என்பனசார்ந்த ஆய்வுகளின் வெளியீடுகள்
- பள்ளிக்கூட மேலாண்மை தொடர்பான செயல்பாடுகளைப் பதிவுகளை ஆவணப்படுத்துதல்
- பல்வேறு காரியங்கள் தொடர்பான தரவுத் தொகுப்பு தயாராக்குதல்
-
-

## State Institute of Educational Technology (SIET)

பொதுக் கல்வித்துறையின் பிரிவாகச் செயல்படும் தன்னாட்சி நிறுவனமே SIET. 1998 - 99 இல் இது செயல்படத் தொடங்கியது. பொதுக் கல்வித்துறை அமைச்சர் தலைவராகவும் பொதுக் கல்வித் துறைச் செயலர் துணைத் தலைவராகவும் உள்ள 16 உறுப்பினர்கள் அடங்கிய குழுவே இதன் மேற்பார்வை வகிக்கின்றது.

ஒளி - ஒலி நிகழ்ச்சிகள், கணினி, பல்லூடகம் எனக் கல்விசார் மென்பொருட்கள் தயாராக்குவதுடன் பரிமாற்றம் செய்வதுமே SIET இன் முக்கியப் பொறுப்பு.

### பிற செயல்பாடுகள்

- பாடப்புத்தகங்களில் டிஜிட்டல் உள்ளடக்கம் தயாராக்குதல்
- குழந்தைத் திரைப்படங்களுக்கு அவசியமான தொழில்நுட்ப அறிவை அளித்தல் - பயிற்சி அளித்தல்
- குழந்தைத் திரைப்பட விழாக்களை ஒருங்கிணைத்தல் (குழந்தைகளின் திரைப்படம், குழந்தைகளுக்காக உள்ள திரைப்படம்)
- பாடங்களை ஒலிபரப்பு செய்வதற்கு உரிய வசதிகள் செய்தல்
- கல்வித் தொழில் நுட்பம் பற்றிய சமூக விழிப்புணர்வைத் தோற்றுவித்தல்
- ஆன்லைன் கோர்ஸ்களை ஒருங்கிணைத்தல்
- பல்வேறு புரொபஷனல் கோர்ஸ்களின் நுழைவுக் கருவிகள் தயாராக்குதல் - எளிய நுழைவு நிகழ்ச்சி.
- இயல்நாட்டத் தேர்வுகளை (Apttitade Test) மேம்படுத்துதல்
- கல்வித் தொழில்நுட்பத்துடன் தொடர்புள்ள பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தல்

## Kerala Infrastructure and Technology for Education (KITE)

மாநிலத்துக்கு உரியதோ அரசின் உதவியுடனோ செயல்படும் கல்வி நிறுவனங்களை நவீனமயப்படுத்துதலுக்கு ஊக்கம் ஊட்டுதல் என்ற இலக்குடன் நிறுவப்பட்ட நிறுவனமே KITE. 2001 முதல் நடைமுறையிலிருந்த IT@ பள்ளிக்கூடம் என்ற திட்டமே 2017 ஆகஸ்டில் KITE ஆக உயர்த்தப்பட்டது. பள்ளிக்கூடத்தின் அடிப்படை வசதிகளை விரிவுபடுத்தும் நிகழ்ச்சிகளை மேம்படுத்துவதற்காக KITE இன் கீழ் ஓர் உள்கட்ட அமைப்புத்துறை செயல்படுகின்றது. தகவல் -

கருத்துப் பரிமாற்றத் தொழில் நுட்பம், திறன் மேம்பாடு, உள்ளடக்க மேம்பாடு தொடர்ச்சி, மின் - கற்றல், செயற்கைக்கோள் சார் கல்வி, பின்துணை, பராமரிப்பு அமைப்பு மின்-கவேன்ஸ் என்பன இதில் உட்படுகின்றன.

அடிப்படை வசதி மேம்பாடு, வளங்கள், பாடஏற்பாடு, கற்பித்தல் எனும் துறைகள் சார்ந்து கல்வித் தரத்தை உயர்த்துவதே அரசின் இலக்காகும். ஐ.சி.டி இன் உதவியுடன் செயல்திட்டங்களை வடிவமைப்பதையும் நடைமுறைப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஐ.சி.டி வாயிலாகக் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு அரசு, உதவி அளிக்கும் துறைகளுக்கு அறிவுரை வடிவிலோ அறிவுரையாளராகவோ செயல்படுகிறது. இதனுள் 4751 பள்ளிக்கூடங்களில் 45000 வகுப்பறைகள் உயர் ரக வகுப்பறைகளாக மாறியுள்ளன.

## KITE இன் தலைமையில் நடக்கும் சில செயல்கள்

- சமேதம் (SAMETHAM) கேரளப் பள்ளிக்கூடத் தரவு வங்கி (கேரள ஸ்கூல் டேட்டா பேங்க்)
- கூள் (KOOL) - KITE இன் திறந்த நிகழ்நிலை கற்றல் அமைப்பு (ஓபன் ஆன்லைன் லேனிங் சம்விதானம்)
- விக்டேல்ஸ் - விக்டேல்ஸ் சானல் 2006 இல் தொடங்கப்பட்டது. EDUSAT இன் உதவியுடன் செயல்படுகிறது
- சமக்ர - ரிசோல்ஸ் போர்ட்டல்
- பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் என்பனவற்றை நவீனப்படுத்துதல்
- சம்பூர்ண ஸ்கூல் மானேஜ்மெனட் சொல்யூஷன் - 2010 இல் தொடங்கப்பட்டது
- ஸ்கூல் விக்கி
- ஐ.சி.டி உள்கட்டமைப்பு மேலாண்மை (ஐ.சி.டி இன்ப்ராஸ்ட்ரக்சர் மானேஜ்மென்ட்)
- லிட்டில் கைட்ஸ் (Little Kites) - ஐ.டி. க்ளப் திட்டம் 2018 ஜனுவரி 22 இல் தொடங்கப்பட்டது.
- SCERT உடன் இணைந்து ஐ.சி.டி பாடப்புத்தகங்கள் தயாராக்குதல்
- 
- 

DIET, BRC, CRC என்பனவற்றின் அமைப்பு, பொறுப்புகள் என்பன அலகு 5 (பருவம் 3) இல் உட்படுத்தப்பட்டுள்ளன. கவனிக்கவும்.

## Institute of Advanced Studies in Education (IASE)

நம் மாநிலத்தில் ஒரு ஐ.ஏ.எஸ்.இ மட்டுமே நடைமுறையில் உள்ளது. இது செயல்படுவது திருச்சூரில் ஆகும். ஆசிரியக் கல்வித் துறையில் ஐ.ஏ.எஸ்.இ பெரும் நன்கொடைகள் அளித்துள்ளது. ஐ.ஏ.எஸ்.இ யின் முக்கியப் பொறுப்புகளும் கடமைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- மேல்நிலைக் கல்வித் துறையின் முன் - சேவை (Pre service) இன்சர்வீஸ் ஆசிரியப் பயிற்சிகள் நடத்துகின்ற மையங்களே IASE. இதுதவிர M.Ed, M-Phil, Phd எனும் பிரிவுகளின் மேற்பார்வையும் IASE க்கு உண்டு.

- முன்-சேவை மேல்நிலை ஆசிரியப் பயிற்சி நிகழ்ச்சி (B.Ed) நடத்துதல்
- மாஸ்டர் ஆப் எஜீகேஷன் கோர்ஸ் (M.Ed) நடத்துதல்
- DIET, CTE (College of Teacher Education) ஆசிரியர்களுக்கு உரிய சுருக்கக் காலப் பயிற்சித் தொடர்களை ஒருங்கிணைத்தல்.
- ஆசிரியர்களுக்கும் ஆசிரியப் பயிற்சி அளிப்பவர்களுக்கும் (Resource support) மூல வளம் அளித்து உதவுதல்
- கல்வித்துறையில் அடிப்படை ஆராய்ச்சிகளும் சோதனைகளும் நடத்துதல்
- முன் முனைவர் (M.Phil), முனைவர் P.hd) எனும் கல்விப் பிரிவுகளை மேற்பார்வையிடுதல்
- பாடஏற்பாடு, கற்பித்தலியல், தேர்வு மதிப்பீடு செய்தல் மதிப்பீடு எனும் பிரிவுகளில் ஆழமான ஆய்வு மேற்கொள்ளல்
- பாடஏற்பாடு, கற்றல் கருவிகள் என்பன மேம்படுத்துதல்
- கல்வித்திட்டமும் நிர்வாகமும் - பயிற்சி நடத்துதல்
- கல்வி ஆட்சியாளர்களின் பயிற்சிக் கருத்தலகை மேம்படுத்துதல்
-
-

## College of Teacher Education (CTE)

மேல்நிலை ஆசிரியர்களுக்கு உரிய சேவைக் கால ஆசிரியப் பயிற்சி நடத்துகின்ற நிறுவனங்களே CTE கள்

- இளநிலை ஆசிரியப் பயிற்சி. (B.Ed)
- முதுநிலை ஆசிரியப் பயிற்சி (M.Ed)
- உயர்நிலைப் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு உரிய சேவைக்காலப் பயிற்சி அளித்தல்
- முன்முனைவர், முனைவர் எனும் கல்விப் பிரிவுகளுக்கு நுழைவு அனுமதி அளித்தல்
-

**செயல்பாடு**

இங்குக் குறிப்பிட்ட பல்வேறு நிறுவனங்கள் பற்றி மேலும் கலந்துரையாடல் நடத்தவும். மட்டுமன்று, உங்கள் ஆசிரியர்களிடமிருந்தும் பிற வருகை ஆசிரியர்களிடமிருந்தும் கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் குறிப்புகள் தயாராக்குவதற்குக் கவனிப்பீர்கள் அல்லவா.

### ■ நிறுவன மேலாண்மை, வகுப்பு மேலாண்மை, நேர மேலாண்மை, மனித வளத்திறன் மேலாண்மை

ஒரு பள்ளிக்கூடச் செயல்பாடு மிகப் பயன்தரும் முறையில் நடப்பதற்குச் சரியான நிர்வாக முறை அவசியமாகும். பள்ளிக்கூடம், வகுப்பு, நேரம் என்பனவற்றுடன் மனித வளமும் உபயோகிப்பதற்கு உரிய நல்ல நிர்வாக முறை அமைய வேண்டும். இதற்கு முன்னால் நின்று செயல்பட வேண்டியவர் தலைமை ஆசிரியர். தலைமை ஆசிரியரின் பங்களிப்பு குறித்து நாம் முன்னரே கலந்துரையாடினோம் அல்லவா. பல்வேறு காரணிகளின் மேலாண்மையுடன் தொடர்புகொண்டு தலைமை ஆசிரியரின் தலைமையில் நடக்க வேண்டிய காரியங்கள் சில கீழே உள்ளன.

- பள்ளிக்கூட அனைத்துச் செயல்பாடுகளின் திட்டமிடுதலும் ஒருங்கிணைத்தலும்
- ஆசிரிய - ஆசிரியர் அல்லாத பிரிவினரின் பணி பங்கீடு
- பெற்றோர்கள், சமூகம், உயர் அதிகாரிகள் என்போருடன் நல்லுறவு நிறுவுதல்
- பள்ளிக்கூடச் செயல்பாடுகளுடன் தொடர்புள்ள பல்வேறு கூட்டங்களை ஒருங்கிணைத்தல்
- சமூகச் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்
- பௌதிகச் சூழல்களின் மேம்பாடும் கல்விவளத் தொகுப்பும்
- ஆசிரியர்கள், மாணவர்கள் என்போரின் செயல்களை மதிப்பீடு செய்தல்
-
-
-

கலந்துரையாடல் வாயிலாக மேலும் பல காரியங்களைக் கண்டுபிடித்து நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யவும்.

மேலே குறிப்பிட்ட மேலாண்மைசார் செயல்பாடுகளுடன் தொடர்புகொண்டு பள்ளிக்கூடங்களில் முக்கியமாக நடைமுறைப்படுத்த வேண்டியதும் தயாராக்க வேண்டியதும் ஆன பல்வேறு செயல்பாடுகளும் கருவிகளும் எவை? அவற்றில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் பல காரியங்களையும் இணைக்கவும்.

- கல்விசார் பெருந்திட்டம் தயாராக்குதல்
- பொறுப்புகளின் பங்கீடும் நேர அட்டவணை தயாரித்தலும்
- வாரம் தோறும் மாதம் தோறும் உள்ள நாள்காட்டிகள்
- ஆண்டு நாள்காட்டி
- பயன்மிக்க முறையில் SRG (School Resource Group) கூட்டங்களை ஒருங்கிணைத்தல்
- PTA, CPTA, MPTA கூட்டங்கள்
- SSG (School Supporting Group) கூட்டங்கள்
- பள்ளிக்கூடத்திற்கு அவசியமான பௌதிக - கல்வி சார் வசதிகளை நன்முறையில் அமைத்தல்
- பள்ளிக்கூடத்தையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாகப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகள்
- பள்ளிக்கூடக் கூட்டங்களின் (அசெம்பளி) ஒருங்கிணைப்பு
- பள்ளிக்கூடப் பணியாளர்களின் மாணவர்களின் வருகையை உறுதிப்படுத்துதல்
- பணிக்கு வராத ஆசிரியர்களுக்குப் பதிலாகப் பதில் ஏற்பாடுகளைச் செய்தல்
- நேர அட்டவணைக்கு ஏற்ப வகுப்புகள் நடக்கின்றன என உறுதிப்படுத்துதல்
- மதிய உணவு தயாராக்குவதற்கு உரிய ஏற்பாடுகள் - கண்காணிப்பு
- ஆசிரியர் குறிப்பேட்டைச் சோதித்துப் பார்த்தல் - வகுப்புக் கண்காணிப்பு
- சோதனைக்கூடம், நூல்நிலையம், ஐ.சி.டி வசதிகள், பிற கற்றல் கருவிகள் என்பனவற்றின் பயன்பாட்டை உறுதிப்படுத்துதல்
- பணியாளர்களின் கூட்டங்களை உரியநேரத்தில் நடத்துதல்
-
-

**செயல்பாடு**

பள்ளிக்கூடத்துடன் தொடர்புடைய பல்வேறு நிர்வாக முறைகள் பற்றிப் பார்வையிடல் வாயிலாகத் தகவல் திரட்டல் நடத்தவும் - அதன் அடிப்படையில் கட்டுரைப் படைப்பை தயாராக்கவும். கருத்தரங்கத்தை ஒருங்கிணைக்கவும்

## மதிப்பீடுசார் வினாக்கள்

- கல்வித்துணை இயக்குனரின் பொறுப்பு ஆசிரியர்களின் நியமனங்களும் ஆசிரியர்களின் இடமாற்றங்களும். இக் கூற்று உங்களுக்கு ஏற்புடையதா? எதனால்?
- ஒரு தலைமை ஆசிரியர் எத்தகையரோ அத்தகையனவே பள்ளிக்கூடம் (As is the headmaster, so will be the school) இக்கருத்துடன் உங்கள் கருத்து வெளிப்பாடினை விளக்குக.
- ஆசிரியர்கள் தயாராக்கிப் பாதுகாக்கவேண்டிய பதிவேடுகள் எவை? அவற்றின் நோக்கங்களைச் சுருக்கமாக எழுதவும்.
- வகுப்புக் கண்காணிப்பு என்றால் என்ன? விளக்குக.
- பள்ளிக்கூட நிர்வாகக் குழு / மேலாண்மைக் குழுவின் (SMC) முக்கியப் பொறுப்புகளை விளக்குக.
- ஒரு பள்ளிக்கூடத்தில் பெற்றோர் - ஆசிரியர் சங்கத்தின் செயல்பாடு மிக முக்கியமானது. இது பற்றிய உங்கள் கருத்து என்ன? தெளிவுபடுத்துக.
- உங்கள் வகுப்பின் வகுப்பு பி.டி.ஏ செயல்பாடுகளை வலுப்படுத்த நீங்கள் மேற்கொள்ள வேண்டிய முக்கிய நடவடிக்கைகள் எவை? விளக்குக.
- SCERT - இன் முக்கியப் பொறுப்புகள் எவை? விளக்குக.
- SCERT - செயல்படும் போது SIEMAT இன் செயல்பாடு அவசியமா? உங்களின் கருத்தாடல்கள் என்ன? உங்கள் கருத்தாடல்கள் பற்றிய காரணங்களையும் சுட்டிக்காட்டவும்.
- KITE இன் தலைமையில் நடக்கின்ற முக்கியச் செயல்பாடுகள் எவை? விளக்குக.
- பள்ளிக்கூட மேலாண்மையில் தலைமை ஆசிரியரின் பங்கினை விளக்குக.
- பள்ளிக்கூடத்தில் மனித வளத்திறன் மேலாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக.
- நேர மேலாண்மையுடன் தொடர்புகொண்டு பள்ளிக்கூடத்தில் செய்யவேண்டிய முக்கியச் செயல்பாடுகள் எவை? விவரிக்க.

## பார்வைக் கருவிகள்

D.Ed அத்யாபக சகாயி - SCERT கேரளம்

பிரதமம் பிரதானம் - பிரதம அத்யாபகர்க்குள்ள சகாய சாமக்ரி - DIET ஆலப்புழ 2011

https://kite.kerala.gov.in

siemat.kerala.gov.in

https://www.hsslive.in

பிரதம அத்யாபகர்க்குள்ள கைப்புஸ்தகம் - SIEMAT கேரளம்.

## அலகு - 5
# பள்ளிக்கூடப் பின்துணை அமைப்புகள்

### முன்னுரை

பொதுப் பள்ளிக்கூடங்களை மேன்மை மிக்க மையங்களாக மாற்றுதல் என்ற பெருந்திட்டமே பொதுக் கல்விப் பாதுகாப்பு வேள்வியின் முயற்சியாக நடைபெற்று வருகிறது. பள்ளிக்கூடத்தின் கல்வி - பௌதிகம், சமூகத்தொடர்பு எனும் வளர்ச்சிகளுக்குப் பல்வேறு பின்துணை அமைப்புகள் அவசியமாகும். ஒரு சமூக நிறுவனம் என்ற நிலையில் பள்ளிக்கூடத்தின் மேன்மையை உறுதிப்படுத்துவதற்குச் சமூகத்தின் பல்வேறு துறைகளிலும் உள்ள மனிதர்களிடமிருந்தும் நிறுவனங்களிலிருந்தும் வளங்களையும் திறன்களையும் பயன்படுத்தி வட்டாரம் முழுவதிலும் உள்ள மாணவர்களுக்குத் தரம் மிக்கக் கல்வி என்பதை உறுதிப்படுத்த நம்மால் இயலவேண்டும். பள்ளிக்கூடத்தின் பயன்மிக்கப் பின்துணைக் கூறுகளைப் பகுத்தறியவும் அவற்றின் வாய்ப்புகளை அலசி ஆராய்ந்து பயன்படுத்தவும் ஒவ்வொரு ஆசிரியருக்கும் இயலவேண்டும். இந்த இலக்கை முன்வைத்தே கலந்துரையாடல்களுக்கு ஐந்தாம் அலகில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

### முக்கியக் கருத்துகள்

- பயன்மிக்கப் பள்ளிக்கூடக் கண்ணோட்டத்தை உட்கொண்டு முழுமைசார் பள்ளிக்கூட மேம்பாட்டுத் திட்டத்தை வடிவமைப்பதற்கு உரிய சிந்தனையையும் திறனையும் மேம்படுத்த இயல வேண்டும்.
- முழுமைசார் பள்ளிக்கூட மேம்பாட்டுத் திட்டம், கல்விசார் பெருந்திட்டம் என்பனவற்றின் வடிவமைப்புச் செயல்களைப் பகுத்தறிதல் வாயிலாகப் பள்ளிக்கூடத் திட்டத்தை மேம்படுத்த இயலும்.
- பிரச்சினையின் காரணங்களைப் பகுத்தறிந்து தீர்வு செயல்பாடுகளை மேம்படுத்தும்போது மட்டுமே பிரச்சினைக்கு நிலையான தீர்வு ஏற்படும்
- நவீன பல்வகை முழுமையார்ந்த கல்வித் திட்டங்கள் தொடர்பான சிந்தனையுடன் கல்விசார் பெருந்திட்டம் தயாராக்குதல் இன்றியமையாதது
- பள்ளிக்கூடங்களை மேன்மைப்படுத்துவதற்கு மாவட்ட அளவில் நிர்வாகம் சார்ந்தும் கல்வி சார்ந்தும் உதவிபுரியும் அமைப்புகள் உள்ளன.
- மூன்றடுக்கு பஞ்சாயத்துகளும் பிரதிநிதிகளும் பள்ளிக்கூடச் செயல்பாடுகளில் மிக ஆழமாக ஈடுபடும் போது தரம் மிக்கப் பள்ளிக்கூடம் என்பது வடிவம் பெறும்.

### உள்ளடக்கம்

#### பள்ளிக்கூட மேம்பாடு - கண்ணோட்டம்

பயன்மிக்க மேம்பாட்டுக் கண்ணோட்டம் (கல்வி, பௌதிகம், சமூகம்)
முழுமைசார் பள்ளிக்கூட மேம்பாட்டுத் திட்டம் என்றால் என்ன? எதற்கு?
நவீன கல்விச் செயல்பாடுகள்
கல்விசார் பெருந்திட்டம் வடிவமைக்கும் செயல்

**துறைசார் பின்துணை அமைப்புகள் (மாவட்டத் தளம்)**

**நிர்வாகம் சார்ந்தன**

கல்வித்துணை இயக்குநர் (டி.டி.இ)
மாவட்டக் கல்வி அதிகாரி (டி.இ.ஓ)
துணை மாவட்டக் கல்வி அதிகாரி (ஏ.இ.ஓ)
தலைமை ஆசிரியர்

**கல்வி சார்ந்தன**

மாவட்டக் கல்விப் பயிற்சி மையம் (டயட்)
மாவட்டச் செயல்திட்ட அதிகாரி (எஸ்.எஸ்.கெ)
பிளாக் ரிசோழ்ஸ் சென்டர் (பி.ஆர்.சி)
க்லஸ்டர் ரிசோழ்ஸ் சென்டர் (சி.ஆர்.சி)

**சமூகம் சார் பின்துணை அமைப்புகள்**

பெற்றோர் ஆசிரியர் சங்கம் (பி.டி.ஏ)

மதர் சங்கம் (எம்.பி.டி.ஏ)

வகுப்புசார் பெற்றோர் ஆசிரியர் சங்கம் (சி.பி.டி.ஏ)

பள்ளிக்கூட மேலாண்மைக் குழு (எஸ்.எம்.சி)

பள்ளிக்கூட உதவிக் குழு (எஸ்.எஸ்.ஜி)

பள்ளிக்கூட மேம்பாட்டுக் குழு (எஸ்.டி.சி)

முன்னாள் மாணவர் சங்கம் (ஓ.எஸ்.ஏ)

முன்னாள் ஆசிரியர் சங்கம் (ஓ.டி.ஏ)

சேவை சங்கங்கள் (என்.ஜி.ஓ)

**தன்னாட்சி நிறுவனங்களும் மக்கள் பிரதிநிதிகளும்**

கிராம, பிளாக், மாவட்டப் பஞ்சாயத்துகள்

நாடாளுமன்ற உறுப்பினர் (எம்.பி)

மாநிலச் சட்டசபை உறுப்பினர் (எம்.எல்.ஏ)

இந்த அலகில் மேலே தரப்பட்டுள்ள நான்கு பிரிவுகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் சுருக்கமாகக் கலந்துரையாடப்படுகின்றன. பார்வையிடல் வாயிலாக மேலும் பல தகவல்களைத் திரட்டி வகுப்புசார் கலந்துரையாடல் நடத்தி கருத்தினை விரிவுபடுத்தவும்.

## பள்ளிக்கூட மேம்பாட்டுக் கண்ணோட்டம்

ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் அனைத்துக் குழந்தைகளின் முழு மேம்பாட்டினை உறுதிப்படுத்தவும் கேரளாவின் பண்பாடு - சமூகம் - வேளாண்மை - ஆளுமை சார்ந்த மரபினைப் பாதுகாக்கவும் அரசியல் அமைப்பு மதிப்புகளை உட்கொண்டு செயலாற்றும் ஒரு சமூகத்தை உருவாக்கவும் உதவும் விதத்தில் செயல்படும் பொறுப்பு உள்ளது. அனைத்துக் குழந்தைகளுக்கும் பல்வேறு அனுபவங்கள் கிடைக்குமாறு பள்ளிக்கூடத்தை வடிவமைக்க வேண்டும். இதற்கு அவசியமான கல்வி - பௌதிக வசதிகளை உறுதிப்படுத்தவும் தேவையான சமூகப் பங்களிப்பு கிடைப்பதற்கும் நம்மால் இயல வேண்டும். எதிர்காலத்தின் அவசியங்களை முன்னரே கண்டு நவீன

தொழில் நுட்பங்களைப் பயன்படுத்திக் கற்பித்தலை வலுப்படுத்த வேண்டும். கற்றல் – கற்பித்தல் செயலை ஆர்வம் மிக்க அனுபவமாக மாற்றுதல், ஆராய்ச்சி சார் கற்பித்தல் – கற்றலுக்கு வாய்ப்புகள் ஏற்படுத்துதல், முழுமையான தொடர் மதிப்பீடு செய்தல் வாயிலாகக் குறைகளைக் கண்டுபிடிப்பதுடன் தீர்வு கண்டு முன்னேறுதல், பள்ளிக்கூட மேம்பாட்டின் அனைத்துத் துறைகளிலும் ஜனநாயகப் பங்களிப்பை உறுதிப்படுத்துதல், தொழில்சார் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தல், குழந்தைகளின் உரிமைகளையும் கல்வி உரிமைச் சட்டத்தையும் (2009) முழுமையாக நடைமுறைப்படுத்தும் பள்ளிக்கூடமாக மாறுதல் என்பன உள்ளிட்ட கண்ணோட்டத்தையே நாம் முன்வைக்கிறோம்.

### 4.1.1 பயன்மிக்கப் பள்ளிக்கூடம்

தரம் மிக்கக் கல்வி அனைவருக்கும் என்ற இலக்கினை முன்வைத்துள்ள செயல்பாடுகளையே பொதுப் பள்ளிக்கூடங்களில் திட்டமிட வேண்டும். மேன்மை நோக்கி வேகமெடுக்கும் ஒரு பள்ளிக்கூடத்தின் சிறப்பியல்பு, அது அனைத்துத் துறைகளிலும் தரத்தையும் சமத்துவத்தையும் உறுதிப்படுத்துகிறது என்பதாகும். கல்வி – பௌதிகம் – சமூகம் சார்ந்த அனைத்துக் கூறுகளும் குழந்தைகளின் திறன்கள், சிந்தனைகள், திறமைகள், மதிப்புகள், மனப்பான்மைகள் என்பன சிறப்பியலார்ந்து மேம்படத் துணைபுரியும். அப்படியானால் அத்தகைய ஒரு பள்ளிக்கூடத்தைக் கல்வித்தரம் நோக்கிச் செலுத்துகின்ற செயல்பாடுகளும் அதற்கு உதவிபுரியும் பௌதிக வசதிகளும் இவை இரண்டிலும் பங்குபெறும் சமூகப் பங்களிப்பும் எவ்வாறு அமையவேண்டும் என்பதே இங்குக் கலந்துரையாடப்படுகிறது.

### கல்வி சார்ந்தது

எந்த ஒரு பள்ளிக்கூடத்திலும் அதன் பலம் என்பது கல்விச் செயல்பாடுகளின் மேன்மையே. இந்தத் துறையின் அடிப்படை அறிவை மேம்படுத்துவதற்கு உரிய செயல்பாடுகளும் படைப்பாற்றல் செயல்பாடுகளும் உட்படுத்தப்படுகின்றன. செயல்பாடுகளின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தாய்மொழித்திறன் மேம்பாடு<br>கணிதத்திறன் மேம்பாடு<br>பிறமொழித்திறன் மேம்பாடு<br>(ஆங்கிலம், இந்தி முதலியன)<br>அறிவியல் ஊட்ட நிகழ்ச்சி<br>சமூகவியல் கற்றல் ஊட்டம்<br>கலை – விளையாட்டு செயல் அனுபவப் பயிற்சி<br>வாசிப்பு ஊட்டம்<br>நூல்நிலையம் வலுப்படுத்துதல்<br>சோதனைக்கூடம் வலுப்படுத்துதல்<br>மேதைமை ஊட்ட நிகழ்ச்சி<br>ஆராய்ச்சிசார் செயல்பாடுகள்<br>அன்றாட வாய்ப்பு | வாசிப்புக் குழு<br>நாடகக் களரி<br>சமூகம்சார் ஊடக நிகழ்ச்சி<br>கலை – விளையாட்டு விழா<br>திறனறி ஆய்வகம்<br>பல்வகைமை உயிரியல்பூங்கா<br>கல்விப் பயணங்கள்<br>கருத்தரங்கங்கள், ஐ.டி பயிற்சி<br>ஆசிரியர் வலுவூட்டல்<br>வகுப்பு பி.டி.ஏ<br>எஸ்.ஆர்.ஜி<br>பள்ளிக்கூடப் பத்திரிகை / இதழ்<br>ஒன்றாம் வகுப்பு ஒன்றாம் தரம் |

இந்தப் பட்டியல் முழுமையற்றது. ஒவ்வொரு பள்ளிக்கூடத் தேவைக்கு ஏற்ப செயல்பாடுகளில் மாற்றங்கள் காணப்படும். ஒவ்வொரு செயல்பாட்டையும் நுணுக்கமாகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதில் தான் தரம் தீர்மானிக்கப்படுகின்றது.

### பின்னிணைப்புச் செயல்பாடு - 1

இன்று நம் நாட்டின் பல குழந்தைகளும் கொஞ்சகாலம் நம் மாநிலத்திலும் பின்னர் பிற மாநிலங்களிலோ அயல் நாடுகளிலோ பள்ளிக்கூடக் கல்வியை நிறைவு செய்கின்றனர். மாணவர்கள் பல்வேறு மொழிகள் கற்பதன் இன்றியமையாமையினை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம் அல்லவா. பல்வேறு மொழிகள் கற்பதன் மொழித்திறனை மேம்படுத்துவதன் அவசியம் பற்றி ஒரு வானொலிச் சொற்பொழிவோ ஊடகக் கட்டுரையோ தயாராக்கவும்.

## பௌதிகம்

பள்ளிக்கூடம் மேன்மை மிக்கதாக அமையவேண்டுமெனில் அடிப்படையான பௌதிக வசதிகளை உறுதிப்படுத்த இயலவேண்டும். திட்டமிட்டுச் செயல்படுத்திய கல்விச் செயல்பாடுகளைப் பயன்தரும் முறையில் நிர்வாகம் செய்வதற்கு அவசியமான பௌதிக வசதிகளைப் பள்ளிக்கூடத்தில் நிறுவ வேண்டும். நடைமுறையில் உள்ள வசதிகளை மதிப்பீடு செய்தும் நவீனப்படுத்தியும் இப்பட்டியலை நிறைவு செய்யலாம். இதற்காக உலகளாவிய நிலையில் குறிப்பிட்ட துறைகளிலிருந்து பெறக்கூடிய வசதிகள் எவை என ஆய்வு செய்து நம் வட்டார அவசியத்திற்குப் பயன்படுமாறு சூழல் சார்ந்து வடிவமைத்து உருவாக்க வேண்டும். இதற்காக நிபுணர்களாகிய கட்டிடக் கலைஞர்களையும் (ஆர்க்கிடெக்ட்) நிறுவனங்களையும் (ஐ.ஐ.டி/பொறியியல் கல்லூரிகள், ஐ.ஐ.எம், வட்டாரநிபுணர்கள் சேவைகளைப் பயன்படுத்தலாம். குறிப்பிட்ட காலத்திற்கு உள்ளாக பௌதிக வசதிகளை உருவாக்குவதற்குத் துணைபுரியும் ஏராளமான முகமைகள் உள்ளன. கல்வித்துறைக்கு அப்பால் மூன்றடுக்கு பஞ்சாயத்துகள், எம்.பி, எம்.எல்.ஏ நிதி உதவிகள், பொதுக் கல்விப் பாதுகாப்பு வேள்வியில் உட்பட்ட உருவாக்கத்திட்டங்கள், எஸ்.எஸ்.கெ, நபாட், சுகாதார மிஷன் என்பன இவற்றில் முக்கியமானவை.

பௌதிக வசதி மேம்பாட்டிற்குக் கீழ்காணும் செயல்பாடுகளே பொதுவாக நடைமுறையில் உள்ளன. பள்ளிக்கூடங்களின் தேவைக்கு ஏற்ப சிறப்பியல்பார்ந்த செயல்பாடுகளும் நடக்கின்றன.

| | |
|---|---|
| கோண்டூர் விவரணையாக்கம் (கோண்டூர் மாப்பிங்)<br>சுற்றுமதில், நுழைவாயில்<br>விளையாடும் இடம்<br>பூங்கா, பூந்தோட்டம்<br>சமையலறை, பயோகாஸ் ப்ளான்ட்<br>உணவு உண்ணும் கூடம்<br>அசெம்பிளி ஹால்<br>அலுவலகக் கட்டிடம்<br>அலுவலர் அறை<br>ஓய்வறை<br>டாய்லெட் காம்ப்ளக்ஸ்<br>சௌரோர்ஜ பானல்<br>இன்டோர் ஸ்டேடியம்<br>மழைநீர் சேமிப்புத் தொட்டி | விளையாடும் இடத்தில் புல்தரை அமைத்தல்<br>வேளாண்மைச் செயல்பாடு<br>வகுப்பறைகள்<br>சோதனைக் கட்டிடம்<br>வகுப்பு நூலகம்<br>உயிரியப்பல்வகைமை பூங்கா<br>பண்பாட்டு நிகழ்வுகள் நடக்கும் கட்டிடம்<br>பல்லூடக அறை<br>தூய நீர் விநியோகம்<br>கழிவுப்பொருட்களை அழிக்கும் நிகழ்ச்சி<br>நீச்சல் குளம்<br>பள்ளிக்கூடப் பல்வகை அங்காடி<br>வண்டிகள் நிறுத்துமிடம் |

இவற்றை நிறைவேற்றுவதற்குக் குறிப்பிட்ட கால அளவில் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதுடன் ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் பொருந்துகின்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுக்களை ஒருங்கிணைக்க வேண்டும்.

### சமூகம்

மேலே கலந்துரையாடிய இரு துறைகளிலும் (கல்வி, பௌதிகம்) உள்ள செயல்பாடுகளைப் பயன்பாட்டுடன் நடைமுறைப்படுத்த சமூகப் பங்களிப்பு இன்றியமையாதது. வட்டாரத்தில் கிடைக்கின்ற முழு வளங்களையும் உபயோகித்து பள்ளிக்கூட மேன்மைக்காக ஏராளமான அமைப்புகளை அரசும் கல்வித்துறையும் தயாராக்கியுள்ளன. இதன் பிரிவாக ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இத்துறையினை வலுப்படுத்த வேண்டும். முக்கிய முகமைகள் இவை.

பெற்றோர் ஆசிரியர் சங்கம்

பள்ளிக்கூட மேலாண்மைக் குழு

பள்ளிக்கூட உதவிக்குழு

முன்னாள் மாணவர் சங்கம்

வகுப்பு பி.டி.ஏ

மதர் பி.டி.ஏ

பள்ளிக்கூடப் பாதுகாப்புக் குழு (பட்டியல் முழுமையற்றது)

இவ்வாறு மக்கள் பங்களிப்பை உறுதிப்படுத்தும் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

மேலே குறிப்பிட்ட ஒவ்வொன்றும் அதன் செயல்பாடுகளுடன் பள்ளிக்கூட மேம்பாட்டிற்காக முயற்சி செய்யவேண்டும். இதற்கும் அப்பால் நூல் நிலையங்கள், சங்கங்கள், சேவை அமைப்புகள், கல்வியியலாளர்கள், முன்னாள் ஆசிரியர்கள், கூட்டுறவு நிறுவனங்கள் தொழில் துறையினர் என்போரின் சேவைகளையும் பயன்படுத்தலாம்.

பெற்றோர் – ஆசிரியர் சங்கமே முதலில் உருவாக்கம் பெறவேண்டியது. கேரளக் கல்வி விதிமுறையும் சட்டமும் 1959 இல் பி.டி.ஏ பற்றி விளக்கியுள்ளது. மதர் பி.டி.ஏயும் வகுப்பு பி.டி.ஏ யும் பின்னர் உருவாக்கம் பெற்ற அமைப்புகள். பள்ளிக்கூட மேலாண்மைக் குழு கல்வி உரிமைச் சட்டத்தின் பிரிவாகத் தொடக்கநிலைப் பள்ளிக்கூடங்களில் வடிவம் கொண்டது. இதன் அமைப்பும் செயல்படுத்தும் பொறுப்பும் பற்றி ஆர்.டி.இ 2009 இல் தெளிவாக்கப்பட்டுள்ளது. பொதுக்கல்விப் பாதுகாப்புத் திட்டம் 2016 இன் பிரிவாகவே பள்ளிக்கூட மேம்பாட்டுக் குழு வடிவம் பெற்றது. வார்டு உறுப்பினர் தலைவராக உள்ள இக்குழுவே பள்ளிக்கூடத்தின் முழுமையார்ந்த பின்துணை அளிக்க வேண்டிய சமூகச் சங்கம் (பொ.வி.சம்.ய.வழிகாட்டி 2016)

### 4.1.2 முழுமைசார் தரம் மிக்கப் பள்ளிக்கூட மேம்பாட்டுக்குழு

அனைத்துக் குழந்தைகளுக்கும் தரம்மிக்கக் கல்வியை உறுதிப்படுத்தி பள்ளிக்கூடத்தை மேன்மையின் மையமாக மாற்றுவதற்கும் பொதுச் சமூகம் மதிப்புணர்வுடன் காணுமாறு பள்ளிக்கூடத்தை நவீனப்படுத்துவதற்கும் துணைபுரியும் பள்ளிக்கூடத்திட்டப் பதிவு என்பதே முழுமை சார் தரம் மிக்கப் பள்ளிக்கூட மேம்பாட்டுத் திட்டம். இது ஒரு சமூகப் பதிவு ஆகும். பள்ளிக்கூடத்தின் கல்வி – பௌதிகம் – சமூகம் சார்ந்த அவசியங்களை அதனதன் கால அளவின் உள்ளாகவே நிறைவேற்றப் பதிவு துணைபுரிகிறது. மக்கள் பங்களிப்புடன் தயாராக்குகின்ற இந்தப் பதிவைப் பள்ளிக்கூட மேலாண்மைக் குழு அங்கீகரிக்க வேண்டும். இப்பதிவின் உருவாக்கத்தில் பி.டி.ஏ, பள்ளிக்கூட மேம்பாட்டுக் குழு, எஸ்.எம்.சி என்பனவற்றிற்கும் தலைமை சார்ந்த பங்கு உண்டு.

**முழுமைசார் தரம் மிக்கப் பள்ளிக்கூடத்திட்ட வடிவாக்கச் செயல்**

- பயன்மிக்கப் பள்ளிக்கூடத் தரக் குறிப்புகளைக் கருத்தில் கொண்டு பள்ளிக்கூடத்தின் நடைமுறையில் உள்ள தன்மையை அலசி ஆராய்தல்
- எஸ்.ஆர்.ஜி குழுவில் முழுமைசார் மேம்பாட்டுக் கண்ணோட்டக் கலந்துரையாடல் 10 ஆண்டுகளை முன்னால் கண்டு கொள்கைக் குறிப்பேட்டை வடிவமைக்க வேண்டும்.
- ஆசிரியர்களின் தலைமையில் பள்ளிக்கூடத்தின் மேம்பாட்டுத் தேவைகள் (வகுப்பு, பாடப்பொருள்) பௌதிகம், கல்வி, சமூகம் – வரைவு எழுதித் தயாராக்குதல் (சூழலை அலசி ஆராய்ந்து கவனத்தில் கொள்ள வேண்டும்)
- வரைவு சுட்டும் அறிவுரைகளைக் கலந்துரையாடித் திட்டத்தை வடிவமைக்க பட்டறைகளை ஒருங்கிணைக்க வேண்டும். எஸ்.ஆர்.ஜி, எஸ்.எம்.சி. பி.டி.ஏ, பள்ளிக்கூட மேலாண்மைக் குழு, சமூக – அரசியல் சேவைச் சங்கப் பிரதிநிதிகள் பட்டறையில் பங்குபெற வேண்டும்.
- அறிவுரைகளைத் தொகுத்து மேம்பாட்டுத் தேவைகளை மறு ஒழுங்குபடுத்த வேண்டும்
- உரிய குழுக்களை உருவாக்கிப் பிரச்சினைத் துறைகளைக் கண்டுபிடிக்க வேண்டும்

ஒவ்வொரு பிரச்சினையும் கீழ் உள்ள அட்டவணையில் எழுதித் தயாராக்கப்படுகிறது

| பிரச்சினை | | படவம் – 1<br>கருத்து |
|---|---|---|
| காரணங்கள் | தீர்வு அறிவுரை | செயல்பாட்டுத் திட்டம் |
| குழந்தை | | 1<br>2<br>3<br>4<br>5<br>6 |
| ஆசிரியர் | | |
| பெற்றோர் | | |
| அமைப்பு | | |

ஒவ்வொரு பிரச்சினையையும் அலசி ஆராய்ந்து அதன் காரணங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஒரு பிரச்சினைக்குப் பல்வேறு பிரிவுசார் காரணங்கள் காணப்படலாம். அவற்றை நுணுக்கமாகக் கண்டுபிடிக்க இயல வேண்டும். எ.டு: குழந்தையின் கற்றல் தரம் மிகக் குறைவு. இதன் காரணங்கள் எவை? குழந்தை மட்டுமா இதன் பொறுப்பாளி. வேறு காரணிகளின் ஈடுபாடுகளால் வந்த இயலாமைகள் குழந்தையின் கற்றலைப் பாதித்திருக்கின்றனவா? குழந்தையின் ஆர்வக் குறைவு, வகுப்பில் கவனமின்மை, வீட்டுப் பாடங்கள் செய்யாமை எனும் காரணங்கள் உண்டாகலாம்.

ஆசிரியர் தொடர்பாகவும் பல காரணங்கள் உண்டாகலாம். தனிநபர் கவனம் அளிக்க இயலவில்லை. அனைத்துக் குழந்தைகளையும் கவனத்தில் கொண்டுள்ள கற்றல் செயல்திட்டம் நடைமுறையில் இல்லாமை, தனிக்கவனம் தேவைப்படும் குழந்தைகளைக் கவனத்தில் கொள்ளுதல் குறித்துள்ள அறிவின்மை, கற்றல் கருவி உருவாக்கத்தில் வளமின்மை, நேர எல்லை என இத்தகையன ஒன்றுசேர்ந்ததன் பின்விளைவே குழந்தையின் பின்தங்கிய நிலை. வீட்டில் கற்றல் வசதியின்மை, பெற்றோர் கற்றலில் உதவிபுரிய இயலாத தன்மை, தொலைக்காட்சி உபயோகம், பெற்றோர் – ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமை என்பன பெற்றோர் தரப்பின் காரணங்களாகும்.

அமைப்பின் எல்லைகளாகக் கூறப்படுவன பாடப்பகுதிகளின் ஆதிக்கம், தரக்கூடுதல், முன்வகுப்பில் கற்றவைகளைத் தன்வயப்படுத்தினர் என்ற உறுதியின்மை, பள்ளிக்கூடத் தினங்களில் ஆசிரியர்களுக்குப் பிற பணிகளை அளித்தல் என்பனவாகும். இவற்றிற்கு உரியதீர்வு அறிவுரைகளே அடுத்தக் கட்டத்தில் எழுதவேண்டியன.

மூன்றாவது கட்டத்தில் தீர்வு அறிவுரைகளைச் செயல்பாட்டுத் திட்டங்கள் ஆக்கிப் பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு கல்வி - பௌதிகம் - சமூகம் சார்ந்து பிரச்சினைகளைப் பகுத்தாராய்ந்து திட்டக்குறிப்பேட்டைத் தயாராக்க வேண்டும். தொடர்ந்து திட்டத்தின் இயல்பிற்கு ஏற்ப சுருங்கிய காலம், நடுநிலைக் காலம், நீண்டகாலம் என வகைப்படுத்தி ஒவ்வொரு திட்டத்தினையும் செயல்படுத்தும் காலம், பொறுப்பு என்பன உட்பட்ட நாள்காட்டி தயாராக்க வேண்டும்.

## ஒருநாள் மேம்பாட்டுக் கருத்தரங்கங்கள்

பள்ளிக்கூடத்தில் செயல்படும் வெவ்வேறு குழு உறுப்பினர்கள், பெற்றோர், பொதுமக்கள் என இயன்ற அளவில் மனிதர்களின் பங்களிப்புடன் ஒரு நாள் கருத்தரங்கத்தை ஒருங்கிணைக்க வேண்டும். கருத்தரங்கத்தில் பள்ளிக்கூட மேம்பாட்டுக் குறிப்பேட்டைப் பொதுக் கலந்துரையாடலுக்காக வெளியிட்டு பல்வேறு குழுவினர் மேம்பாட்டுத் திட்டங்களைக் கலந்துரையாடி முன்னுரிமை வரிசையில் தீர்மானித்து அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு உள்ளாக ஒருங்கிணைக்கவும் வேண்டும். கருத்தரங்கக் கருத்தாடல்களை உட்படுத்தி முழுமைசார் தரம்மிக்கப் பள்ளிக்கூட மேம்பாட்டுத் திட்டத்தை வெளியிடவேண்டும்.

## முழுமைசார் தரம்மிக்கப் பள்ளிக்கூட மேம்பாட்டுத் திட்டம் - அமைப்பு

1. முன்னுரை
2. இலக்குகள் (கல்வித் தரத்திற்கு முக்கியத்துவம்)
3. பள்ளிக்கூடத்தின் சுருக்க வரலாறு
4. வடிவாக்கச் செயல்
5. பள்ளிக்கூடம் மேன்மையின் மையம்
6. நடைமுறைத் தன்மையின் பகுப்பாய்வு (பௌதிகம், கல்வி, சமூகப் பயன்கள், குறைபாடுகள்)
7. பாடப்பிரிவுகள் - கல்வி (ஒவ்வொரு பாடப்பிரிவுசார் பிரச்சினைகள், காரணங்கள், தீர்வு அறிவுரைகள், செயல்பாட்டுத்திட்டம் / செயல்பாட்டுத் திட்டங்களின் விளக்கங்கள், செயல்பாட்டுத் திட்டங்களின் பகுப்பாய்வு (திட்டத்தின் பெயர், இலக்கு, துணைச் செயல்பாடுகள், பொறுப்பு, காலம், பொருளாதாரப் பகுப்பாய்வு, கண்காணிப்பு)
8. பௌதிக வசதி (பிரச்சினைகள், காரணங்கள், தீர்வு அறிவுரை, செயல்பாட்டுத் திட்டம், செயல்பாட்டுத் திட்டத்தின் விளக்கங்கள், செயல்பாட்டுத் திட்டத்தின் பகுப்பாய்வு (திட்டத்தின் பெயர், இலக்கு, துணைச் செயல்பாடுகள், பொறுப்பு, காலம், பொருளாதாரப் பகுப்பாய்வு, கண்காணிப்பு)
9. சமூகம் (பிரச்சினைகள், காரணங்கள், தீர்வு அறிவுரைகள் செயல்பாட்டுத் திட்டம், செயல்பாட்டுத் திட்டத்தின் விளக்கம், செயல்பாட்டுத் திட்டத்தின் பகுப்பாய்வு (திட்டத்தின் பெயர், இலக்கு, துணைச் செயல்பாடுகள், பொறுப்பு, காலம், பொருளாதாரப் பகுப்பாய்வு, கண்காணிப்பு)
10. எதிர்பார்க்கும் பலன்கள்
11. கண்காணிப்பு
12. முடிவுரை

13. பின்னிணைப்பு (1. பள்ளிக்கூடத்தின் வரைபடத்திட்டம் உயிரியல் பல்வகைமைப் பூங்காவின் வடிவாக்க வரைவு, 2. எஸ்.எஸ்.கெ திட்டத்திற்காக குறிப்பிட்ட படிவத்தில் தயாராக்கிய பட்டியல்கள் 3. குழந்தைகளின் எண்ணிக்கை – முன் ஆண்டுகளில் 4 மேன்மைகள் பலன்கள் 5. நடைமுறையில் உள்ள குழுக்கள் – உறுப்பினர்களின் பட்டியல்

### 4.1.3. நவீன கல்விச் செயல்பாடுகள்

பயன்மிக்கப் பள்ளிக்கூடம் 4.1.1 என்ற தலைப்பில் கல்வி என்ற துணைத் தலைப்பின் பிரிவாக நவீன கல்விச் செயல்பாடுகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. அங்குக் குறிப்பிட்ட பெருவாரியான செயல்பாடுகளும் பல பள்ளிக்கூடங்களிலும் நடைமுறைப்படுத்தியிருக்கலாம். ஆனால் அவற்றின் சரியான இலக்கு நிறைவேறுமாறும் அனைத்துக் குழந்தைகளுக்கும் பயன்படுமாறும் தரமேன்மையை உறுதிப்படுத்திக் கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே முக்கியம்.

எ.டு. அன்றாட வாய்ப்புகள்

சுயமாக ஒளிரும் ஆசை பிறப்பிலேயே உள்ளது. பெரிய பள்ளிக்கூடங்களில் அனைவருக்கும் அவரவரின் திறன்களை வெளிகாட்ட வாய்ப்பு கிடைப்பதில்லை. ஒவ்வொரு நாளும் 30 நிமிட நேரம் இதற்காக ஒதுக்கலாம். ஒவ்வொரு வகுப்புப் பிரிவிலும் உள்ள குழந்தைகளை நான்கு குழுக்களாகப் பிரிக்கலாம். அவர்கள் விரும்பும் கலை நிகழ்ச்சிகளையும் பிற கல்வி முக்கியத்துவம் உள்ள செயல்பாடுகளையும் வகுப்பு ஆசிரியையின் தலைமையில் திட்டமிடலாம். ஒவ்வொரு நாளும் ஒரு குழுவினர் பொது மேடையில் நிகழ்ச்சிகளை நடத்தலாம். இவற்றை நடைமுறைப்படுத்த ஆசிரியர்கள், குழந்தைகள், பெற்றோர்கள் என்போர் உள்ளிட்ட ஒரு குழுவை உண்டாக்கலாம். மதிய உணவின் பின்னர் நிகழ்ச்சிகளை நடத்தலாம். இதனைச் சரியாக ஆவணப்படுத்துவதற்கு உரிய வாய்ப்பு வேண்டும். நிகழ்ச்சிகளைக் காண பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் தனியாக அழைக்கலாம். சாதாரணமாக இலக்கிய மன்றத்தில் கூட ஒரு சதவிகிதத்துக்கும் கீழாகவே குழந்தைகளுக்கு வாய்ப்புகள் கிடைக்கும் போது பள்ளிக்கூடத்தின் அனைத்து குழந்தைகளுக்கும் இத்திட்டம் வாயிலாக வாய்ப்பு கிடைக்கிறது. இச்செயல்பாட்டுத் திட்டத்தின் மேன்மை கவனிக்கத் தக்கது. இவ்வாறு நடைமுறைப்படுத்தும் ஒவ்வொரு செயல்பாட்டையும் நுணுக்கமாகத் திட்டமிட்டுச் செய்து செயல்பாட்டின் நவீனத்துவத்தையும் உறுதிப்படுத்த வேண்டும்.

டாலன்ட் லாப் : கேரளாவின் பொதுக் கல்வித் துறையில் தொலைநோக்குசார் பயன்பாடுகள் தரும் கருத்தே திறனறி ஆய்வகம் (டாலன்ட்லாப்). ஒவ்வொரு குழந்தையினுடையவும் சிறப்புத் திறன்களை ஊக்குவிக்கும் வாய்ப்பினையே திறன் அறி ஆய்வகம் உறுதிப்படுத்துகின்றது. பல்வகைமையை அங்கீகரிப்பதுடன் தொழில்வல்லமை மிக்க அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும். திறனறி ஆய்வகம் இலக்காகக் கொள்வது ஒவ்வொரு குழந்தையின் சிறப்புத்திறன்சார் வளர்ச்சியாகும். இதற்காகக் குழந்தைகளின் சிறப்புத் திறன்களைக் கண்டுபிடிப்பதுடன் அவர்களைச் சிறு குழுக்களாகப் பிரித்து சிறப்புப் பயிற்சியை உரிய நேரத்தினுள் அளிக்க வேண்டும். ஓராண்டில் 20 – 30 மணிநேரங்கள் சிறப்புப் பயிற்சியை உறுதிப்படுத்தி ஆசிரியர்கள் – பெற்றோர்களின் பங்களிப்புடன் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். இத்தகைய செயல்பாடுகள் குழந்தைகளின் சிந்தனையையும் செயல்பாட்டையும் பயன்பாட்டுடன் முன்னோக்கிச் செலுத்தும். குமரப் பருவத்தின் உடல் – உள்ளம் சார் திறன்களைப் பயன்மிக்கத் திசை நோக்கிச் செலுத்த இயல்திறன் சோதனைக்கூடம் துணைபுரியும். இதைப் போன்று பொதுக் கல்விப் பாதுகாப்புத் திட்டம் பிரிவாகப் பல நவீனச் செயல்பாடுகள் அறிவுறுத்தப்படுவதுடன் பள்ளிக்கூடங்கள் அவற்றை நடைமுறைப்படுத்தியும் உள்ளன. அவை பயன்மிக்க முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதையே

நாம் உறுதிப்படுத்த வேண்டும். இச்செயலில் ஆசிரியர்கள், பி.டி.ஏ, பிற பள்ளிக்கூடக் குழுவினர் என்போரின் ஒருமித்தச் செயல்பாடுகளும் குறிப்பிடத்தக்கன.

## 4.1.4 கல்விசார் பெருந்திட்டம்

முழுமைசார் தரம்மிக்கப் பள்ளிக்கூட மேம்பாட்டுத் திட்டத்தில் உட்பட்டதே கல்விசார் பெருந்திட்டம். பள்ளிக்கூட மேம்பாட்டின் கண்ணோட்டத்தையும் இலக்குகளையும் தீர்மானித்து அடுத்தப் பத்து ஆண்டுகளின் தேவைகளையும் நடைமுறைப்படுத்துவதற்குத் துணைபுரிகின்ற கல்வி - பௌதிகம் - சமூகம் சார்ந்த செயல்பாடுகளே முழுமைசார் தரம்மிக்கப் பள்ளிக்கூட மேம்பாட்டுத் திட்டத்தில் உள்ளன. இவற்றை அடியொற்றியே கல்விச் செயல்பாடுகளில் வேரூன்றி நின்று அடுத்த மூன்று ஆண்டுக் காலத்தில் முழுமைப்படுத்தப்படுகின்றனவும் தொடக்கமிட இயன்றனவும் உட்பட்ட கல்விச் செயல்பாட்டுத் திட்டமே கல்விசார் பெருந்திட்டம்.

பள்ளிக்கூட மேம்பாட்டுத் திட்டத்தில் அறிவுறுத்தியுள்ள கல்விச் செயல்பாடுகளின் நுணுக்கமான திட்டமிடலே கல்விசார் பெருந்திட்டம். மேம்பட்ட பள்ளிக்கூடத்தின் கண்ணோட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒவ்வொரு பள்ளிக்கூடமும் நடைமுறையில் உள்ள தன்மைகளை மதிப்பீடு செய்து மேன்மைகளையும் குறைகளையும் கண்டுபிடிக்க வேண்டும். இவ்வாறு கண்டுபிடித்த குறைகளுக்கு உரிய காரணங்களைப் பகுத்தாராய்ந்து தீர்வுக்கு உரிய அறிவுரைகளையும் தீர்வுச் செயல்பாடுகளையும் கண்டுபிடிக்க வேண்டும். கண்டுபிடித்துள்ள தீர்வுச் செயல்பாடுகளை நுட்பமாகப் பகுத்தாராய்ந்து நிலை நிற்கின்ற குறைகளை நீக்குவதற்குத் துணைபுரியும் விதத்தில் செயல்படுத்த இயன்ற முறையை வடிவமைத்தலே இந்தக் கட்டத்தில் செய்யவேண்டியது. மொழிக் கற்றலுடன் தொடர்புள்ள கல்விசார் பெருந்திட்டம் எவ்வாறு அமைதல் வேண்டும் என்று எடுத்துக்காட்டிற்காகப் பார்க்கலாம்.

## மொழிக் கற்றல் பிரச்சினைகள்

### கல்வி

- ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் பாட ஏற்பாடு அறிவுறுத்திய அனைத்துத் திறன்களும் எதிர்பார்த்த தரத்தில் பெற இயலவில்லை.
- கற்றல் செயல்பாட்டில் கற்றல் கருவிகள், ஐ.சி.டி வாய்ப்பு என்பன பயன்படும் முறையில் உபயோகிப்பதில்லை.
- கற்றல் பிரச்சினைகளைக் கண்டுபிடிப்பதுடன் தீர்வு காண்பதற்கும் ஆய்வுசார் முறை (டிரை அவுட், ஆக்ஷன் ரிசர்ச்) பயன்படுத்தப்படவில்லை.
- படைப்பாற்றல் செயல்பாடுகளுக்கு உரிய முக்கியத்துவமும் ஊக்கமும் அளிப்பதில்லை.
- பள்ளிக்கூடத்தில் நவீன நூல்நிலையம், ஐ.டி சோதனைக்கூடம், மொழிச் சோதனைக்கூடம் என்பன இல்லாமை
- பள்ளிக்கூடத்தின் கல்வித் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் பிரச்சினைத் தீர்வுகளை நிறைவேற்றுவதற்கும் சமூகப் பங்களிப்பை உறுதிப்படுத்துவதில்லை

இத்தகைய ஒவ்வொரு பிரச்சினையையும் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

மண்டலம் / துறை : கல்வி — படிவம் - 1

பிரச்சினை : ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் பாடஏற்பாடு அறிவுறுத்திய அனைத்துத் திறன்களும் எதிர்பார்த்த தரத்தில் அடைய இயலவில்லை.

| காரணங்கள் | தீர்வு அறிவுரைகள் | செயல்பாட்டுத் திட்டங்கள் |
|---|---|---|
| **குழந்தைகள்**<br>1. கற்றலில் ஆர்வக் குறைவு<br>2. முன்வகுப்பில் பெற்றிருக்க வேண்டிய திறன்கள் பெறவில்லை<br>3. வகுப்பில் கவனமின்மை<br>4. வீட்டுப்பாடங்கள் செய்யாமை<br>5. வாசிப்பில் ஆர்வமின்மை<br>**ஆசிரியர்கள்**<br>1. அனைத்துக் குழந்தைகளையும் கருத்தில் கொண்டு வகுப்புத் திட்டமிடல் செய்ய இயலவில்லை<br>2. தனிநபர் கவனம் செலுத்த இயலவில்லை.<br>3. தனிக்கவனம் தேவைப்படுவோருக்கு அவசியமான சூழல்சார் மாற்றம் நடத்துவதில் இடர்பாடு<br>4. கற்றல் கருவிகளின் குறைவு | 1. குழந்தைகளின் கற்றல் தரத்தைத் தீர்மானித்தல்<br>2. அடிப்படைத்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி (8 சனிக்கிழமைகள்)<br>3. அனைத்துக் குழந்தைகளையும் கருத்தில் கொண்டு வகுப்புத் திட்டமிடல் குறிப்பேட்டை மேம்படுத்துதல்<br>4. வட்டாரம்சார் பாடங்கள் தயாராக்குதல்<br>5. பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு வகுப்புகள்<br>6. பட்டறைகள் | 1. முன் - தேர்வு<br>2. அடிப்படைத் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி<br>3. செயல் சார்ந்ததும் குழந்தை மையமானதும் ஐ.சி.டி சார்ந்ததும் ஆன பாடத் திட்டமிடல் பட்டறை<br>4. வகுப்பு நூல்நிலையம்<br>5. சி.பி.டி.ஏ<br>6. பட்டறை (கதை, கவிதை, நாடகம்) |

எ.டு: படிவம் ஒன்றின் மூன்றாம் கட்டத்தின் செயல்பாட்டுத் திட்டத்தின் ஒரு செயலே வகுப்பு

## வகுப்பு நூல்நிலையம்

அடுத்தக் கட்டம் வகுப்பு நூல்நிலையம் என்பதால் இதன் நோக்கம் என்ன என்று விளக்கப்படுகிறது. அதன் இலக்கும் பரவலும் நடைமுறைப்படுத்தும் முறையும் இங்கே தெளிவுபடுத்தப்படும். குழந்தைகள் சுயமாக அறிவுருவாக்கம் செய்து கருத்துகளையும் சிந்தனைகளையும் திறன்களையும் மனப்பான்மைகளையும் மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட பாடஏற்பாடே நடைமுறையில் உள்ளது. இது குழந்தைகளைச் சுயக் கற்றலை நோக்கியும் சுயச்சார்புணர்வை நோக்கியும் வழிநடத்தும். இவை நிறைவேற வேண்டுமெனில் வாசிப்பும் பார்வையிடலும் கற்றல் செயலில் உட்படவேண்டும். இங்கு வகுப்பு நூல்நிலையம் சிறப்பிடம் பெறுகின்றது. ஒரு வகுப்புக்குத் தேவையான அனைத்து பிரிவுகள் சார்ந்த புத்தகங்கள் வகுப்பு நூல்நிலையத்தில் இடம்பெற வேண்டும். அனைத்து மொழிகளின் சிறந்த நிகண்டுகள், பாடப்பகுதிகளோடு தொடர்புள்ள நூல்கள், குழந்தைகளின் சுயவாசிப்புக்கு உகந்த, அவர்களின் வேறுபட்ட தரத்திற்கு ஏற்பனவாகப் புத்தகங்கள் கிடைக்க வேண்டும். ஒவ்வொரு வகுப்பிற்கும் உரிய புத்தகங்கள் எவை என வரையறுப்பது அந்தந்த பாடப்பிரிவு சார்ந்த குழுக்கள் ஆகும். வகுப்பும் பாடப்பிரிவும் சார்ந்த புத்தகங்களின் பட்டியலை அவர்கள் தயாராக்கி வகுப்பு நூல்நிலையத்திற்குக் கிடைக்குமாறு செய்யவேண்டும். சுதந்திரமாகப் பயன்படுத்துமாறு புத்தகங்களைக் கண்காட்சிக்கு உட்படுத்தும்முறையில் கண்காட்சிப் பலகை பாதுகாக்க அலமாரிகள் என்பனவும் இருக்கவேண்டும். வகுப்பு நூல்நிலையப் பொறுப்பாளர் வகுப்பு ஆசிரியர் ஆவாரெனினும்

கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவர் நூலகரே. இதற்கு உரிய நிதி உதவியை முன்னாள் மாணவர்கள், பெற்றோர்கள், முன்னாள் ஆசிரியர்கள், பொதுச் சமூகத்தினர் என்போரிலிருந்து ஒருங்கிணைக்க இயலும். குழந்தைகளின் ஆராய்ச்சிசார் கற்றலுக்கு வகுப்பு நூல்நிலையங்கள் இன்றியமையாதன. இத்தகைய குறிப்புகள் செயல்பாட்டுத் திட்டத்தைத் திட்டமிடத் துணைபுரியும். கீழே சொல்கின்ற முறையில் ஒவ்வொரு செயல்பாட்டுத் திட்டத்தையும் திட்டமிட வேண்டும்.

மண்டலம் / துறை : கல்வி — படிவம் - 2

**பிரச்சினை :** ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் பாடஏற்பாடு அறிவுறுத்திய அனைத்துத் திறன்களும் எதிர்பார்த்த தரத்தில் அடைய இயலவில்லை.

செயல்பாட்டுத் திட்டம் : வகுப்பு நூல்நிலையம்

**இலக்கு :** கற்றல் செயலில் உட்படும் புத்தகங்களைப் பார்வையிடுவதற்கும் சுதந்திரவாசிப்பை ஊக்கப்படுத்துவதற்கும் வாய்ப்பு அளித்தல்

| வரிசை எண் | துணைச் செயல்பாடு | பொறுப்பு | காலம் | பொருளாதாரம் | முகமை |
|---|---|---|---|---|---|
| 1 | வகுப்புநூல்நிலையம் கருத்துருவாக்கப் பட்டறை | பாடப்பிரிவுசார் குழுக்கள் எஸ்.ஆர்.ஜி | ஏப்ரல் | 1000 | பி.டி.ஏ |
| 2 | வடிவாக்கக் குறிப்பேடு புத்தகங்களின் பட்டியல் என்பன தயாராக்குதல் | பாடப்பிரிவுசார் குழுக்கள் எஸ்.ஆர்.ஜி | ஏப்ரல் | 1000 | பி.டி.ஏ |
| 3 | வகுப்பு நூல்நிலைய மேம்பாட்டுக் குழு (முன்னாள் மாணவர்கள், பி.டி.ஏ, முன்னாள் ஆசிரியர்கள், பள்ளிக்கூட மேம்பாட்டுக் குழு, பிரதிநிதிகள், ஆசிரியர்கள்) உருவாக்கம் | பி.டி.ஏ எஸ்.ஆர்.ஜி | ஏப்ரல் | 2000 | பி.டி.ஏ |
| 4 | வகுப்பு நூல்நிலைய வளங்கள் திரட்டுதல் (கண்காட்சிப் பலகை, அலமாரிகள், புத்தகங்கள் என்பன திரட்டுதல்) | வகுப்பு நூல்நிலைய மேம்பாட்டுக் குழு | ஏப்ரல் - மே | ஒரு வகுப்பிற்கு எல்.பி : 15000 யு.பி : 2000 உயர்நிலை / மேல் நிலை : 25000 | முன்னாள் மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் நிறுவனங்கள் தனிநபர்கள் |
| 5 | வாசிப்புச் செயல்பாடுகள் (வாசிப்புக் குறிப்பு, ஒரு மணி நேரம் வாசிப்பு, வாசிப்புக் குழு, வாசிப்புப் பட்டறை, புத்தகம் அறிமுகம்) | வகுப்பு நூல்நிலைய மேம்பாட்டுக் குழு | ஜூன் - மார்ச் | ஒரு பள்ளிக்கூடத்திற்கு எல்.பி : 10000 யு.பி : 15000 உயர்நிலை / மேல் நிலை : 25000 | பி.டி.ஏ முன்னாள் மாணவர்கள், எஸ்.எஸ்.கே நிறுவனங்கள் |
| 6 | புத்தகங்கள் திரட்டுதல் தொடர் செயல்பாடு | பாடப்பிரிவுசார் குழுக்கள் | ஜூன் - மார்ச் | ஒரு வகுப்பிற்கு எல்.பி : 15000 யு.பி : 20000 உயர்நிலை / மேல் நிலை : 25000 | வகுப்புக் குழந்தைகள் பி.டி.ஏ |

இவ்வாறு ஒவ்வொரு செயல்பாட்டுத் திட்டத்தையும் நுணுக்கமாகத் தயாராக்க வேண்டும். இவ்வாறு தயாராக்கும் போது ஒரு பாட ஏற்பாடே ஓராண்டின் பல மாதங்களிலாகப் பரிமாற்றம் செய்யப்படுவதைக் காணலாம். இவ்வாறு செயல்பாட்டுத் திட்டத்தின் துணைச் செயல்பாடுகளை ஏப்ரல் முதல் மார்ச் வரையுள்ள மாதங்களிலாக வரிசைப்படுத்த இயலும். இதுவே ஆண்டு நாள்காட்டி.

| ஆண்டு நாள்காட்டி | | | | படிவம் - 3 |
|---|---|---|---|---|
| வரிசை எண் | செயல்பாட்டுத் திட்டம் | துணைச் செயல்பாடுகள் | மாதம் | பொறுப்பு |
| 1. | வகுப்பு நூல்நிலையம் | கருத்துருவாக்கம் | ஏப்ரல் | பாடப்பிரிவுசார் குழு |
| 2. | வகுப்பு நூல்நிலையம் | வடிவாக்கக் குறிப்பேடு தயாராக்குதல் | ஏப்ரல் | பாடப்பிரிவுசார் குழு |
| 3 | செயல் ஆராய்ச்சி | கருத்துருவாக்கம் | ஏப்ரல் | பாடப்பிரிவுசார் குழுக்கள் |
| 4 | செயல் ஆராய்ச்சி | செயல்திட்டம் | ஏப்ரல் | பாடப்பிரிவுசார் குழுக்கள் |
| 5 | வகுப்பு நூல்நிலையம் | வளங்கள் திரட்டுதல் | ஏப்ரல் - மே | பி.டி.ஏ முன்னாள் மாணவர்கள் ஆசிரியர்கள் |
| 6 | கற்றல் கருவி உருவாக்கப்பட்டறை | கருத்துருவாக்கம் | மே | பாடப்பிரிவுசார் குழுக்கள் |
| 7 | கற்றல் கருவிப் பட்டறை | பட்டறை | மே | பாடப்பிரிவுசார் குழு எஸ்.ஆர்.ஜி |
| 8 | வகுப்பு நூல்நிலையம் | வாசிப்புப் பட்டறை | ஜூன் | பாடப்பிரிவுசார் குழு |
| 9 | செயல் ஆராய்ச்சி | வகுப்பு அளவில் பரிமாற்றம் | ஜூன் | ஆசிரியர்கள் |
| 10 | வகுப்பு நூல்நிலையம் | வாசிப்புக் குழு | ஜூலை | மேம்பாட்டுக் குழு |

இவ்வாறு ஒவ்வொரு செயல்பாட்டையும் காலக்கணிப்பிற்கு ஏற்ப வரிசைப்படுத்தினால் பள்ளிக்கூட ஆண்டு நாள்காட்டி தயாராவதுடன் மாதத்திட்டம் மிகப் பயன்பாடு மிக்க முறையில் நடைபெறுமாறு இதிலிருந்து ஒவ்வொரு மாதத்திலும் நடக்கவேண்டிய செயல்பாடுகளையும் பொறுப்புகளையும் சரியாகத் தீர்மானிக்க இயலும். மாத இறுதியில் அம்மாதச் செயல்பாடுகளை மதிப்பீடு செய்வதுடன் அடுத்த மாதச் செயல்பாடுகளைத் திட்டமிட்டுச் செய்வதற்கும் மாதநாள்காட்டி துணைபுரியும்.

| மாத நாள்காட்டி | | ஏப்ரல் 2019 | | படிவம் - 4 |
|---|---|---|---|---|
| வரிசை எண் | செயல்பாட்டுத் திட்டம் | துணைச் செயல்பாடு | தேதி | பொறுப்பு |
| 1 | வகுப்பு நூல்நிலையம் | கருத்துருவாக்கம் வடிவாக்கக்<br>குறிப்பேடு தயாராக்குதல்<br>வளங்கள் திரட்டுதல் | 5-4-19<br>6-4-19<br>10-4-19<br>முதல் | பாடப்பிரிவுசார் குழு<br>பாடப்பிரிவுசார் குழு<br>பாடப்பிரிவுசார் குழு<br>பி.டி.ஏ, முன்னாள்<br>மாணவர்கள் ஆசிரியர்கள் |
| 2 | செயல் ஆராய்ச்சி | கருத்துருவாக்கம்<br>செயல்திட்டம் தயாராக்குதல் | 16-4-19<br>20-4-19 | பாடப்பிரிவுசார் குழுக்கள்<br>பாடப்பிரிவுசார் குழுக்கள் |
| 3 | | | | |

கல்விசார் பெருந்திட்டத்தைத் திட்டமிடுதலை இவ்வாறு தொகுக்கலாம்




**கல்விசார் பெருந்திட்ட அமைப்பு :**

முன்னுரை - பள்ளிக்கூட வரலாறு - அடைவுகள் - கல்விக் கண்ணோட்டம் - இலக்குகள் - பாடப்பிரிவுசார் தன்மை ஆய்வு - மேன்மைகளும் பிரச்சினைகளும், பிரச்சினைப் பகுப்பாய்வு, செயல்பாட்டுத் திட்ட விளக்கம், செயல்பாட்டுத் திட்டப் பகுப்பாய்வு - ஆண்டு நாள்காட்டி - மாத நாள்காட்டி - பல்வேறு குழுக்கள் - முடிவுரை

இங்குப் பாடப்பிரிவுசார் தன்மை ஆய்வு முதல் திட்டப் பகுப்பாய்வு வரையில் ஒன்றினை நிறைவு செய்ததன் பின்னரே அடுத்ததைத் தொடங்கவேண்டும். அதைத் தொடர்ந்து ஆண்டுநாள்காட்டி, மாதநாள்காட்டி என்பன தயாராக்குவதுடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் துணைபுரியும் குழுக்கள் பற்றி விளக்க வேண்டும்.

## 4.2. வகுப்பு அளவில் பின்துணை அமைப்புகள் (மாவட்ட அளவில்)

மாவட்ட அளவில் கல்வித்துறையின் ஆட்சி நிர்வாகப் பொறுப்பு கல்வித் துணை இயக்குனருக்கு (டி.டி.இ) உரியது. ஆட்சி நிர்வாகத்திற்காகக் கல்வித் துணை இயக்குனரின் அலுவலகங்கள் அனைத்து மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ளன. வருவாய் மாவட்டங்களின் நிர்வாக வசதிக்காகக் கல்வி மாவட்டங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு வருவாய் மாவட்டத்தின் புவியியல்சார் சிறப்புத் தன்மை, குழந்தைகளின், நிறுவனங்களின் எண்ணிக்கை என்பன அடியொற்றியே கல்வி மாவட்டங்கள் தீமானிக்கப்பட்டுள்ளன. கல்விமாவட்ட அதிகாரியே (டி.இ.ஒ) கல்வி மாவட்டத் தலைவர். உயர்நிலைப்

பள்ளிக்கூடங்கள், உயர்நிலைப் பள்ளிக்கூடங்களோடு சேர்ந்த தொடக்கநிலைப் பள்ளிக்கூடங்கள், ஆசிரியப் பயிற்சி மையங்கள் என்பன டி.இ.ஓ வின் எல்லைக்குள் ஆகும். மாவட்டத் தொடக்கநிலைப் பள்ளிக்கூடங்கள் துணை மாவட்ட அதிகாரியின் (ஏ.இ.ஓ) கட்டுப்பாட்டிற்குள் ஆகும். பள்ளிக்கூட அளவில் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துவதை மதிப்பீடு செய்வதற்கும் அறிவுறுத்துகின்ற செயல்பாடுகளை உரிய காலத்தில் அறிவித்து அவற்றைச் செயல்படுத்துவதற்கும் நிர்வாகம் சார்ந்தும் கல்வி சார்ந்தும் அவசியமான பின்துணை அளிக்கவும் மேலே குறிப்பிட்ட அமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்கின்றது. ஆசிரிய நியமனம், தேர்வு நடவடிக்கைகள் என்பனவும் பல்வேறு கல்வி அதிகாரிகளின் பொறுப்பில் உள்ளன.

(இத்துறையின் விளக்கங்கள் அலகு நான்கில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.)

### பின்னிணைப்புச் செயல்பாடு - 2

நீங்கள் ஒரு பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியையாக நியமிக்கப்பட்டீர்கள் எனக் கருதவும். பள்ளிக்கூடம் நிலை நிற்கின்ற வட்டாரத்தின் வெளிநாட்டில் குடியேறிய சமூகம், பல்வேறு கல்வி நிபுணர்கள், மொழி ஞானிகள், பல்வேறு தொழில் மேதைகள் எனச் சமூக வளங்களாக அமையும் இவர்களை எவ்வாறு உபயோகப்படுத்த இயலும் என்பதன் ஒரு வடிவாக்கக் குறிப்பேட்டைத் தயாரிக்கவும்.

### கல்விசார் பின்துணை அமைப்புகள்

வட்டார அளவில் மழலையர் பள்ளிக்கூடம் முதல் தொடக்கநிலை வரையிலான பள்ளிக்கூடங்களின் தரமேன்மையை உறுதிப்படுத்துவதற்கு உரிய பின்துணை அளிப்பதற்காக வடிவமைத்த அமைப்பே மாவட்டக் கல்விப் பயிற்சி மையம் (டயட்).

### மாவட்டக் கல்விப் பயிற்சி மையம் (டயட்)

1986 இன் கல்விக் கொள்கையின் படியே 1989 இல் டயட்டுகள் நிறுவப்பட்டன. மூன்று கட்டங்களிலாக 1992 இல் 14 மாவட்டங்களிலும் டயட்டுகள் நிறுவப்பட்டன. தொடக்கநிலைக் கல்வியின் தரமேன்மையை மேம்படுத்துதல் என்ற முதன்மை இலக்குடன் டயட்டுகள் நிறுவப்பட்டன. கல்வித் துறையில் நிலைநிற்கின்ற அடிப்படைப் பிரச்சினைகளை ஆராய்ச்சி சார்ந்து அணுகுவதற்கும் தீர்வுச் செயல்பாடுகளை அறிவுறுத்தவும் இந்த நிறுவனத்தற்குப் பொறுப்புகள் அளிக்கப்பட்டன.

முன்சேவை, சேவையிலிருப்போர் என இரு பிரிவுகளிலாக ஏழு புலம் டயட்டில் உள்ளன. முன்சேவை ஆசிரியர் கல்விப் (ஃப்ரீசர்வீஸ் டீச்சர் எட்யூகேஷன், பி.எஸ்.டி.இ) புலம் தலைமையில் 40 ஆசிரிய மாணவர்களுக்கு இரு ஆண்டுகள் ஆசிரியப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பிளானிங் & மானேஜ்மென்ட் (P & M), இன்சர்வீஸ் - ஃபீல்ட் இன்ட்ராக்ஷன் இன்னவேஷன் ஆன்ட் கோஆர்டினேஷன் (ஐ.எப், ஐ.சி), எஜூகேஷனல் டெக்னாலஜி (இ.டி) கரிக்குலம் மெட்டீரியல் டெவலப்மென்ட் ஆன்ட் இவாலுவேஷன் (சி.எம்.டி.இ) வர்க் எக்ஸ்பீரியன்ஸ் (டப்ள்யூ.இ) டிஸ்ட்ரிக் ரிசோழ்ஸ் யூனிட் (டி.ஆர்.யு) என ஆறு புலம் சேவை மண்டலத்தில் செயல்படுகின்றன.

ஒவ்வொரு புலமும் பயிற்சி, ஆராய்ச்சி, கருவிகளின் உருவாக்கம், ஆவணப்படுத்துதல் என்பனவற்றை மேற்பார்வை செய்ய வேண்டும். இதற்குத் தேவையான நிதி உதவி மனிதவள மேம்பாட்டுத் துறை, மாநில அரசுகள் வழியாகக் கிடைக்கப்படுகிறது. ஒவ்வொரு டயட்டிலும் முதல்வர் உட்பட்ட 21 ஆசிரியர்கள் இருப்பர். முன் சேவையில் எட்டும் பிற ஒவ்வொரு புலத்திலும் இருவர் வீதம் ஆசிரியர்கள் உள்ளனர்.

### டயட்டின் பிற பொறுப்புகள்

- துணை மாவட்டம் - கல்விமாவட்டத் தளத்தில் உள்ள பள்ளிக்கூடங்களின் கல்விப் பொறுப்பு
- எஸ்.எஸ்.கே திட்டத்தின்படி பி.ஆர்.சி யின் கல்விப் பொறுப்பு
- மாவட்டத் தளத்தில் உள்ள வளக் குழுக்களைத் தயாராக்குதல்
- காலாண்டு, அரையாண்டு, இறுதி ஆண்டுத் தேர்வுகளின் வினாத்தாள்கள் தயாராக்குதல்
- தலைமை ஆசிரியப் பயிற்சிகள், மதிப்புரைக் கூட்டங்களின் கல்விப் பொறுப்பு
- மாவட்டக் கல்வி அதிகாரிகளின் மதிப்புரைக் கூட்டங்களின் கல்விப் பொறுப்பு
- கல்வித்துறை ஒவ்வொரு கட்டத்திலும் நடைமுறைப்படுத்துகின்ற திட்டங்களின் மாவட்டத் தளத்தில் கல்விப் பொறுப்பு
- மூன்றடுக்கு பஞ்சாயத்துத் திட்ட வடிவாக்கத்திற்குத் தலைமை அளித்தல்
- கல்வித்துறை, எஸ்.எஸ்.கே, டயட்டுகள் என்பனவற்றின் திட்ட உருவாக்கம்
- எஸ்.சி.இ.ஆர்.டி, சீமாட், கைட், பரீட்சா பவன், டி.பி.ஐ என்பன தேவைப்படும் முறையில் ஆசிரியர்களின் சேவையைக் கிடைக்கச் செய்தல்
- மாவட்டம் மாநிலம் என ஆராய்ச்சிச் செயல்பாடுகளில் ஈடுபடுதல்
- துல்யதா நிகழ்ச்சி, பெண் குழந்தைகள், விளிம்பு நிலை மனிதர்கள் என்போரின் கல்விக் காரியங்களில் ஈடுபடுதல்
- மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய கல்விப் பின்துணையை உறுதிப்படுத்துதல்
- குழந்தைகளின் கற்றல் தரம் உயர்வதற்கு உரிய கருவிகளின் உருவாக்கம் - பரிமாற்றம்
- தலைமை ஆசிரியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உள்ள உதவிக் கருவிகளின் உருவாக்கம் - பரிமாற்றம்
- வகுப்புகளில் சந்திக்கின்ற கற்றல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண டிரை அவுட்டுகள்
- கற்றல் செயலை எளிதாக்குவதற்கு உரிய தொழில் நுட்பத்தை மேம்படுத்துதல்
- தலைமை ஆசிரியர்களுக்கு மேலாண்மைப் பயிற்சி, கல்வி - ஆட்சி நிர்வாகம் சார்ந்த பயிற்சி அளித்தல்
- மாவட்டத்தின் கலை, விளையாட்டு, செயல் அனுபவக் கற்றலை ஒருங்கிணைத்தல்

எனச் சமகால அனைத்துக் கல்விச் செயல்பாடுகளிலும் ஈடுபடுதல் என்பது டயட்டின் பொறுப்பாகும். தொடக்க நிலைப் பள்ளிக்கூட அமைப்பை வலுப்படுத்தி முன்னோக்கிச் செலுத்துவதற்குக் கல்வி சார்ந்தும் அணுகுமுறை சார்ந்தும் பின்துணை அளிப்பதில் டயட்டுகள் முக்கியமானவை.

### சமக்ர சிக்சா கேரள (எஸ்.எஸ்.கே)

நடுவண் அரசுத் திட்டமான சர்வ சிக்சா அபியான் (எஸ்.எஸ்.ஏ) என்பதன் தொடர்ச்சி எஸ்.எஸ்.கே மழலையர் பள்ளிக்கூடம் முதல் மேல்நிலை வரையிலான பள்ளிக்கூடங்களுக்குக் கல்வி சார்ந்தும் பௌதிகம் சார்ந்தும் பின்துணை அளிக்கும் நிறுவனங்களாகும். இந்நிறுவனம் மாவட்ட, பிளாக் தளங்களிலான பயிற்சிகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துகின்றது. இலவசப் பாடப்புத்தகம் (8-ஆம் வகுப்பு வரை) இலவசச் சீருடை என்பன இத்திட்டம் வாயிலாக அளிக்கப்படுகின்றன.

ஆசிரியப் பயிற்சி, பள்ளிக்கூடப் பௌதிக அமைப்புகளின் மேம்பாடு, மாற்றுத் திறனாளிகளுக்கும் பெண் குழந்தைகளுக்கும் விளிம்புநிலையினரின் குழந்தைகளுக்கும் உள்ள பல செயல்பாடுகள் என்பனவற்றை ஏற்றெடுத்து செய்கின்றது. மாவட்டத் தளத்தில் மாவட்டச் செயல்திட்ட அலுவலகமும் பிளாக் தளத்தில் பிளாக் வளமையமும் பஞ்சாயத்துத் தளத்தில் கிளஸ்டர் வளமையமும் செயல்படுகின்றன. ஒவ்வொன்றிலும் கல்விப் பின்துணை அமைப்பை உறுதிப்படுத்துவதே செயல்திட்டத்தின் இலக்கு. அந்தந்த இடத்தின் பின்துணை, பள்ளிக்கூட அடிப்படையில் பயிற்சிகள், கிளஸ்டர் பயிற்சிகள், விடுமுறைக் காலப் பயிற்சி, குழந்தைகளுக்கு உரிய முகாம்கள், கல்விப் பயணங்கள், கற்றல் கருவிகளின் பங்கீடு, மாற்றுத் திறனாளிகளுக்குத் தேவையான கருவிகள், மருத்துவ முகாம் என்பன நடத்துவதுடன் பெற்றோருக்கு விழிப்புணர்வு அளித்தல் வரையிலான செயல்பாடுகளை ஏற்றெடுத்து நடத்துகின்றது. இதற்காக மாவட்ட அலுவலகத்தில் நிகழ்ச்சித் திட்ட அதிகாரிகளை பி.ஆர்.சி யில் பயிற்சியாளர்கள், சி.ஆர்.சி யில் ஒருங்கிணைப்பாளர்கள் என இவர்களை நியமித்துள்ளது.

### 4.3. சமூகம்சார் பின்துணை அமைப்புகள்

பெற்றோர் - ஆசிரியர் சங்கங்கள், பி.டி.ஏ, பள்ளிக்கூட மேலாண்மைக் குழு என்பன பள்ளிக்கூடங்களின் கல்வி - பௌதிகம் சார்ந்த மேம்பாட்டிற்காகச் செயலபட்டு வருகின்றன (இத்துறை தொடர்பான விரிவான விளக்கம் அலகு 4 இல் கொடுக்கப்பட்டுள்ளது). மேலும் மதர் குழு, பள்ளிக்கூட உதவிக் குழு (எஸ்.எஸ்.ஜி), பள்ளிக்கூட மேம்பாட்டுக் குழு முன்னாள் மாணவர் சங்கம், முன்னாள் ஆசிரியர் சங்கம், பிற சேவைச் சங்கங்கள் என்பனவும் பள்ளிக்கூடத்திற்கு உதவிபுரிய இன்று நடைமுறையில் உள்ளன.

## மதிப்பீடுசார் வினாக்கள்

- பயன்மிக்கப் பள்ளிக்கூடம் என்ற கருத்து வாயிலாக எத்தகைய இலக்கை நோக்கிச் செல்கிறோம் என விளக்குக.
- முழுமைசார் தரம் மிக்கப் பள்ளிக்கூட மேம்பாட்டுத் திட்டம் என்பதன் அமைப்பு குறித்து விவரிக்க.
- நீங்கள் பள்ளிக்கூட கலை, விளையாட்டு விழாவின் பொறுப்பாளர் எனில் எத்தகைய முன்னேற்பாடுகளை ஏற்றெடுப்பீர்கள் எனத் தெளிவுபடுத்துக.
- கணிதத்திறனில் பின்தங்கி நிற்கும் குழந்தைகளுக்கு உதவி புரிய நடத்துகின்ற செயல்பாடுகளுடன் தொடர்புள்ள கல்விசார் பெருந்திட்டம் ஒன்றைத் தயாராக்குக.
- ஒரு மாவட்டத் தொடக்கநிலை பள்ளிக்கூடத் துறையில் டயட் மேற்கொண்டுள்ள முக்கியப் பொறுப்புகள் எவை?

## பார்வைக் கருவிகள்

- பொதுக் கல்விப் பாதுகாப்புத் திட்டம் வழிகாட்டிக் குறிப்பேடு 1, 2
- பள்ளிக்கூடங்கள் தயாராக்கிய முழுமைசார் தரம் மிக்கப் பள்ளிக்கூட மேம்பாட்டுத் திட்டம் 2017 - 18
- கல்விசார் பெருந்திட்டம் 2018

## அலகு - 6

# பெற்றோரியக் கல்வி

கல்வியின் தொடக்கம் முதல் இறுதிவரை அதன் இலக்கு என்பது தனிநபர் மேம்பாடு அல்லவா. முழுமைசார் மேம்பாடு நிறைவேறுவதற்குக் குழந்தையின் உடல் - உள்ளம் - உணர்வுசார் மேம்பாடு மிக இன்றியமையாதது. இதற்காகக் குழந்தையின் ஒவ்வொரு வளர்ச்சியிலும் உள்ள சிறப்புத் தன்மைகள், அவர்கள் சந்திக்கின்ற பிரச்சினைகள் என்பன பற்றிப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் நன்கு அறிந்திருக்க வேண்டும். குழந்தைகளிடம் மிகச் செல்வாக்கு உள்ளவர்கள் பெற்றோர்கள் அல்லவா. குழந்தையின் கற்றல் பிரச்சினைகள், உணவுப் பழக்கவழக்கங்கள், சமூக ஈடுபாடுகள், உணர்வுசார் பிரச்சினைகள் நலிவடைந்த குடும்பப் பின்னணி, குழந்தைகளிடம் காட்டும் ஈடுபாடுகளில் தென்படும் பிரச்சினைகள் எனக் குமரப்பருவத்தினர் நேரிடுகின்ற ஏராளமான பிரச்சினைகளைப் பெற்றோர்கள் அறிந்திருக்க வேண்டும். பெற்றோர்களும் ஆசிரியர்களும் இணைந்துள்ள ஈடுபாடுகள் வாயிலாகக் குழந்தைகள் சந்திக்கின்ற பிரச்சினைகளை அறிவதுடன் தீர்வுகாணவும் இயலவேண்டும். குழந்தைகளின் பல்வேறு வளர்ச்சி - மேம்பாட்டுக் கட்டங்களில் உதவிபுரிய பெற்றோர் அவசியமாக அறிந்திருக்க வேண்டிய விவரங்கள் குறித்துள்ள சிந்தனையைப் பெறுவதற்குச் சரியான பெற்றோரியக் கல்வி அவசியமாகும்.

கற்றல் செயலில் உட்படும் ஆசிரியர் - குழந்தை - பெற்றோர், பள்ளிக்கூடச் செயல்பாடுகளில் பெற்றோரின் பங்களிப்பு, பள்ளிக்கூட வளங்கள், பெற்றோரியத் திறன்கள்,பெற்றோரிய நடைப்பாங்குகள் என்பன பற்றிய கலந்துரையாடலே இந்தஅலகின் பரிமாற்றம் வாயிலாக எதிர்பார்க்கும் இலக்காகும்.

### முக்கியக் கருத்துகள்

- ஆசிரியர், குழந்தை, பெற்றோரியக் கல்வியின் முக்கிய வளையங்கள்
- குழந்தைக்கு அளிக்கவேண்டிய பின்துணை பற்றிய சரியான சிந்தனை பெற்றோருக்கு அமைதல்
- கல்வி இலக்குகளுக்கும் பெற்றோர்களின் ஆர்வங்களுக்கும் இடையில்பொருத்தமின்மை காணப்படுவதால் கல்வியின் எதார்த்த இலக்குகள் பற்றிய விழிப்புணர்வு அளித்தல்
- பள்ளிக்கூடநிகழ்ச்சிகளில் பெற்றோர்களுக்குப் பங்களிப்பு அளித்தல்
- பெற்றோர்களுடன் கலந்துபேசி நிகழ்ச்சிகளைத் தீர்மானித்தல்
- கல்வி -பௌதிகம் - உணர்வுசார் சூழல்கள் மேம்படுமாறு பெற்றோர்களைப் பயன்படுத்துதல்
- பள்ளிக்கூட வளங்கள் - நூல்நிலையம், கூடம், மைதானம் என்பன - பயன்படுத்த வாய்ப்பு அளித்தல்
- நிபுணத்துவம் மிக்கப் பெற்றோர்களைக் கல்விச் செயல்பாடுகளுக்குப் பயன்படுத்துதல்
- கல்விச் செயல்பாடுகளின் சுருக்கம்
- குழந்தையின் மேன்மைகள் - இயலாமைகள்
- அளிக்கவேண்டிய பின்துணையின் இயல்புத்தன்மை
- பள்ளிக்கூட நிகழ்ச்சிகளில் உற்றுநோக்கல்கள்
- இனி நடத்த வேண்டிய நிகழ்ச்சிகளின் அறிக்கை
- பரிமாற்ற உத்திகள்
- பெற்றோரியத் திறன்கள் (Parenting skills)
- பெற்றோரிய நடைப்பாங்குகள் (Parenting styles)

## ஆசிரியர் - குழந்தை - பெற்றோர் - கல்வியின் முக்கிய வளையங்கள்

குழந்தையின் ஆளுமைத் திறன் - படைப்புத்திறன்களின் மேம்பாடும் உடல் - உளம்சார் திறன்களின் முழுமையான வளர்ச்சியும் கல்வி வாயிலாக நிறைவேற வேண்டும். குழந்தை, ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூகத்தினர் என்போரின் கூட்டுறவில் மட்டுமே கல்விச் செயல்பாடுகள் முழுமை பெறுகின்றன. பள்ளிக்கூடத்தில் குழந்தையின் கற்றலில் செல்வாக்கு செலுத்துகின்ற முக்கியக் காரணிகளே ஆசிரியர்களும் பெற்றோர்களும். கல்வி சரியாக முன்னோக்கிச் செல்ல வேண்டுமெனில் குழந்தையின் கற்றல் செயல்பற்றித் தெளிவான சிந்தனை பெற்றோருக்கு இருக்க வேண்டும். குழந்தையின் கற்றல் காரியங்களில் மிகு ஈடுபாடும் குறை ஈடுபாடும் காட்டுதல் கற்றலை எதிரிடையாகப் பாதிக்கின்றன. குழந்தைகள் பிறக்கும் போதும், வளரும்போதும் அவர்களின் குணம் வடிவாக்கம் பெறுகின்றது. தாய் தந்தையர் குழந்தைகளின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றனர். தாய் - தந்தையரே ஒரு குழந்தையின் கண்களும் காதுகளும். அவர்கள் சொல்வதைக் கேட்டும் அவர்கள் காட்டுவதைக் கண்டுமே ஒரு குழந்தை வளர்கிறது. தாய் - தந்தையரும் சமூகமுமே ஒரு குழந்தையின் கண்ணாடி. அடித்தட்டிலிருந்து அமெரிக்க ஜனாதிபதி பதவியில் அமர்ந்த ஆபிரகாம் லிங்கன் தன் குழந்தையை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்று பள்ளிக்கூட அதிகாரிகளுக்கு ஒரு கடிதம் அனுப்பினார். பிற்காலத்தில் அக்கடிதம் குழந்தைகளை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பதன் வழிகாட்டிக் குறிப்பேடாகவே மாறியது.

உழைத்துச் சம்பாதித்த ஒரு ரூபாய் உழைக்காமல் சம்பாதித்த ஐந்து ரூபாயைவிடப் பெரிது எனக் குழந்தையைப் படிப்பிக்க வேண்டும். தோல்விகளைச் சந்திக்கவும் வெற்றியை அனுபவிக்கவும் உரிய தகுதியை அவனுக்கு அளிக்கவேண்டும். புத்தகங்களின் பெரிய ஜன்னலை அவனுக்குத் திறந்து கொடுக்க வேண்டும். அன்னார் கடிதம் வாயிலாகப் பங்கிட்ட இக்கருத்து நம் பிள்ளைகளுக்குக் கல்வி எதற்காக என்ற உணர்வைப் பெற்றோர்களுக்கு அளிக்கிறது.

### பின்னிணைப்புச் செயல்பாடு - 1

கூகுளில் Lincoln’s letter to his son’s teacher என search செய்யவும். லிங்கன் ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தின் உள்ளடக்கம் கிடைக்கும். www.english book georgia.com என்ற தளத்திலும் இந்தக் கடிதம் கிடைக்கும். கடிதத்தை வாசித்து மதிப்பீடு செய்து உங்கள் கருத்தை உருவாக்கவும்.

குழந்தைகள் பள்ளிக்கூடத்திலும் வீட்டிலுமே கூடுதல் நேரம் செலவழிக்கின்றனர். அங்கு நடக்கின்ற காரியங்களும் அங்கிருந்து கிடைக்கின்ற பாடங்களும் அக் குழந்தையின் பிற்கால வாழ்க்கையிலும் பிரதிபலிக்கும். அன்புடன் வளரும் ஒரு குழந்தை முழு உலகையும் அன்புடன் பார்க்கிறது.

பெற்றோர்கள் குழந்தைகளுக்கு அளிக்க வேண்டிய பின்துணை பற்றிய சில முக்கியக் காரியங்கள் கீழே சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றுடன்தொடர்புடைய மேலும் பல காரியங்களை ஒன்றுகூடிக் கலந்துரையாடிக் கண்டுபிடித்து வகுப்பில் காட்சிப்படுத்தலாம் அல்லவா.

- தாய் - தந்தையர் குழந்தைகளிடம் அன்பு காட்டுவதுடன் பாதுகாத்து அங்கீகரித்தல். பொறுமையுணர்வுடன் கேட்டு தீர்வு காண உதவி புரிதல்
- தன் குழந்தைகளைப் பிற குழந்தைகளுடன் ஒப்பிடாதிருத்தல்
- அவர்களின் உள்ளத்திலுள்ள எதனையும் வெளிப்படையாகக் கூற வாய்ப்பு அளித்தல், கேட்பதற்கு ஆர்வம் காட்டுதல்
- எப்போதும் ஆசிரியர்களுடன் நல்லுறவு வைத்தல்
- தன் குழந்தையின் கற்றல் காரியங்களை ஆசிரியர்களுடன் தொடர்ந்து பங்கிடுதல்

- நவீன தொழில்நுட்பக் கருவிகள், தொலைக்காட்சி, கணினி என்பனவற்றைக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துதல் அவற்றை நன்முறையில் பயன்படுத்துமாறு பழக்குதல்
- குழந்தைகள் விரும்புகின்ற படப்புத்தகங்கள், விருப்பம்போல் வரைவதற்கு உரிய பழைய புத்தகங்கள், படக்கதைகள் என்பன அளித்தல்
- பிற வீட்டுக் குழந்தைகளுடன் விளையாடவும் பழகவும் உரிய வாய்ப்புகள் அளித்தல்.

அன்றாட வகுப்புச் செயல்பாடுகளுடன் தொடர்புள்ள எவற்றைப் பெற்றோர்கள் கவனிக்க வேண்டும்?

- அன்றாட வகுப்புச் செயல்பாடுகள் பற்றிக் குழந்தைகளிடம் கேட்டறிதல்
- நோட்டுப் புத்தகங்களைச் சோதித்துப் பார்த்தல்
- பல்வேறு பாடங்களுடன் தொடர்புள்ள தொடர் செயல்பாடுகளுக்குத் தயாராக உதவிபுரிதல்
- கற்றலுக்குத் துணைபுரியும் ஒலி - ஒளிக் கருவியையோ (வீடியோ) அலைபேசியையோ கணினியையோ காண வாய்ப்புகள் அளித்தல்

பயன்மிக்கக் கற்றலில் ஏற்படும் தடைகளை அகற்றுவதற்குப் பெற்றோர்கள் பள்ளிக்கூடச் செயல்பாடுகளை மிகக் கவனமாக உற்றுப் பார்த்து பயன்பாட்டு முறையில் ஈடுபடவும் வேண்டும். அடிக்கடி பள்ளிக்கூடம் செல்ல வேண்டும். பெற்றோர் கூட்டங்களில் பங்கு பெற வேண்டும். பள்ளிக்கூட மேம்பாட்டுச் செயல்பாடுகளில் ஒத்துழைக்க வேண்டும். பள்ளிக்கூடத் திட்டமிடுதலிலும் நடைமுறைப்படுத்துதலிலும் தன்னால் செய்ய இயன்றனவற்றைப் பகுத்தறிந்து செயல்படுத்த வேண்டும்.

### பின்னிணைப்புச் செயல்பாடு - 2

பள்ளிக்கூடச் செயல்பாடுகளை நன்கு செயல்படுத்த பெற்றோர்கள் ஏற்க முடிந்த செயல்பாடுகளின் ஒரு பட்டியல் தயாரிக்கவும்.

சரியான கல்வி என்பது கற்போரின் மிகச் சிறந்த திறன்களை வெளிக் கொணர்தல் ஆகும். மேம்பட்ட சமூக வாழ்க்கைக்குத் தேவையான அறிவு, சமூகம் - தனிநபர் - தொழில்சார் திறன்கள், சரியான மனப்பான்மை, மதிப்புகள், விழுமியங்கள் என்பன அடைவதன் வாயிலாகச் சுய முழுமை சார் மேம்பாடே கல்வியின் முக்கிய இலக்கு. புதிய கல்விமுறை குழந்தைகளின் முழுமைசார் மேம்பாட்டை இலக்காகக் கொண்டுள்ளது. இந்தக் கல்வி முறையைப் பெற்றோர்களில் சிலரேனும் முழுமையாக ஏற்கவில்லை என்பதே எதார்த்தம்.

### பின்னிணைப்புச் செயல்பாடு - 3

- விடைகளை மனப்பாடம் செய்யாவிடில் தேர்வு எப்படி எழுத முடியும்? எவ்வாறு மதிப்பெண் பெற முடியும்? பெற்றோர் ஒருவரின் குற்றச்சாட்டு.
- பாட்டு - விளையாட்டுகளால் சரியான கற்றல் நடைபெறுமா? மற்றொரு பெற்றோரின் ஐயம்.
- என் மகனுக்கு நன்கு ஆங்கிலம் எழுதவும் பேசவும் இயலவில்லை. இரண்டாம் வகுப்பு மாணவர் ஒருவரின் பெற்றோரின் கருத்து
- இலை - மலர் பறித்து நடப்பது சூழல் கல்வி ஆகுமா? வகுப்பு பி.டி.ஏ நடக்கும்போது எழுப்பப்பட்ட ஒரு வினா.

மேலே தரப்பட்டுள்ள பெற்றோர்களின் ஐயங்கள் புதிய கற்றல் முறையுடன் இணைந்து போகவில்லை. அவர்களின் ஐயங்களை அகற்றுவதற்கு உரிய வழிமுறைகளை உங்கள் நாட்குறிப்பேட்டில் குறிக்கவும்.

வீட்டில் குழந்தையின் நல்ல ஓர் உதவியாளராகச் செயல்படப் பெற்றோரால் இயலும். குழந்தைக்குச் சரியான கற்றல் சூழலை உருவாக்குவதே பெற்றோரின் முக்கியக் கடமை.

புத்தகப் பாடப்பொருள்களை மனப்பாடமாகக் கற்றல் கற்பித்தல் என்ற முறை இப்போது மாற்றம் பெற்றுவிட்டது. குழந்தை கண்டும் கேட்டும் வினவியும் திரட்டியும் விவரங்களைப் புரிந்துகொள் கின்றனர். சுயச் செயல்பாடுகள் வாயிலாகக் கற்கின்றனர். அதற்கான வசதி – வீட்டில் உருவாக வேண் டும். குழந்தைகள் சுற்றிலும் காண்பதைக் கற்றலுக்கு உட்படுத்துகின்றனர். செயல்திட்டங்களைச் செய் கின்றனர். பெருக்கல் பட்டியலை உருவாக்கிப்படிக்கின்றனர். படம் வரைகின்றனர். கதை எழுதுகின் றனர். வீட்டில் நல்லதோர் கற்றல் சூழல் உருவாகச் செய்ய வேண்டியன யாவை. கீழே குறிப்பிடு கின்ற வசதிகளை வீட்டில் ஏற்படுத்த பெற்றோர்கள் இயன்ற அளவில் கவனம் செலுத்தவேண்டும்.

- பத்திரிகை
- வானொலி
- தொலைக்காட்சி
- கணினி
- இணையத் தொடர்பு
- குழந்தை இலக்கியப் படைப்புகள்
- குழந்தை இதழ்கள்
- கற்றலுக்கு ஏற்புடைய பௌதிக வசதிகள்
- குழந்தையிடம் நல்லுறவு அணுகுமுறை

பெற்றோர்களைப் போன்றே ஆசிரியருக்கும் குழந்தையின் முழுமைசார் வளர்ச்சியில் பெரும் பொறுப்புகள் உள்ளன. மன ஈடுபாட்டுடன் கற்கும் சூழலை உருவாக்குதல் என்பது இப்பொறுப்புக ளில் மிகமுக்கியமானது. செயல்பாடுசார் வகுப்பில் ஆசிரியர் பன்முக முறையில் கற்றல் செயல்பா டுகளை ஒழுங்குபடுத்த வேண்டும். கீழ்க்காணும் விவரப் படத்தைக் கவனிக்கவும்.



கல்விக்கு அனேக இலக்குகள் உள்ளன. நல்ல குடிமக்களை உருவாக்குதல், மதிப்புணர்வு - ஜனநாயக - சமயச்சார்பின்மைமிக்கக் கண்ணோட்டங்கள் உள்ள எதிர்காலச் சமூகத்தை உருவாக்குதல் என்பன அவற்றில் சில. தொழில் தேடுதல் என்ற பொது இலக்கே கல்விக்கு உரியது எனப் பெற்றோர்களில் பெருவாரியானோர் நம்புகின்றனர். எதார்த்தக் கல்வி இலக்குகளை நோக்கிக் குழந்தைகளை வழிநடத்துவதற்கு உரிய சிந்தனை பெற்றோர்களிடம் ஏற்படவேண்டும்.

**பின்னிணைப்புச் செயல்பாடு - 4**

பெற்றோரியக் கல்வி நிகழ்ச்சியில் வெளியிட வேண்டிய முக்கியக் கருத்துகள் எவை எனக் கண்டுபிடித்து பட்டியலிடவும். அவற்றுடன் தொடர்புடைய சில காரணிகள் கீழே உள்ளன. மேலும் பலவற்றைச் சேர்க்கவும்.

- எதார்த்தக் கல்வி இலக்குகள்
- பெற்றோர் குழந்தைக்கு அளிக்கவேண்டிய பின்துணை
- செயல்பாடுசார் கல்வியின் சிறப்பியல்புகள்
- 
- 
- 

மேலே கூறிய காரணிகளை உட்படுத்தி பெற்றோரியக் கல்விக்கு உரிய ஒரு சுவரொட்டி தயாராக்கவும்.

## பெற்றோருடன் உள்ள தொடர்பு

கல்விச் செயல்பாடுகள் பயன்மிக்கனவாக அமைய வேண்டுமெனில் பெற்றோர்களோடும் சமூகத்தோடும் உள்ள தொடர்பை மேம்படுத்த வேண்டும். பள்ளிக்கூடம் ஒரு சமூக நிறுவனம் என்றும் தன் குழந்தையின் முழுமையார்ந்த உயர்ச்சியைத் தன் ஈடுபாடுகளால் மட்டுமே நிறைவேற்ற இயலும் என்றும் பெற்றோர் அறிந்திருக்க வேண்டும். பள்ளிக்கூடப் பௌதிக வசதிகள், ஓரெல்லை வரை கல்விச் செயல்பாடுகள் என்பனவற்றில் பெற்றோரால் முக்கியப் பங்கு வகிக்க இயலும். பெற்றோர்களையும் சமூகத்தையும் பள்ளிக்கூடத்துடன் இணைக்க உதவிக்கரம் நீட்ட வேண்டியவர்கள் ஆசிரியர்களே.

பெற்றோர்களுடன் உள்ள தொடர்பு வளர்வதற்குப் பள்ளிக்கூடம் செய்ய வேண்டியன யாவை?

- பள்ளிக்கூட நிகழ்ச்சிகளில் பெற்றோர்களைப் பங்கு பெறச் செய்தல்
- பெற்றோர்களுடன் ஆலோசனைகள் செய்து பள்ளிக்கூட நிகழ்ச்சிகளைத் தீர்மானித்தல்
- பள்ளிக்கூட மேம்பாட்டுத் திட்டமும் கல்விசார் பெருந்திட்டமும் தயாராக்குவதற்குப் பெற்றோர்களின் பங்களிப்பை உறுதிப்படுத்துதல்
- பள்ளிக்கூட வளங்கள் - நூல் நிலையம், கூடம், விளையாடும் இடம் என்பன பயன்படுத்த வாய்ப்பு அளித்தல்
- குழந்தைகளின் வீடுகளுக்கு ஆசிரியர்கள் செல்வதுடன் குழந்தைகளின் பௌதிக - பொருளாதார - பண்பாட்டுச் சூழல்களையும் பிறவற்றையும் தெரிந்துகொள்ளுதல்

## வகுப்பு பி.டி.ஏ

பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு பிரிவிலும் கற்பிக்கின்ற ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், வகுப்பு ஆசிரியர், தலைமை ஆசிரியர் என்போர் சேர்ந்ததே வகுப்பு பி.டி.ஏ. இது மாதத்தில் ஒரு

தடவை கூடவேண்டும். இக் கூட்டங்களின் முக்கிய இலக்கு குழந்தைகளின் கற்றல் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துதல் ஆகும். கல்வியாண்டின் தொடக்கத்தில் தொடங்குகின்ற வகுப்பு பி.டி.ஏ கூட்டத் தையும் தேர்வுகளின் பலனை அறிவிப்பதற்குக் கூடுகின்ற வகுப்பு பி.டி.ஏ கூட்டத்தையும் வேறு பட்ட முறைகளில் ஒருங்கிணைக்க வேண்டும். குறிப்பிட்ட கால அளவின் உள்ளாக வகுப்பு பி.டி.ஏ நடைபெற வேண்டும். பெற்றோர்களின் கருத்து வெளியீடுகளுக்கு மிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும். குழந்தைகளின் சுயக் குறைபாடுகளைக் கூட்டத்தில் அறிவிக்காமலிருக்க ஆசிரியர்க ளும் பெற்றோர்களும் கவனிக்க வேண்டும்.

வகுப்பு பி.டி.ஏ கூட்டத்தின் முன்னேற்பாடுகள் எவை எனப் பார்ப்போம்.

- கூட்டம் கூடப்போகும் தேதியையும் நேரத்தையும் முன்னரே குழந்தைகள் வாயிலாகப் பெற் றோர்களை அறிவிக்க வேண்டும்.
- குழந்தைகளுக்கு உரிய பொறுப்பினை முன்னரே தீர்மானித்து அளிக்க வேண்டும்.
- கூட்டத்தின் முன்னோடியாகத் தெளிவான ஒரு நிகழ்ச்சி நிரலை வகுப்பு ஆசிரியர் குழந்தைக ளின் உதவியுடன் தயாராக்க வேண்டும்.

முன்னேற்பாடுகளுடன் தொடர்புள்ள பிற காரியங்களைக் கலந்துரையாடல் வாயிலாகக் கண்டுபி டித்து உங்கள் நாட்குறிப்பேட்டில் குறிக்கவும். ஒரு வகுப்பு பி.டி.ஏ கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலின் தோராயமான வடிவம் கீழே தரப்பட்டுள்ளது.

- வரவேற்பு
- பெற்றோர்கள் அறிய (பொது அறிவுரைகள்)
- குழந்தைகள் பெறவேண்டிய கற்றல் அடைவுகளின் வெளியீடு
- கற்றல் அனுபவ விளக்கம்
- குழந்தைகளின் மேன்மைகளின் வெளியீடு (கற்றல் அடைவுகளுடன் தொடர்புடையன)
- பெற்றோர்களின் கருத்தும் கலந்துரையாடலும்
- ஆசிரியரின் தொகுப்புரை
- தொடர் செயல்பாடுகளைத் திட்டமிடுதல்

## பின்னிணைப்புச் செயல்பாடு - 5

பெற்றோரியக் கல்வியின் மேலும் பல விளக்கங்கள் இந்த அலகின் முதல் கற்றல் அடை வின் விளக்கத்தில் தரப்பட்டிருப்பதைக் கவனிக்கவும். அவற்றை உட்படுத்திப் பெற்றோரி யக் கல்விக்கு உதவிபுரியுமாறு ஒரு கருத்தலகை ஆசிரியரின் உதவியுடன் தயாராக்கவும்.

- முதன்மை விவரங்கள்
- நோக்கங்கள்
- உள்ளடக்கத் துறைகள்
- செயல்பாடுகளும் பரிமாற்ற உத்திகளும்
- பயிற்சிக் கருவிகள்
- கலந்துரையாடல் குறிப்புகள்
- என்பன கருத்தில் கொண்டே இக்கருத்தலகைத் தயாராக்க வேண்டும்.

## பெற்றோரிய நடைப்பாங்குகள் (Parenting styles)

முக்கியமாக நான்கு பெற்றோரிய நடைப்பாங்குகள் உள்ளன. அவை கீழே தரப்பட்டுள்ளன.

1. Authoritarian
2. Authoritative
3. Permissive
4. Uninvolved

ஒரு குழந்தையின் நலம் மிக்க வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் பெற்றோரிய நடைப்பாங்குகள் மிகச் செல்வாக்கு செலுத்துகின்றன. குழந்தையிடம் எவ்வாறு பழகுகின்றனர். குழந்தைக்கு ஒழுக்கம் பற்றிய பயிற்சியை எவ்வாறு அளிக்கின்றனர் என்பன அக்குழந்தையின் எதிர்கால வாழ்வையும் கண்ணோட்டத்தையும் வடிவமைக்க உதவிபுரிகின்றன. குழந்தைகளை வளர்த்துவதில் இத்தகைய பல்வேறு நடைப்பாங்குகள் தெளிவான செல்வாக்கு செலுத்துகின்றன.

## பெற்றோரியத் திறன்கள் (Parenting skills)

நல்ல பெற்றோரியத் தன்மைக்குச் சில திறன்கள் பெற்றிருக்க வேண்டும். அவற்றில் முக்கியமானவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. Love and Affection
2. Stress management
3. Relationship skills
4. Autonomy and Independence
5. Education and Learning
6. Life skills
7. Behaviour management
8. Health
9. Religion
10. Safety

குழந்தைகளிடம் அன்பு காட்டுவதுடன் பின்துணை அளித்து அங்கீகரித்தல், அவர்களின் தனித்துவத்திற்கு மதிப்பு அளித்தல், பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் ஏற்படும் அழுத்தம் குறைவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன பெற்றோரியத்தின் திறன்கள் ஆகும். மேலும் குழந்தைகள் சுயத்திறன் மிக்கவர்கள் ஆகுமாறு ஊக்குவிக்கவும் பெற்றோர்கள் கவனிக்க வேண்டும். குழந்தைக்குக் கல்வி வாய்ப்புகள் அளிக்க வேண்டியது பெற்றோரின் பொறுப்பாகும். நிலையான வருமானம் உண்டாக்கவும் எதிர்காலம் பற்றித் திட்டமிடவும் உரிய தகுதி கல்வி வாயிலாகக் கிடைக்க வேண்டும். நலம் மிக்க வாழ்க்கையின் உரிமையாளராகக் குழந்தைக்கு இயல வேண்டும். அதற்காக ஊட்டச்சத்துமிக்க உணவு, உடற்பயிற்சி என்பன அளிக்கவும் பெற்றோருக்குப் பொறுப்புகள் உள்ளன.

### பெற்றோரிடம் அமைந்திருக்க வேண்டிய குணச்சிறப்புகள்

ஒரு நல்ல பெற்றோரிடம் இருக்க வேண்டிய குணங்கள் எவை? அவற்றில் சில கீழே தரப்பட்டுள்ளன.

- Patience
- Listening
- Understanding
- Consistency
- Empathy
- Ability to express love
- Silliness
- Flexibility
- Creative
- Selfcare

### பின்னிணைப்புச் செயல்பாடு - 6

| |
|---|
| பெற்றோரிய விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றை ஒருங்கிணைக்கிறோம் எனக் கருதவும். அதில் பெற்றோர்களின் முன்னர் நழுவுபடங்கள் காட்சிப்படுத்துதல் (ஸ்லைடு பிரசன்டேஷன்) நடத்தவும். |

### மதிப்பீடுசார் வினாக்கள்

1. பெற்றோரியக் கல்விக்குத் தயாராக்குகின்ற சுவரொட்டியில் நீங்கள் உட்படுத்தும் காரியங்கள் எவை எனத் தெளிவுபடுத்துக.
2. பெற்றோர்களுடன் உள்ள தொடர்பினை மேம்படுத்த ஓர் ஆசிரியர் என்ற நிலையில் நீங்கள் எம்முறைகளைப் பின்பற்றுவீர்கள்? விளக்குக.
3. நீங்கள் ஒருங்கிணைக்கும் வகுப்பு பி.டி.ஏ கூட்டத்தில் கலந்துரையாடும் காரியங்கள் எவை எனத் தெளிவுபடுத்துக.
4. முக்கியப் பெற்றோரியத் திறன்கள் எவை? விளக்குக.
5. வகுப்பு பி.டி.ஏ கூட்டங்களில் பெற்றோர்களின் பங்களிப்பை உறுதிப்படுத்த நீங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எவை?

### பார்வையிடல்


1. mentorskerala.blogspot.com
2. www.scert.kerala.gov.in > philosophy
3. www.child-encyclopedia.com
4. https://www.krn.org>urc>tiller

# அலகு - 7

# பாலினச் சமத்துவக் கல்வி

## முன்னுரை

அனைவரும் சமம் என வடிவமைக்கப்பட்ட ஒரு ஜனநாயக நாடே இந்தியா. சாதி, இனம், பால் என்பனவற்றை அடியொற்றி எழுந்துள்ள பாகுபாடுகளை அழித்தல் என்பதே நம் தேசத்தின் முக்கிய இலக்கு. இதற்காகச் சரியான கருத்துகளைப் பிரச்சாரம் செய்வதுடன் பண்பாட்டுச் சூழலை உருவாக்குகின்ற மிக முக்கியச் செயலே கல்வி.

சாதி இன வேறுபாடுகளை அடியொற்றிய ஏற்றத் தாழ்வுகளை அகற்ற செயல்பட்டுள்ள முயற்சிகளைப் போன்று பாலினப் பாகுபாடு உண்டாக்கும் பிரச்சினைகளின் தீர்வுகளுக்கு உரிய முயற்சிகள் நம் கல்வியில் இதுவரை செயல்படவில்லை. சமூக வாழ்க்கையின் பிற அனைத்துத் தளங்களிலும் உள்ளவைபோன்று பள்ளிக்கூடங்களிலும் பெண் குழந்தைகள் பாலினம் சார்ந்த பாகுபாட்டைச் சந்திக்கின்றனர். ஆண் குழந்தைகளுக்கு இல்லாத தடைகளை அனுபவிப்பதுடன் தூய்மைப்படுத்தும் பணிகளை நிரந்தரமாக ஏற்றெடுக்க வேண்டிய நிலைகளும் பெண் குழந்தைகளுக்கு ஏற்படுகின்றன.

பெண், ஆண், திருநங்கையர் எனும் மூன்று பிரிவினரும் வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் சமவாய்ப்பிற்கும் சமப் பங்களிப்பிற்கும் உரிமை உடையவர்கள். ஆனால் ஆணுக்குச் சமமான வாய்ப்புகள் பல சூழல்களில் பெண்களுக்கு மறுக்கப்படுகின்றன. திருநங்கையர்க்கோ சமூகத்தில் அமைதியாக வாழ்வதற்குக் கூட இயலவில்லை. பொதுவாக ஆண்மைய மதிப்புகளும் மனப்பான்மைகளுமே சமூக வாழ்க்கையைக் கட்டுப்படுத்துகின்றன. நூற்றாண்டுகளாக சமூக வாழ்வைத் தீர்மானிக்கின்ற ஆணாதிக்கக் கொள்கைகளை அழிப்பதுடன் சமத்துவமும் சகோதரத்துவமும் அடியொற்றிய மதிப்புகளை வளரச் செய்ய வேண்டுமெனில் கல்வியில் இதற்கு உரிய அறிவுபூர்வமான ஈடுபாடுகள் அவசியமாக உள்ளன. இதற்காகப் பாலினச் சமத்துவம் வளர்வதற்கு உரிய கருத்துகளையும் செயல்பாடுகளையும் கல்வியில் உட்படுத்துவதுடன் மாணவர்களின் பாலினச் சுய உணர்விலும் பாலினம்சார் மதிப்புணர்விலும் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டும்.

குழந்தை வாழும் சமூகச் சூழலில் நிலைத்த வடிவம் உள்ள ஒரு பாலின உணர்வு வடிவம் (gender stereo type) நிலைநிற்கிறது. இந்த நிலைத்துப் போன அமைப்பின் பொருத்தத்தில் ஆழ்ந்து பாலினப்பாகுபாட்டின் பிரச்சினைகளைப் பகுத்தறியாது போய்விட்டனர். பாலினப்பாகுபாட்டின் பிரச்சினைகளை அதிகமாக அனுபவிப்பவர்கள் பெண்களே. கல்வியின் அடித்தளம் முதலாக உயர்தளம் வரை பாகுபாடுகள் நிலைநிற்கின்றன. வகுப்புச் சூழல்களில் கூட பாலினச் சமத்துவம் புறக்கணிக்கப்படும் நீண்டகாலப் போக்குகள் நிலைநிற்பதால் ஜனநாயக உணர்வும் மனித உரிமைகளும் உள்ளொழுக்குகளாக அமைந்துள்ளன எனினும் பாலினச் சமத்துவத்தில் வேரூன்றிக் கொண்டே கல்வி முறை வடிவாக்கம் பெறவேண்டியுள்ளது.

## முக்கியக் கருத்துகளும் செயல்பாடுகளும்

- பாலினத் தகுதியும் (பாலினப் பிரிவு) பாலுணர்வும்
- தேசத்தின் மேம்பாட்டில் பெண்களின் பங்கு, பெண் ஆற்றல் மிக்க மனிதவளம்
- உயிரியல் - சமூகவியல் - உளவியல்சார் பாலின வேறுபாட்டுக் காரணிகள்

- திருநங்கையர் அனுபவிக்கும் பிரச்சினைகள்
- பாலினச் சமத்துவம் மனித உரிமைகளில் ஒன்று.
- பாலின முன்னுரிமை பெண் குழந்தைகளின் உணர்வு - உள்ளம்சார் மேம்பாட்டைத் தடை செய்கிறது.
- பாடப்புத்தகங்களிலும் பிற வெளியீடுகளிலும் பாலினப் பாகுபாட்டைக் காணமுடியும்
- பாலினப் பாகுபாடுகளுக்கு எதிராக விழிப்புணர்வுச் செயல்பாடுகளை நடத்த வேண்டும்
- ஆண் - பெண் - திருநங்கையர் சமத்துவத்தை மையமிட்ட நிகழ்ச்சிகளைத் திட்டமிடுதல் வாயிலாகப் பாகுபாட்டுக்கு எதிரான உணர்வை உருவாக்க இயலும். சமூகத்தின் பெண் எதிர் நடவடிக்கைகளைப் பகுத்தாராய்வதன் வாயிலாக விழிப்புணர்வை ஏற்படுத்த இயலும்.

**உள்ளடக்கம்**

7.1. பாலின வேறுபாடும் பாலுணர்வும்

7.2. பாலின வேறுபாட்டுக் காரணிகள் தடைகள் ஆதல்

7.3. பெண் குழந்தைகள் சந்திக்கும் பாகுபாடுகள்

7.4. பாலினச் சமத்துவம் மனித உரிமைகளில் ஒன்று

7.5. பாகுபாடுகளை அழிக்கும் நிகழ்ச்சிகள்

7.6. பெண் பாதுகாப்பின் சட்டங்கள்

7.7. பாலினச் சமத்துவப் பள்ளிக்கூடம்

## 1. பாலின வேறுபாடும் பாலினமும்

பாலின வேறுபாடு, பாலினம் எனும் சொற்கள் ஒரே பொருளில் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் இவை ஒரே பொருள் உடையன அல்ல. உடல் அமைப்பிற்கு - ஏற்பவே ஒருவர் பெண்ணா ஆணா எனத் தீர்மானிக்கப்படுகிறார். அதில் முக்கியம் பாலின உறுப்புகள் ஆகும். இவ்வாறு பாலின உறுப்புகளை அடியொற்றிப் பெண் என்றும் ஆண் என்றும் வேறுபடுத்துதலையே பாலினம் என்கிறோம்.

இவ்வாறு பெண் என்றும் ஆண் என்றும் வரையறுப்பதுடன் சமூகம் சார்ந்த கருத்துகளும் நம்பிக்கைகளும் ஒன்றிணையும் போது அது பாலின வேறுபாடாக மாறுகிறது. சமூக உளவியலறிஞர்கள் ஏறக்குறைய 1960 வரை பாலின வேறுபாடு (Psychological Cultutral and Social attributes) பாலினம் எனும் சொற்களை ஒரே பொருளில் பயன்படுத்தினர். விளக்கமாகக் கூறினால் ஒருவரின் பாலினத்தைத் தீர்மானிப்பது வெளிப்பாலின உறுப்புகள், இனப்பெருக்க உறுப்புகள், ஹார்மோன்களின் தன்மை, இரு பாலினம்சார் நடவடிக்கைகள் எனும் உயிரியல் சார்ந்த காரணிகள் ஆகும். பாலினவேறுபாடு என்பது ஒருவரின் சமூகம் சார்ந்து கட்டமைக்கப்பட்ட இருப்பு, குணச் சிறப்புகள், செயல்பாடுகள் பெண்ணுக்கும் ஆணுக்கும் சமூகம் கருதுகின்ற சிறப்பியல்புகள் என்பனவற்றைச் சுட்டுகிறது. சமூகத்தைக் கட்டுப்படுத்துவதும் ஆதிக்கம் செலுத்துவதும் ஆணாதிக்க மதிப்புகள் ஆகும். ஆண் வலிமையுடையவன் சிந்தனைச் சக்திமிக்கவன் என்றும் பெண் பலவீனமானவள்; உணர்வுகளால் பிரச்சினைகளைக் காண்பவள் என்றும் சமூகம் கருதுகின்றது. முன்விதிகளுடன் இணைந்த இந்தக் கண்ணோட்டம் சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்குக் காரணம் ஆகிறது. ஆண் - பெண் நட்பு அனுமதிக்க இயலாதது எனவும் பாலின வேறுபாட்டிற்கு

ஏற்ப ஆணும் பெண்ணும் தனித்தனியான நடத்தை முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். அவ்வாறு பாலின வேறுபாட்டிற்கு நிலைத்த வடிவங்கள் உருவாகிவிட்டன.

### திருநங்கையர் (Transgenders)

பிறப்பு முதல் உயிரியல் சார்ந்த தனித்தன்மைகளால் ஒரு பாலினத்தில் உட்படுவதுடன் அதே வேளையில் எதிர்ப்பாலின அடையாளங்களை வெளிப்படுத்தவும் செய்பவர்களைத் திருநங்கையர் என அழைக்கிறோம்.

## 2. பாலின வேறுபாடுகள் தடைகள் ஆதல்

பொது வாழ்க்கையிலும் பள்ளிக்கூடத்திலும் காணப்படும் பாலின வேறுபாட்டுக் காரணிகளையும் அவற்றிற்கு அடிப்படையான தன்மைகளையும் புரியவைப்பது நலம் மிக்க ஆண் - பெண் நட்புறவு வளரவும் சமத்துவம் வாய்ந்த சமூக வாழ்வு வலுப்படவும் துணைபுரியும் என்பதாகும். இதற்காகப் பெண், ஆண், திருநங்கையர் எனும் முப்பிரிவினரைப் பற்றிய சமூகத்தின் மதிப்புசார் கட்டமைப்பிற்கு அடிப்படையான காரணிகளைச் சோதித்துப் பார்க்க வேண்டும்.

### காரணிகள்

7.2.1. உயிரியல் சார்ந்தது

7.2.2. உளவியல் சார்ந்தது

7.2.3. சமூகவியல் சார்ந்தது

### உயிரியல் சார்ந்தது

குழந்தைப் பேறும் பாலூட்டலும் தாய்மார்களுக்கு உரியன அல்லவா. இம்முக்கியப் பொறுப்புகள் வகிப்பதால் அவர்கள் வீட்டிலேயே கூடுதல் நேரம் இருக்க வேண்டியுள்ளனர். இத்தன்மை பெண் குழந்தைகளின் சமூகம் சார் வளர்ச்சியைப் பாதித்துள்ளது. பெண் குழந்தைகள் ஆண் குழந்தைகள் போன்று கல்வித் தகுதி பெற வேண்டியவர்கள் அல்லர்; வீட்டில் ஒதுங்கி வாழ வேண்டியவர்கள் எனும் சமூக நம்பிக்கைகள் வடிவம் பெற்றமை இவ்வாறிருக்கலாம். பெண்கள் குழந்தைப் பராமரிப்பு நடத்தி வீட்டில் தங்கியபோது ஆண்கள் உணவுக்காகவும் வேளாண்மைக்காகவும் வெளியே போயினர். இத்தன்மை ஆணை உடல் அளவில் வலுவுடையவனாக்கி மாற்றியதுடன் வலுவான பணிகள் செய்ய வேண்டியவன் ஆண் என்ற எண்ணமும் உருவாயிற்று. ஆர்வத்துடன் தொடர்புள்ள சமூக நம்பிக்கைகள் விசித்திரமானவை. மாதவிலக்கு அசுத்தமானது என்றும் மாதவிலக்குக் காலத்தில் பெண்கள் தீண்டத் தகாதவர்கள் என்றும் பரவலாக ஒரு காலத்தில் நம்பியிருந்தனர். இயல்பாக உடல் சார்ந்துள்ள செயலான மாதவிலக்கு பற்றிய மூடநம்பிக்கைகளின் பெயரால் பெண்கள் மிகத் துன்பங்களும் புறக்கணிப்புகளும் அனுபவிக்கின்றனர். இது பெண்களின் உடலியல் சார்ந்த தனித்தன்மைகளுடன் தொடர்புப்படுத்திச் சமூகம் உருவாக்கிய பாலின வேறுபாட்டு கருத்தாடல்களுக்குச் சரியான எடுத்துக்காட்டாகும்.

### உளவியல் சார்ந்தது

குமரப்பருவத்தில் உடல் வளர்ச்சியுடன் ஒத்துப் போகக் குழந்தைகள் துன்பப்படுகின்றனர். உள்ளம் சார் மன இறுக்கங்களும் உணர்வுசார் பிரச்சினைகளும் இக்காலத்தில் சாதாரணமானவை. அதைச் செய்யாதே; இதைச் செய்யாதே எனும் தடைகள் அல்லாமல் என்ன செய்ய வேண்டும்? எவ்வாறு செய்ய வேண்டும் எனும் அறிவுரைகளை எவரும் சொல்வதில்லை. இவை உள்ளம் சார் சிக்கல்கள்

உண்டாக்குகின்றன. தடைகளை அதிகமாகச் சந்திக்கின்றவர்கள் பெண் குழந்தைகள். சமூக நம்பிக்கைகளுக்கு ஏற்ப பெண் குழந்தைகள் வாழ வேண்டும் எனக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

7.2.3.

தனிநபர் வளர்ச்சியில் சமூகச் செல்வாக்கு மிக முக்கியமாகும். சமூக உயிரி ஆன மனிதனுக்குச் சமூகப் பண்பாட்டை அங்கீகரிக்காமல் வாழ இயலாது. சமூக நடத்தைச் சட்டங்களும் சட்டமுறைகளும் அழுத்தம் செலுத்துகின்ற பொதுத் தடைகளுக்கு அஞ்சி ஆர்வங்களையும் ஆசைகளையும் உள்ளடக்கி மனிதர்கள் வாழ்கின்றனர். இது குமரப்பருவத்தில் சில பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றன. எதிர்ப்பாலினம் சார்ந்தவர்களுடன் நட்புறவு நிலைநாட்டவும் பகுத்தறிவுகளுக்கும் தடைகள் ஏற்படுகின்றன. வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் சமூகத்திலும் நலம் மிக்கப் பெண் – ஆண் நட்புறவு வளர்வற்கு அறிவுபூர்வமான முயற்சிகளைச் செயல்படுத்தினால் மட்டுமே தடைகளைத் தாண்டிச் செல்ல முடியும்.

## பெண் குழந்தைகள் சந்திக்கின்ற பிரச்சினைகள்

பாலின வேறுபாட்டு முன்னுரிமையின் பலனாக மிகத் துன்பங்கள் அனுபவிப்போர் பெண் குழந்தைகளே. இன்றைய ஜனநாயகச் சமூகங்கள் பெண்ணுக்கும் ஆணுக்கும் சமச் சுதந்திரமும் சம உரிமையும் அங்கீகரிக்கின்றன எனினும் பல சமூகங்களில் இவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. பெண்ணுக்கும் ஆணுக்கும் சம உரிமைகளை அளிக்கின்றது இந்திய அரசியல் அமைப்பு. ஆனால் இந்தியப் பெண்களின் நிலை ஆணைவிடப் பின்னோக்கியே அமைந்துள்ளது.

பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாமென்றீரோ
மண்ணுக்கும் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை

எனப் புரச்சிக்கவி பாரதிதாசன் பாடியுள்ளார். பெண்கள் பேச்சுரிமையற்று சமையலறையில் ஒதுங்கி குழந்தைப் பேற்றிற்கு உரியவர்களாய் வாழும் பண்பாடே நிலைநிற்கின்றது.

பெண் குழந்தைகளிடம் காட்டும் பாகுபாடுகள் பிறப்புடனேயே தொடங்குகிறது. பெண் குழந்தைக்கு வீட்டில் தரும் முக்கியத்துவம் வீட்டு வேலைகள், உணவு, கல்வி என அனைத்திலும் பாகுபாடுகள் உள்ளன. ஆண் – பெண் பிரிவு சார்நது குழந்தைகளை வேறுபடுத்தி முன்னுரிமை உயர் கல்வியிலும் வாழ்க்கைத் தரத்திலும் அளித்தல் கேரளாவில் கூடக் காணமுடிகிறது. இது பெண் குழந்தைகளின் உணர்வும் உள்ளமும் சார்ந்த வளர்ச்சியை எல்லைப்படுத்துவதுடன் தனித்துவ மேம்பாடு அற்றவர்களாகவும் மாற்றிவிடுகிறது. சுயக் கால்களில் நிற்கவும் சுயமாகக் காரியங்களைப் பிறர் உதவியின்றி செய்யவும் பெருவாரியானோர் திறன் இழந்து போவதன் ஒரு காரணம் சமூகச் சூழல்களே. பொருளாதார இடர்கள் சந்திக்கின்ற குடும்பங்களில் அது மிகக் கூடுதல் பாதிப்பை ஏற்படுத்துவதும் பெண் குழந்தைகளிடமே. இத்தகைய குடும்பங்களில் பெண் குழந்தையின் கல்வி பாதியில் நின்றுவிட ஆண் குழந்தையின் கல்வி தொடர்கிறது. சில வேளைகளில் பள்ளிக்கூடங்களில் ஆண் குழந்தைகளுக்குக் கிடைக்கின்ற சுதந்திரமும் கவனிப்பும் பெண் குழந்தைகளுக்குக் கிடைப்பதில்லை.

## பாலினப்பாகுபாடு - இந்தியாவில்

பாலினப்பாகுபாடால் உலகில் 50% அளவில் மேதைமை, அனுபவச் செல்வம், அறிவு என்பன பின்தங்கி விடுகின்றன. ஆண் குழந்தையின் பிறப்பை வரமாகவும் பெண் குழந்தையின் பிறப்பைச் சாபமாகவும் காண்கின்றனர். வளர்ச்சியுற்ற நாடுகளில் சராசரியாக 6 ஆண்டுகள் ஆயுள் நீட்டிப்பு ஆண்களைவிடப் பெண்களுக்குக் கூடுதல். இந்தியாவிலோ ஆண்களை விடக் குறைவு.

| | பெண் | ஆண் |
|---|---|---|
| 2001 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு | 927 | 1000 |
| 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு | 914 | 1000 |

தென்னிந்திய மாநிலங்களை விட வடஇந்தியாவில் பாலினப் பாகுபாடு கூடுதலாகும்.

| | பெண் | ஆண் |
|---|---|---|
| பஞ்சாப் | 793 | 1000 |
| அரியானா | 820 | 1000 |

குழந்தை பிறப்பதன் முன்னர் பாலினம் அறிதல் என்பதற்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டிருப்பினும் இதனைச் சரியாகப் பின்பற்றாமல் இருப்பதே பெண்களின் எண்ணிக்கை குறைவதன் காரணம். பெண் குழந்தைகளுக்கு உடல்நலப் பாதுகாப்பும் கல்வியும் தேவையான அளவில் கிடைப்பதில்லை பெண் குழந்தைகள் கொஞ்ச காலம் மட்டுமே தாய்ப்பால் அருந்துகின்றனர்; உடல் நலப்பாதுகாப்பும் சரியாகப் பெறுவதில்லை. மருத்துவரிடமும் மருத்துவமனைக்கும் அவர்கள் செல்லுதல் நெருக்கடி நிலைகளில் மட்டுமே. பண்பாட்டின் பெயரால் சுமத்தப்பட்ட பொறுப்புகளால் அவர்களால் உடல் நலத்தைப் பேண இயல்வதில்லை. இதனைச் சில சிந்தனையாளர்கள் நீட்டி வைக்கப்பட்ட குழந்தை இறப்பு (extended infanticide) என அழைக்கின்றனர். உணவும் ஊட்டச் சத்துக்களும் உடல்நலப் பாதுகாப்பும் விலக்கப்பட்ட இந்தியப் பெண் குழந்தைகள் இரத்தக் குறைவு, குழந்தைப் பேற்றின் போது கருப்பை விரிவடையாமை என்பன சந்திக்கின்றனர். பெண் குழந்தைகளும் பெண்களும் வீட்டினுள் செய்யும் பணிகள் உழைப்பாகவே கவனிக்கப்படுவதில்லை. பெண் குழந்தைகளைப் பொறுத்தவரை உலகின் மிக ஆபத்தான நாடுகளில் நான்காம் இடத்தில் உள்ளது இந்தியா.

> "ஒரு பெண் குழந்தையை வளர்ப்பது அடுத்த வீட்டில் உள்ள செடிக்குத் தண்ணீர் ஊற்றுவது போலாகும்"
> (ஆந்திராவிலுள்ள ஒரு பழமொழி)

## 7.4. பாலினச் சமத்துவம் மனித உரிமைகளில்

ஐக்கிய நாட்டுச் சபை உருவானபோது உலகத் தலைவர்கள் ஒன்று கூடி 1545 இல் அங்கீகரித்துள்ள சார்ட்டரில் பாலினச் சமத்துவம் அடிப்படை மனித உரிமைகளில் ஒன்று என்று அறிவித்தனர். இதற்கு ஏற்ப பெண்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதும் மனித உரிமைப் போராட்டங்களை ஊக்குவிப்பதும் நாடுகளின் கடமையாகும்.

International Covenant of Civil and Political rights, International rights என்பன பெண்ணுக்கும் ஆணுக்கும் சம உரிமைகளின் வாக்குறுதிகள் அளிக்கின்றன. இதற்கும் மேலாகப் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை அகற்றுவதற்கு உரிய செயல்பாடுகளின் நிகழ்ச்சிநிரலை அங்கீகரிக்கவும் செய்தன. 1981 செப்டம்பர் 5க்கு இது நடைமுறையில் வந்தது. பெண்களுக்கு எதிராக நடக்கும் வன்முறைகளின் காரணங்களைக் கண்டுபிடிக்க 1994 இல் ஐக்கிய நாட்டுச் சபை ஒரு நிபுணரை நியமித்தது. வன்முறைகள் நடந்தால் அவற்றின் காரணங்களைக் கண்டுபிடித்துத் தீர்வுகள் அறிவுறுத்துவதே நிபுணரின் பொறுப்பாகும்.

பெண்களும் பெண் குழந்தைகளும் உலக மக்கட்தொகையின் நேர்பாதியைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். அவர்களின் உரிமைகளைப் புறக்கணிப்பது நேர்பாதி அளவில் மனிதத்திறனையும் உற்பத்திப் பெருக்கத்தையும் பொருளாதார வளர்ச்சியையும் நலிவடையச் செய்வதாகும். ஐக்கிய நாட்டுச் சபையின் தலைமையில் பெண்கள் அனுபவிக்கின்ற அநீதிகளை அழிப்பதற்கு உரிய

முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதன் பிரிவாக 1975 உலகத் தேசிய மகளிர்தினம் ஆதரிக்கப்பட்டது. 1976 - 1985 U.N Decade for Women ஆக அறிவித்ததுடன் இதற்கான நிதி உதவித்தொகையும் அனுமதிக்கப்பட்டது. தொடர் முயற்சிகளின் பயனாக ஐக்கிய நாட்டுச் சபையின் 195 இல் 143 நாடுகள் 2014 ஆம் ஆண்டானபோது தங்களின் அரசியல் அமைப்பில் பெண் - ஆண் சமத்துவத்திற்கு உரிய சட்டங்கள் எழுதிச் சேர்ப்போம் எனத் தீர்மானித்தன.

## ஆதரிக்கப்படும் மகளிர் தினங்கள்

- உலகத் தேசிய மகளிர் தினம் - மார்ச் 8
- International Day of Zero Tolerance to female genital mutilation - February 6
- International Day for Women and Girls Elimination of Sexual violence and conflict - June 23
- International Day of Girl Child - October 15
- International Day of Rural Women - October 15
- International Widows Day - October 11

**பாலினச் சமத்துவத்தின் அடையாளம்**

- Gender equality Symbol



## பாகுபாடுகளை அழிக்கும் நிகழ்ச்சிகள்

பாலினத்தகுதி உணர்வின் (Gender Stereo types) செல்வாக்கை வாழ்க்கையின் அனைத்து நடவடிக்கைகளிலும் காண இயலும். பாட ஏற்பாடும் பாடப்புத்தகமும் கூட இதிலிருந்து விலகி நிற்கவில்லை. இவற்றைக் கண்டுபிடித்து அழிப்பதன் வாயிலாக மட்டுமே பாலினச் சமத்துவம் மிக்கச் சமூகத்தை வடிவமைக்க இயலும்.

நடைமுறையில் உள்ள பாடப்புத்தகங்களைச் சோதித்துப் பார்த்து அவை பாலினத்தகுதி தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கைகளைப் புரிந்துகொள்ளுதல் இப்பொருள் பற்றிக் கூடுதலாகத் தெரிந்து கொள்வதற்குத் துணைபுரியும். இதற்காக நாம் சோதித்துப் பார்க்க வேண்டியன யாவை?

- **பாடப்புத்தகத்தின் படக்காட்சிகள்**

படக்காட்சிகள் பாலினப்பாகுபாட்டை வெளியிடுகின்றனவா? ஆமெனில் எவ்வாறு?

**உள்ளடக்கம்**

கதைகள், கவிதைகள், விவரணங்கள், செயல்பாடுகள் என்பன பெண் - ஆண் பாகுபாட்டை வெளியிடுகின்றனவா? ஆமெனில் எவ்வாறு?

**படைப்பு**

பாடப்புத்தகப் படைப்பில் பெண் பங்களிப்பு எந்த அளவில் உள்ளது?

பல்வேறு பாடப்பிரிவுகளின் பாடப்புத்தகங்களில் பாலினப் பாகுபாட்டின் காரணிகள் உள்ளனவா

எனச் சோதித்துப் பார்ப்பதற்குப் படக்காட்சிகள், உள்ளடக்கம், படைப்பு எனும் பிரிவுகளுடன் தொடர்பு கொண்டு பொதுக் கலந்துரையாடல் வாயிலாகக் குறிப்புகளை மேம்படுத்துவதுடன் பாடப்புத்தகங்களை மதிப்பீடு செய்தல் வேண்டும்.

## சமூக விழிப்புணர்வு

உங்கள் நிறுவனத்தின் சுற்றிலும் உள்ள சமூகத்தின் நிலைமை எத்தகையது? அங்கு வாழ்வோரின் கல்வித்தரம், சமூக - அரசியல்சார் பதவிகள் என்பன தொடர்பாக நீங்கள் எந்த அளவில் தெரிந்து வைத்திருக்கிறீர்கள். இதற்காக ஒரு கணக்கெடுப்பு நடத்துதல் பயனுடையதாகும்.

- எம்முறையில் கணக்கெடுப்பு நடத்தவேண்டும்?
- சங்கங்களாகத் திட்டமிட்டு நடத்துதல்
- கணக்கெடுப்பு நடத்துவதற்காக வீடுகளைத் தேர்வு செய்தல்
- வினாநிரல் தயாராக்குதல்
- கல்வித் தகுதி
- தொழில் தகுதி
- பொருளாதாரத்தகுதி
- அரசியல் தகுதி
- சேவைச் சங்கங்களின் பங்களிப்பு

என்பன சோதித்துப் பார்க்கலாம். சர்வே நடத்தியதன் பின்னர் தகவல்களைத் தொகுப்பதுடன் தொகுத்துள்ள தகவல்களின் அடிப்படையில் அறிக்கை தயாராக்குதலும் வேண்டும்.

### பட்டறை

பாலினத் தகுதி உணர்வு உருவாகுவதற்காக Gender Sensitization Workshop நடத்தலாம். இதில் வல்லுனர்களும் கலந்துகொள்ள வேண்டும். பட்டறையில் பாலினச் சமத்துவப் பிரச்சினைகளை எடுத்துரைப்பதுடன் பிரச்சினைத் தீர்வுகளின் வழிகாட்டிக் குறிப்பேட்டைத் தயாராக்கவும் வேண்டும். இதனை அடியொற்றிச் சொந்த நிறுவனத்தில் உரிய மாற்றங்கள் செய்து நடைமுறைப்படுத்தலாம்.

## தொடர் செயல்பாடுகள்

- நடைமுறைக் கற்றல் கருவிகளும் பாடப்புத்தகங்களும் பாலினச் சமத்துவமின்மையை அழிக்கும் தகுதி பெற்றுள்ளனவா? கருத்தரங்கத்தை ஒருங்கிணைக்கவும்.
- நடைமுறைச் சமூகம் ஆணாதிக்கச் சமூகமா? விவாதங்களை ஒருங்கிணைக்கவும்.

## பெண் பாதுகாப்பின் சட்டங்கள்

சமூகத்தில் மிக வன்முறைகள் அனுபவிப்போர் பெண்களே. உடல்சார் தனித்தன்மைகளும் பௌதிகச் சூழலின் எல்லைகளும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்குக் காரணங்கள் ஆகின்றன. ஒரு வயது மழலை முதல் பாட்டிமார் வரை வன்முறைகளுக்கும் அவமானங்களுக்கும் இரைகள் ஆகின்றனர். இந்தியக் குற்றவியல் சட்டம் பெண்களுக்கு எதிரான தாக்குதல்களையும் வன்முறைகளையும் மிக ஜாக்கிரதையுடன் கண்காணித்து வருகின்றது. பெண்ணின் தன்மானத்தை இழிவுபடுத்தும் முறையில் ஒரு சொல் உச்சரிக்கவோ சைகைகாட்டவோ ஒரு பெண்ணை அவமானப்படுத்தும் முறையில் ஒரு பொருளைக் காட்சிப்படுத்தவோ செய்தால் இந்தியக் குற்றவியல் சட்டம் 354 ஆம் வகுப்பின் படி 2 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் அல்லது அபராதமும்

அல்லது சிறைத்தண்டனையும் அபராதமும் கிடைக்கின்ற குற்றச் செயலாகும்.

அருவருக்கத் தக்க முறையில் பொது இடத்தில் வைத்து அசிங்கமான செயல்களைச் செய்தல் அசிங்கமான சொற்களை உச்சரித்தல் என்பன மூன்று மாதங்கள் வரை தண்டனை கிடைக்கின்ற குற்றச் செயல்களாகும்.

பெண்களுக்கு எதிரான மிகப்பெரிய குற்றமே பாலியல் வன்முறை. இதற்கு 7 ஆண்டுகளில் குறையாத 10 ஆண்டுகள் வரை கிடைக்கின்ற சாதாரண சிறைத் தண்டனையோ கடும் சிறைத்தண்டனையோ கிடைக்கலாம்.

மகளிர் வாழ்க்கை மேம்படவும் வன்முறைகளைத் தடுப்பதற்கும் பல சட்டங்கள் இந்தியாவில் உள்ளன.

- திருமணம் ஆன பெண் 7 ஆண்டுகளுக்கு உள்ளாக வரதட்சணை தொடர்பாகவோ வரதட்சணை கேட்டோ கணவரோ கணவரின் உறவினர்களோ செய்த கொடுமைகளால் இறந்துவிட்டால் இந்தியக் குற்றவியல் சட்டத்தின் படி 7 ஆண்டுகளில் குறையாத சிறைத்தண்டனையோ ஆயுள் தண்டனையோ கிடைக்கலாம்.
- பெண்ணின் அனுமதியின்றி கர்ப்பச் சிதைவு ஏற்படுத்துதல் ஆயுள் தண்டனையோ பத்து ஆண்டுகள் வரை கடும் சிறைத்தண்டனையோ கிடைக்கும் குற்றச் செயலாகும்.
- வரதட்சணை முறையைத் தடுக்க 1961 இல் வரதட்சணை தடுப்புச் சட்டம் (The Dowry Prohibition Act 1961) நடைமுறையில் வந்தது.
- ஜீவனாம்சச் சட்டங்கள் - இந்தியக் குற்றவியல் சட்டம் - 125 ஆம் வகுப்பின்படி மனைவியையும் குழந்தைகளையும் பாதுகாக்கும் கடமை ஆணுக்கு உண்டு. ஜீவனாம்சம் என்பதில் உணவு, உடை, உறைவிடம், கல்விச் செலவு, மருத்துவச் சோதனை, மருந்து, உடல் நலப்பாதுகாப்புச் செலவு என்பன உட்படுகின்றன. இச்சட்டம் அனைத்துச் சமயப் பிரிவினர்க்கும் பொதுவானதாகும்.

  (மேலும் வாசிப்பதற்கு - ஸ்த்ரீயும் நியமவும் - கேரள சம்ஸ்தான லீகல் சர்வீசஸ் அதோரிட்டி 2006)

### பாலினச் சமத்துவப் பள்ளிக்கூடம் (Gender Free School)

Gender Free School அல்லது Gender neutral school என அறியப்படும் சோதனைப் பள்ளிக்கூடங்கள் ஸ்வீடன் போன்ற வளர்ச்சியுற்ற நாடுகளில் உள்ளன. மழலைப் பள்ளிக்கூடம் முதல் பாலின வேறுபாட்டுணர்வின்றி குழந்தைகள் வளர்வதற்கும் கற்பதற்கும் உரிய பள்ளிக்கூடங்களே இவை.

குழந்தைகள் வந்து சேர்ந்தது முதலாக எத்தகைய ஆடைகள் அணிய வேண்டும், எவ்வாறு பழக வேண்டும் என்பன பற்றிய உணர்வு ஊட்டப்படுகிறது. இவற்றைக் கருத்தில் கொள்ளாத பள்ளிக்கூடங்களே இவை. பெண் குழந்தைகள் ஆண் குழந்தைகள் எனப் பிரித்துப் பார்த்து அளிக்கின்ற விளையாட்டுக் கருவிகளோ விளையாட்டுகளோ இங்கு இல்லை. ஆண் குழந்தைகளுக்கும் பெண் குழந்தைகளுக்கும் பாலின வேறுபாட்டு முன்னுரிமை அளிக்காததுடன் எந்தச் சவாலையும் சந்திப்பதற்கு உரிய தகுதியை அவர்களுக்கு அளிப்பதே பள்ளிக்கூடச் செயல்பாடுகள். எவ்வித ஆண் - பெண் இனப் பிரிவு இல்லை என்பது மட்டுமன்றி, ஆண் - பெண் எனச் சுட்டுவதும் இப்பள்ளிக்கூடங்களில் இல்லை.

## தொடர்ச்செயல்பாடுகள்

1. கேரளச் சமூகத்தில் பாலினப் பாகுபாடுகள் என்ற பொருள் பற்றிக் கலந்துரையாடுக.
2. பௌதிகமாகவோ படைப்பாற்றல் சார்ந்தோ ஆண் - பெண் குழந்தைகளின் இடையே வேறுபாடுகள் உள்ளனவா? கலந்துரையாடுக.
3. வெவ்வேறு துறையில் நிபுணத்துவம் நிலைநாட்டிய மகளிர் பற்றிய தகவல்களைத் திரட்டிக் குறிப்புகள் தயாராக்கவும்.

- உங்கள் நிறுவனத்தைப் பாலின வேறுபாடு பார்க்காத நிறுவனமாக ஆக்குவதற்குரிய செயல்பாடுகளைத் தயாராக்கவும்.
- பெண்களும் பெண் குழந்தைகளும் அனுபவிக்கும் வன்முறைகள் பற்றிய விவரங்களைச் சேகரிக்கவும்.
- பெண் குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கை ஊட்டக் கூடிய செயல்பாடுகளைத் தயாராக்கவும்.
- இன்றைய ஊடகங்களில் விவாதிக்கப்படுகின்ற மகளிர் பிரச்சினைகள் - கலந்துரையாடலை ஒருங்கிணைக்கவும்.
- பெண் குழந்தைகளின் உடல் மாற்றங்கள் தொடர்பான காட்சிப்படுத்துதல்களை மேம்படுத்திக் கலந்துரையாடலை ஒருங்கிணைக்கவும்.
- மாறும் வாழ்க்கைச் சூழலில் குழந்தைகளின் உள்ளம் - உணர்வு - சமூகம் சார் மேம்பாட்டை நிறைவேற்றுவதற்கு உரிய செயல்பாடுகளைத் திட்டமிடுக.
- வீடு, பள்ளிக்கூடம், தொழில் இடம், பொதுச் சமூகம் எனும் இடங்களில் பெண்கள் சந்திக்கின்ற பிரச்சினைகள் எவை? இவற்றைத் தடுக்க நடைமுறையில் உள்ள பெண் - ஆண் சட்டங்கள் எந்த அளவில் பயனுடையன? குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடத்திலும் வீட்டிலும் வெளிப்படையான கருத்துப் பரிமாற்றச் சூழலை ஏற்படுத்துதல் எவ்வாறு எனக் கலந்துரையாடுக.
- வன்முறை, சுரண்டல் என்பனவற்றிற்கு எதிராகச் செய்யாதே எனக் கூறுமாறு பெண் குழந்தைகளுக்கு எவ்வாறு வலுவூட்டலாம்.
- ஆசை வார்த்தைகளில் மயங்காதீர்கள் என்ற வாழ்க்கைத் திறன் மேம்பாடு நிறைவேறுதல் எவ்வாறு?
- ஒருவரின் அந்தரங்கம் அன்னாரின் உரிமை ஆகும். கலந்துரையாடுக.
- இந்தியாவின் மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களை மதிப்பீடு செய்க.
- கேரளாவின் குடும்பஶ்ரீ செயல்பாடுகள் - கலந்துரையாடுக.
- மகளிர் முழுநேர அரசியலில் : பிரச்சினைகளும் தடைகளும் தீர்வு வழிமுறைகளும் கண்டுபிடிக்கவும்.

## பார்வை நூல்கள்


1. ஸ்த்ரீ சமகாலீன சமூகத்தில் (டாக்டர் அசோகன் நொச்சாடு)
2. குடும்ப ஜீவித வித்யாப்யாசம் (கேரள ஸ்டேட் எய்ட்ஸ் கன்ட்ரோல் சொசைட்டி)
3. ஸ்த்ரீ சுரட்சய்க்குள்ள நியமங்ஙள் (கேரள லீகல் அதோரிட்டி)
4. ஸ்த்ரீ நீதி - டாக்டர் வி.எம்.ராஜலட்சுமி (கேரள பாஷா இன்ஸ்ட்டிட்யூட்)
5. Gender School and Society ஶ்ரீலதா. கெ, சங்கரநாராயணன் பாலேரி நீல்கமல் பப்ளிகேஷன்ஸ், ஹைதராபாத்